33° /29°

# உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

பக்கம் 24 | சுடர் 28 | கதிர் 149 | வள்ளுவர் ஆண்டு 2044 | சித்திரை 11, புதன் 24.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

# எதிர்ப்போம்

## காணி பறிப்பை மறுத்து வலி. வடக்கு மக்கள் கொந்தளிப்பு
## 29ஆம் திகதி பெரும் போராட்டத்துக்கும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

''போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை. சொந்தக் காணிகளை விடுவிக்கும் வரையில் நாங்கள் தொடர்ந்து போராடுவோம். எந்தத் தடைகள் வந்தாலும் எதிர்த்துப் போராடுவோம்'' என்று உணர்ச்சிவசப்பட்டுக் கொந்தளிக்கிறார்கள் வலி. வடக்கு மக்கள்.

**காணி பறிமுதல்**

படையினருக்கு முகாம் அமைப்பதற்காக வலி. வடக்கில் 6 ஆயிரம் ஏக்கர் மக்கள் காணிகளைச் சுவீகரிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. 24 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த காணிகளைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

**மக்கள் எதிர்ப்பு**

அரசின் சுவீகரிப்பு நடவடிக்கைக்குத் தாம் இணங்கப் போவதில்லை என்று காணிகளின் உரிமையாளர்கள் கூறுகின்றனர். இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று வலி. வடக்குப் பிரதேச சபையில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டிருந்த மக்கள், கூட்டம் கூடிப் பயனில்லை; இனிச் செயலில் இறங்க வேண்டியதுதான் என்று உணர்ச்சிவசப்பட்டுக் கொந்தளித்தனர் என அங்கிருந்த 'உதயன்' செய்தியாளர் கூறுகின்றார்.


நிலமீட்புப் போராட்டத்துக்குத் தயாராகும் படை.

> நிலம் இல்லாமல் இருந்து என்ன செய்யப் போகிறோம்? செத்தாலும் பரவாயில்லை போராட்டம் நடத்தி ஒரு முடிவைக் காண வேண்டும்.

**கூறப்பட்ட பொய்**

''காணி சுவீகரிப்புத் தொடர்பில் ஒட்டப்பட்டுள்ள அறிவித்தலில், காணி உரிமையாளர் இணங்காணப்படவில்லை என்று கூறப்பட்டிருப்பது முழுப் பொய். நாங்கள் இங்கேதான் இருக்கிறோம்; எங்கேயும் செல்லவில்லை'' என்று மக்கள் தெரிவித்தனர்.

**தொடர் போராட்டம்**

''நிலம் இல்லாமல் இருந்து என்ன செய்யப் போகிறோம்? செத்தாலும் பரவாயில்லை போராட்டம் நடத்தி ஒரு முடிவைக் காணவேண்டும். ஒரு நாளில் கூடிக் கலையும் போராட்டமாக இல்லாமல் முடிவு தெரியும் வரை தொடர் போராட்டம் நடத்தவேண்டும்'' என்று அவர்கள் ஆத்திரப்பட்டுக் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை முடக்கி மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

காணி சுவீகரிப்பைக் கைவிடக் கோரியும் தமது சொந்தக் காணிகளைத் தம்மிடமே திரும்பி ஒப்படைக்கக் கோரியும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நில ஆக்கிரமிப்பை எதிர்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை காலை யாழ். செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

மேலும் : பக். 03

## காணிகளை இனங்காண நாளை முதல் அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்.24

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் மக்கள் நாளை வியாழக்கிழமை முதல் படையினருடன் அனுமதிக்கப்படவுள்ளனர்.



சுவீகரிக்கப்படவுள்ள காணிகளை அடையாளப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட செயலக காணி மற்றும் காணி

தொடர்ச்சி: பக்.02

## மீண்டும் இனப்போர் வெடிக்கும் அபாயம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.24

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்வதை கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.



இன ஒற்றுமையை சீர் குலைக்கும் இனவாதக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு அரசு விரைவில் முற்றுப்புள்ளி வைக்காவிடின் மீண்டுமொரு பெரும் இனப்போர் வெடிக்கும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா.

முல்லைத்தீவு, முள்ளியவளையில் தமிழ் மக்களின் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ரீதியில் தமது சுயநிர்ணய உரிமையைக் கேட்டுப் போராட்டம் நடத்திவரும் மக்கள் மீது இனியும் இவ்வாறான சீண்டிப் பார்க்கும் மிலேச்சத்தனமான சம்பவங்கள் தொடர்ந்தால் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை உருவாகும் என்றும் மாவை சேனாதிராஜா கூறினார்.

(த-சி)

## ஊடகவியலாளர் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்துக

### இலங்கையிடம் கோருகிறது பிரிட்டன்

லண்டன் ஏப், 24



இலங்கையில் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதுடன் கருத்துச் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசிடம் கோரியுள்ளது பிரிட்டன்.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அண்மைக் காலத்தில் ஊடகவியலாளர் பலர் தாக்கப்பட்டுள்ள சம்பவங்களைக் கருத்தில் கொண்டு பிரிட்டன் தொடர்ச்சியாக ஆழ்ந்த

தொடர்ச்சி: பக்.02

## வடக்கில் தேர்தல் வேண்டாம்



கொழும்பு, ஏப்.24

செப்ரெம்பர் மாதம் வடக்குத் தேர்தலை நடத்துவதற்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்களிடம் பேசிய அமைச்சர் வீரவன்ஸ, வடக்கு மாகாண சபைத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளைப் பலப்படுத்திவிடும். அவர்கள், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களையும் கேட்கத் துணிந்து விடுவார்கள் என்று கூறினார். (த-ப)

உலகம் 5


பொஸ்டன்: அஞ்சலி

உள்ளூர் 7


பாதையா பாலைவனமா?

விளையாட்டு 16


கெயில் அதிரடி

## கருணாநிதி வலியுறுத்தல்



சென்னை, ஏப்.24

பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது என்று பொதுநலவாயக் குழுவிடம் தி.மு.க தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

தனது கோரிக்கையை ஏற்று அதனைச் செயற்படுத்துமாறும் அவர் கோரியுள்ளார். (த)

# பொதுநலவாயக் கண்காணிப்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தல்

## கமலேஷ் சர்மாவிடம் ஐ.தே.க. கோரும்

கொழும்பு, ஏப்.24

பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களின் கண்காணிப்பின்கீழ் வடக்குத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று அதன் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவிடம் தாம் கோரிக்கை விடுக்கவுள்ளதுடன், தேர்தல்கள் ஆணையாளரிடமும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

அரசு தெற்கில் ஆடிவரும் விளையாட்டுகளை வடக்கில் ஆடமுடியாது. ஏனெனில், வடக்குத் தேர்தலை சர்வதேசமும் அவதானித்து வருகிறது. இவ்வாறான நிலையில், அந்தத் தேர்தலை நடத்துவது குறித்து நாம் அரசிடம் முன்வைத்துள்ள மூன்று நிபந்தனைகளையும் அது ஏற்காவிட்டால், தேர்தல் நடத்தப்படுவதென்பது பொய்யானதாகிவிடும் என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்குத் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் நாம் ஏற்கனவே அரசிடம் முன்வைத்துள்ள மூன்று நிபந்தனைகளையும் அது ஏற்றுக்கொள்ள வேண்டும். சுயாதீன பொலிஸ், தேர்தல் திணைக்களங்களை அரசு நிறுவியாகவேண்டும். இல்லாவிட்டால், வடக்குத் தேர்தலை சுயாதீனமாக நடத்தமுடியாது.

வடக்கில் 'உதயன்' பத்திரிகை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நடத்தும் கூட்டங்களின் மீதும் தாக்குதல் நடத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும் வடக்கில் சிவில் ஆளுநர் உடனடியாக நியமிக்கப்படவேண்டும். ஏனெனில், தற்போதைய ஆளுநர் வடக்கில் சிவில் ஆட்சியை நிறுவ நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

அடுத்ததாக, பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களின் கண்காணிப்பில் கீழ் வடக்குத் தேர்தல் நடத்தப்படவேண்டும். இந்த மூன்று நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு அரசு வடக்குத் தேர்தலை நடத்தவேண்டும். இல்லாவிட்டால் அங்கு நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் நடக்காது.

தெற்கில் நடத்தப்படும் தேர்தல்களில் அரசு விளையாட்டுக் காட்டுவதுபோல வடக்கில் விளையாட்டு ஆடமுடியாது. ஏனெனில், வடக்குத் தேர்தலை அரசு எப்படி நடத்தப் போகிறது என்பதை சர்வதேச நாடுகள் அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

இதனால் வடக்குத் தேர்தல் பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களின் கண்காணிப்பின்கீழ் நடத்தப்படவேண்டும் என்று அதன் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவிடம் நாம் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கவுள்ளோம். அத்துடன், தேர்தல்கள் ஆணையாளரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளோம். எமது கட்சியின் வடக்கு பயணம் முடிவடைந்த பின்னர் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் தயாராகவுள்ளோம்.

வடக்குத் தேர்தலுக்கு நாம் தயாராகவுள்ளோம். நாளை 25ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் உள்ளிட்ட பகுதிகளுக்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு பயணம் செய்யவுள்ளது - என்றார். (த-சி)

## மின்சாரக் கட்டண அதிகரிப்பு பட்டியல் இதுவரை இல்லை

### குடாநாட்டு பாவனையாளர் சிரமத்தில்



யாழ்ப்பாணம், ஏப் 24

குடாநாட்டு மின் பாவனையாளர்களுக்கான மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பான விவரப் பட்டியல் இதுவரை யாழ். மாவட்ட மின்சார சபை அலுவலகத்துக்கு வந்து சேரவில்லை.

இதனால் கட்டணம் அதிகரிப்புத் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ள முடியாமல் குடாநாட்டு மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தக் கூடியவாறு மின்சாரக் கட்டணத்தை 26 வீதத்தால் அதிகரிக்க பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு மின்சார சபைக்கு அனுமதி வழங்கியிருந்தது. இந்த நிலையில் மே மாதம் முதல் புதிய திருத்தங்களுடன் மின் பட்டியல் பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்திருந்தது.

ஆயினும் புதிய மின்சாரக் கட்டணம் தொடர்பாக யாழ். குடாநாட்டு மின் பாவனையாளர்களுக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இதனால் குடாநாட்டு மின் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிரதேச மின் பொறியியலாளர் என். ஞானகணேசனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது :-

மின் கட்டண அதிகரிப்பைக் கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளபோதும் மின் கட்டண அதிகரிப்புக்கான விவரப்பட்டியலை இதுவரை எமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றார். (த-14)

## ரூபா பெறுமதி வீழ்ச்சியினால் படுகடன் உயர்வு

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியால் இலங்கையின் மொத்தக் கடன் தொகை உயர்வடைந்துள்ளது.

முக்கியமாக வெளிநாட்டு நாணயங்களுடன் ஒப்பீடு செய்யும்போது ரூபாவின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக 2012 ஆம் ஆண்டில் மொத்தக்கடன் 20,700 கோடி ரூபாவால் உயர்வடைந்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தக்கடன் 5 இலட்சத்து 13 ஆயிரத்து 300 கோடி ரூபாவாகக் காணப்பட்டதாகவும், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியால் இந்தத் தொகை 2012 ஆம் ஆண்டில் 6 இலட்சம் கோடி ரூபாவாக உயர்வடைந்துள்ளது. கடன் தொகை 17 வீதமாக அதிகரித்துள்ளது.

மொத்த தேசிய உற்பத்தியின் 79 வீதத்தினால் கடன் தொகை உயர்வடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வடக்கில் முஸ்லிம் குடியேற்றம் மனிதாபிமானத்துடன் அணுகுக

### முள்ளியவளை சம்பவத்துக்கும் தனக்கும் தொடர்பில்லை என்கிறார் ரிஷாத்

கொழும்பு,ஏப்.24

வட மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு எதிராக செயற்படும் அனைவரும் அதிலிருந்து விடுபட்டு இந்த விவகாரத்தை மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் கேட்டுக் கொண்டுள்ளார்.

முள்ளியவளையில் தமிழ்மக்களின் குடிசைகள் எரியூட்டப்பட்ட சம்பவத்துடன் என்னை தொடர்புபடுத்துவதை வன்மையாக கண்டிப்பதாகவும் அமைச்சர் ரிஷாத் குறிப்பிட்டார்.

அமைச்சில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களுக்கு காணிகளை பகிர்ந்தளிக்கும் அதிகாரம் காணி அமைச்சருக்கே இருக்கின்றது. எனக்கு காணிகள் வழங்கும் அதிகாரமில்லை வட மாகாணத்திலுள்ள காணிகளை வழங்கும் அதிகாரம் எனக்கு ஒருபோதும் வழங்கப்படவுமில்லை.

முஸ்லிம்களுக்கு நான் காணிகளைப் பகிர்ந்தளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்மீது போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

வட மாகாணத்தில் பொது மக்களுக்குக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் அதிகாரம் அரசால் எனக்கு வழங்கப்படவில்லை. நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 9ஆவது சரத்தின் 113ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய குழுவொன்றை அமைத்தே வடக்கில் காணிகள் வழங்கப்படுகின்றன.

மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தலைமையிலான இந்தக் குழுவில் ஜனாதிபதி செயலணியின் பிரதிநிதிகள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இந்தக் குழுவின் சிபாரிசுக்கு அமையவே அங்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. படையினரின் முகாமாகவும் விடுதலை புலிகளினால் பகிர்ந்தளிக்கப்பட்டும் காடாகக் காணப்பட்டமையினால் வனத்திணைக்களத்தினால் காடாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சிரமங்களுக்கு மத்தியிலேயே முஸ்லிம்கள் வடக்கில் மீள் குடியேற்றப்படுகின்றனர்'' என்றார். -என்றார். (த-சி)

## அனுமதியுடன் மணல் ஏற்றிய ஒன்பது 'டிராக்டர்கள்' பறிமுதல்

### முல்லைத்தீவு வீட்டுத் திட்ட மக்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஏப்.24

பிரதேச செயலரின் அனுமதியுடன் மணல் ஏற்றிய 9 'டிராக்டர்கள்' வன பரிபாலனத் திணைக்களத்தினரால் நேற்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் பிடிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத் திட்டப் பணிகளுக்கு மணல் பெற்றுக்கொள்வதற் காகப் பிரதேச செயலகங்களினால் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. இந்த அனுமதியோடு ஆற்று மணல் அள்ளும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலரினால் வழங்கப்பட்ட அனுமதியுடன் கொண்டமடு ஆற்றுப் பகுதியில் மணல் அள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

வழமை போன்று மணல் அள்ளிய 9 'டராக்டர்கள்'களை, வன பரிபாலன திணைக்களத் தினர் பிடித்துச் சென்றனர். தமது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் தமது அனு மதியைப் பெறாமல் மணல் அள்ளிய தற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொண் டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த ஆற்றுப்பகுதியில் தனி நபர் ஒருவர் வனபரிபாலன திணைக்களத்தின் அனுமதியுடன் மணல் அள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார். குறித்த நபர் அந்தப் பகுதியில் பிரதேச செயலரின் அனுமதியுடன் மணல் அள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஏனையோருடன் முரண்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பின்னணியிலேயே மணல் ஏற்றிய 9 டிராக்டர்களும் வன பரிபாலனத் திணைக்களத்தால் பிடிக்கப்பட்டுள்ளன. (த-5)

## காணிகளை இனங்காண நாளை முதல் அனுமதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி அமைச்சு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வலி. வடக்கு மற்றும் வலி. கிழக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட 27 கிராம சேவையாளர் பிரிவுகள் படை முகாம்களை அமைப்பதற்கான சுவீகரிப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் கடந்த இரண்டு தினங்களாக உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் ஒட்டப்பட்டன.

இந்த அறிவித்தல்களில் காணி உரிமையாளர்கள் என்பது இனங்காணப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் படையினரால் சுவீகரிக்கப்படவுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் நாளை வியாழக்கிழமை முதல் அங்கு செல்ல அனுமதிக்கப்படவுள்ளனர்.

கிழமை நாள்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை மக்கள் உயர் பாதுகாப்பு வலய்பபகுதிகளினுள் செல்ல முடியும்.

மாவிட்டபுரம் சந்தியிலுள்ள 515 பிரிகேட்டின் தற்காலிக இராணுவ சோதனைச் சாவடியில், காணி உறுதிப் பத்திரங்கள் தேசிய



அடையாள அட்டை என்பவற்றைச் சமர்ப்பித்து அதன் பின்னர் ஒவ்வொருவரும் ஒரு படைச் சிப்பாய் சகிதம் உள்ளே அனுமதிக்கப்படுவார்கள்.

சுவீகரிக்கப்படும் காணிகளின் உரிமையாளர்களை இனங்காணும் பொருட்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## ஊடகவியலாளர் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்துக

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவலைபடைத்துள்ளதாக என்று பிரிட்டிஷ் வெளியுறவு அலுவலக அமைச்சர் அலிஸ்ரயர் பேர்ட் தெரிவித்துள்ளார்.

2012 நவம்பரில் ஜெனிவா பருவ கால மீளாய்வின் போது, இலங்கை மக்கள் அனைவரும் தம் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுவதை உறுதி செய்யும்மாறும் எதிர் தாக்குதல் நடத்தப்படும் என்ற பயமின்றி தமது கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் சுதந்திரமாக வெளியிட வசதி செய்யப்பட வேண்டும். என்றும் பிரிட்டன் இலங்கைக்கு யோசனை கூறியிருந்தது. அத்துடன் மனித உரிமைகள் சபையின் கருத்து சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாடு தொடர்பான அறிக்கையாளரை



இலங்கைக்கு அழைக்குமாறும் அழைப்பு விடுக்கும் படியும் இலங்கையை பிரிட்டன் கேட்டுக்கொண்டது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தப் பரிந்துரையை இலங்கை அரசு நிராகரித்து விட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமை சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவை தொடர்பான கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும். இதில் ஊடகவியலாளர்களின் பத்திரமான பாதுகாப்பும் அடங்கும் என்று பிரிட்டிஷ் அமைச்சர் கூறினார். (ப)

## கலைப்பீட மாணவர் ஒன்றிய தெரிவில் இழுபறி

யாழ். பல்கலைக் கழக கலைபீட மாணவர் ஒன்றியத் தலைவரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. இதில் போட்டியிட்ட இரு மாணவர்களுக்கும் 307 வாக்குகள் கிடைத்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் தெரிவு செய்யப்படவில்லை.

இருவரின் வாக்கு எண்ணிக்கையும் சமப்பட்டது. இருவரும் சம வாக்குகள் பெற்றதால் மீண்டும் ஒருமுறை வாக்கெடுப்பு நடத்தித் தலைவரைத் தெரிவு செய்வது என தற்போதுள்ள ஒன்றியம் தீர்மானித்துள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர். (ஐ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# எதிரிக்குப் பலம் ஊட்டுவதற்கு எம்மிடையே பிளவு வேண்டாம்

வாழ்வியலிலும் அரசியலிலும் வலுவிழந்து போகும் துரதிர்ஷ்ட நிலைக்கு ஆளாகிய ஈழத்தமிழ் மக்களுக்கு, ஒளிக்கதிராக விளங்கவல்ல ஓர் அரசியல் சக்தி தேவைப்பட்ட காலம் அது. போர் முடிவுக்கு வந்த பதினொரு மாதங்களில், நாட்டின் ஏனைய பிரதேசங்கள் போன்று வடக்கு, கிழக்கிலும் ஜனநாயக ஆட்சி முறைக்கான பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது.

தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட அவர்களின் ஜனநாயக மற்றும் பிறப்புரிமைகளை வென்றெடுப்பதற்கு பலம் வாய்ந்த சக்தி ஒன்று தேவை என்பது மிகப் பரந்த அளவில் உணரப்பட்டது. அதன் விளைவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மொத்தம் பதின்னான்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனால், போரின் போது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அனைத்துலக நாடுகளுக்கு விரித்து, விவரித்து எடுத்துக்காட்ட முடிந்தது. நியாயம் கேட்டுக் குரல் எழுப்பவும் இயன்றது.

அது மட்டுமன்றி அரசியலில் தேவையான கட்டுறுதி தளிர்த்தது. தமிழ் அரசியல் தலைமைத்துவத்தின் குரலுக்கு அனைத்துலக நாடுகள் மதிப்பளித்து உதவும் நிலையும் உருவாகியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஒட்டுமொத்தக் குரல் என்ற நிலையும் உதித்தது. ஆனால் அதனைச் சிதைக்கும் வகையில் த.தே.கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் சில குரல் கொடுப்பது பெரும் ஆபத்துக்கான குறிகாட்டுவதாக அமைந்துள்ளது. இது ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் அச்சத்தையும் ஊட்டி உள்ளது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னர், அகில இலங்கை மட்டத்தில் தமிழ் மக்கள் நலன் கருதி உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பலம் மிகுந்திருந்த கூட்டு அமைப்பு உடைந்ததனை நினைவுக்குக் கொண்டுவருகிறது. வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழ் மக்களின் ஒற்றுமையின் ஒரு பகுதி துண்டானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து விடுவதற்கான வேண்டாத விதைகள் துளிர்க்க இடங்கொடுக்கலாகாது என்பதற்கு அதனை முன்னுதாரணமாகக் கொள்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் முன்வரவேண்டிய வேளை இது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டுவிடுமோ என்ற அச்ச உணர்வு தமிழ் மக்கள் மத்தியில் இனந் தெரியாத ஏக்கத்தை உண்டாக்கி இருப்பதனை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்தாக வேண்டும்.

வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை தற்போது உருவாகியிருப்பதாகவும் அதற்கான பின்புலம் ஏற்பட்டிருப்பதாகவும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலரிமாளிகையில் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் தெரிவித்தமை, எமக்குள் உருவாகி உள்ள பிளவு முயற்சியை முன்வைத்துத்தானோ என்று சந்தேகமுற வைக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதியும் கோரிக்கை இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. குறிப்பிடத்தக்க காலமாக எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால், வடமாகாணசபைத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் இந்த விவகாரம் சூடுபிடிப்பது எந்த வகையிலும் வழியிலும் ஒவ்வாதது என்பதனை மக்கள் சார்பில் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யும் பிரச்சினையில் இணக்கப்பாடு ஏற்படாதமையும், முரண்பாடு அதிகரிப்பதும், மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு சுயேச்சையாகப் போட்டியிட வேண்டும் என்று கருத்து வெளியிடப்படுவதும் நல்ல அறிகுறிகள் அல்ல. எதிரிக்கே இது உதவப்போகிறது.

இரா .சம்பந்தன் 'தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001 பொதுத் தேர்தலின்போது உருவாக்கப்பட்டது. இதில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய நான்கு கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனியான அரசியல் கட்சியாகப் பதியவேண்டும் என்ற தமது நிலைப்பாட்டில் மிகவும் இறுக்கமாக இருந்து வருகின்றன. ஆனால் தமிழரசுக்கட்சி மறுத்து வருகிறது. கூட்டமைப்பு மூலம் தமிழரசுக்கட்சி தன்னை வளர்த்துக்கொள்கிறது என்பது ஏனைய கட்சிகளின் குற்றச்சாட்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தலைமைக் கட்சியான இலங்கைத் தமிழரசுக்கட்சி நீண்ட வரலாறு கொண்டது. 1949இல் தமிழ்க்காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்று தந்தை செல்வாவினால் இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. பிற்காலத்தில் கோப்பாய் கோமகன் என்று அழைக்கப்பட்ட வன்னியசிங்கம், இரும்புமனிதர் ஈ.எம்.வி. நாகநாதன் இதன் ஆரம்பகால உறுப்பினர்கள். இக்கட்சி தமிழ் மக்களுக்காகச் செய்த தியாகங்களை மறக்கமுடியாது. இக்கட்சியின் பெயரும் அதன் வீட்டுச் சின்னமும் தமிழ் மக்களின் இதயங்களில் நீங்காத இடம்பிடித்துள்ளன. ஆகவே, தற்பொழுதுள்ள ஒற்றுமையை சிதைந்துபோகாது கட்டிக்காக்கும் வரலாற்றுக் கடமை இக்கட்சிக்கு உண்டு.

கடந்த பொதுத்தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல்களில் கூட்டமைப்பு ஈட்டிய அமோக வெற்றிகள், கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்கள் அடைந்த தோல்விகள், போரின் பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கையாள்வதற்குப் பலம்வாய்ந்த ஓர் அரசியல் அமைப்பு இருக்கவேண்டியதன் அவசியத்தை கூர்மையாக வெளிப்படுத்துகின்றன. எதிரி மிகவும் விழிப்பாக இருக்கிறான்; சந்தர்ப்பம் பார்த்துத் தள்ளி விழுத்தக் காத்திருக்கும் வேளை இது என்பதை மறந்துவிடக்கூடாது.

# இனியும் பயந்து ஒதுங்காமல் தொடர்ச்சியாகப் போராடுவோம்

## வலி.வடக்கு மக்களை அழைக்கிறார் சிறீதரன்



யாழ்ப்பாணம், ஏப். 24

''இனியும் பயந்து ஒதுங்கி ஒதுங்கிப் போவதில் பிரயோசனமில்லை. நாங்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்த வேண்டும். எங்கள் நிலத்தை விடுவிப்பதன் மூலமே தமிழர்கள் என்ற எமது இருப்பை உறுதிப்படுத்த முடியும்.''

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் மக்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசு பௌத்த-சிங்கள மேலாதிக்க சிந்தனையோடு தமிழ் மக்களைச் சொந்த நிலங்களிலிருந்து எப்படி வெளியேற்றலாமோ அதனைச் செய்து வருகின்றது. இலங்கையில் தமிழர்கள் என்ற இனமே இருக்கக்கூடாது என்பதற்காக அதனை அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மொழி ரீதியாக, கலை பண்பாட்டு ரீதியாக இனத்தை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு வடிவமாகத்தான் காணிகளைப் பறிக்கின்றது. எமது இருப்பைத் தீர்மானிப்பதில் நிலம் முக்கியமானது. நிலமில்லாமல் நாங்கள் போராடவும் முடியாது. பேசவும் முடியாது.

நிலங்களைப் பறிப்பதும் அகதிகளாக்குவதும் இன சுத்திகரிப்பின் ஓர் அங்கமே. இந்த நிலப்பரப்பு வெறுமனே அரசியலுக்காகக் கதைக்கும் விடயமல்ல. மக்களின் உணர்வுகளோடு சம்பந்தப்பட்ட ஒரு விடயம்.

இலங்கை அரசு போர் நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தது. தமிழ் மக்களின் நிலங்களைப் பறித்து அந்த நிலங்களில் தமிழர்களை அந்நியப்படுத்தி, அந்தப் பகுதிகளில் ராணுவக் குடியேற்றங்களை நிறுவி தமிழர்களின் இன விகிதாசாரத்தை மாற்றியமைத்து முழுமையான இனச் சுத்திகரிப்பு மேற்கொள்வதற்காகவே.

என்னுடைய வீட்டுக்குப் பிரச்சினையில்லை என்று மற்றவர்கள் நினைக்கக்கூடாது. இது தனியே வலி.வடக்கு மக்களின் பிரச்சினையன்று. நாளைக்கே மல்லாகத்தில், சுன்னாகத்தில் இராணுவத்தினர் காணிகளைப் பறிக்கலாம். எனவே யாழ்ப்பாணத்திலுள்ள புத்திஜீவிகள், சிவில் சமூகத்தினர், சமய நிறுவனங்கள், வர்த்தகர்கள் என எல்லோரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

இலங்கை நாடாளுமன்றத்திலும் நீதியில்லை. சிங்கள இனவாத அரசு தமிழர்களுக்கு ஒருபோதும் நீதி வழங்கப் போவதில்லை.

எனவே இலங்கை என்ற நாட்டில் எங்களையும் தமது நாட்டின் பிரஜைகளாகக் கருதி எங்களது இடங்களுக்கு இலங்கை அரசு விட வேண்டும். இல்லையேல் நாங்கள் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை- என்றார். (த-5-86)

# எட்டு மாதங்கள் கடந்தும் பேசாமல் இருக்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஏப்.24

மூன்று மாதங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் டக்ளஸ் எட்டு மாதங்கள் கடந்தும் அது தொடர்பில் பேச்சு மூச்சில்லாமல் இருக்கிறார். எங்கள் காணிகள் பறிப்பதற்கான அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் எங்களை எங்கே கொண்டு சென்று மீள்குடியமர்த்தப் போகிறார் என்று வலி.வடக்கு மக்கள் நேற்றுக் கேள்வியெழுப்பினர்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட விடுவிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்கள், தமது பிரதேசங்கள் நிரந்தரமாக இராணுவத்தினரால் பறிக்கப்படவுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளமை தொடர்பில் அமைச்சரிடம் கேட்டனர்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஊடகங்களில் வெளியான செய்திகளை நம்ப வேண்டாம். இன்னும் 3 மாதங்களில் அந்தப் பகுதிகள் விடுவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்படித் தெரிவித்து 8 மாதங்கள் கடந்த நிலையில் இன்னமும எந்தவொரு பகுதியும் விடுவிக்கப்படவில்லை. மாறாக அந்தப் பகுதிகளை நிரந்தரமாகச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

''மூன்று மாதங்களில் விடுவிக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார். எங்கள் பகுதிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் பொருட்டு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன. இனி எங்களை எங்கே கொண்டு சென்றுமீளக் குடியமர்த்தப் போகின்றனர் என ஆவேசமாகக் கேட்டனர் வலி.வடக்கு மக்கள். (த-5)

# எரிபொருள் நிலைய பணியாளருக்கு திடீர் தீயை அணைக்கும் பயிற்சி



“ எரிபொருள் விற்பனை நிலையங்களில் தீ விபத்துக்கள் இடம்பெற்றால் அதனை அணைப்பதற்கு தீயணைக்கும் கருவிகள் எந்த நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்.குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் தீயணைப்புக் கருவிகளை பயன்படுத்துவது தொடர்பான பயிற்சி ஒன்று நேற்று செவ்வாய்க் கிழமை வீரசிங்கம் மண்டப முன்றிலில் இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் விற்பனை நிலையங்களின் பணியாளர்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் திடீரெனத் தீ விபத்து இடம் பெற்றால் உடனடியாக அதனைத் தீயணைப்புக் கருவி மூலம் கட் டுப்படுத்துவது குறித்து விரிவான பயிற்சிகள் எரிபொருள் விற்பனை நிலையப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

''பயர் டிராப்ற்' நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் டபிள்யூ.எஸ்.எஸ்.கே.ஜெயவர்த்தன இந்தப் பயிற்சிகளை வழங்கினார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடமாகாண முகாமையாளர் வி.சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், கூட்டுறவுச் சபை தலைவர் ராஜாராம் மற்றும் அதிகாரிகள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் தீ விபத்துக்கள் இடம்பெற்றால் அதனை அணைப்பதற்கு தீயணைக்கும் கருவிகள் எந்த நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் ஜெயவர்த்தன கூறினார். (த-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 24 . 10 . 1940

விண்ணில் 25 . 03 . 2013



### அமரர் நாகன் கந்தையா

25.03.2013 அன்று சிவபதமடைந்த ஓய்வு நிலை அதிபரும், சமூக சேவையாளருமாகிய அமரர் நாகன் கந்தையா அவர்களின் 31ஆம் நாள் நிகழ்வுகள் இன்று (24.04.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுவதால் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு.

வே.குணரத்தினம்
(மைத்துனர் - நோர்வே)

(C/9383) (10.6.7)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர்
நா. சிறீகரன்
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர் பூதப்பிள்ளை
நாகலிங்கம்
அவர்கள் 22.04.2013 அன்று
இறைபதம் எய்தியதையிட்டு
அன்னாரின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆசிரிய சகோதரத்துவம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(c/9270)(6.7.11)

## மாதாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.24 யாழ்.மாநகர சபையின் ஏப்ரல் மாத பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அங்கத்தவர்களைக் கலந்துகொள்ளுமாறு செயலாளர் சி.தா.தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (ஓ-16)

### YAMAHA FAZER

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு.
கொள்வனவு செய்து 4 மாதங்களே ஆனது.
ஸ்ரிங் வசதியுள்ளது.
தொடர்பு:
077 736 3777

(F/36339)(5-6-7)

### கார் விற்பனைக்கு

14xxxx
தொடரிலக்கம் உடைய மிற்சுபிசி கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0773564950

(F/36338)(5-6-7)



## விசேட அறிவித்தல்

### ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
### மகா சபைக் கூட்டம் 2013

தீர்மானித்த படி இன்று (24.04.2013) புதன்கிழமை (தேர்த்திருவிழா) மாலை 4.30 மணிக்கு மகாசபைக் கூட்டம் ஆலய மணி மண்டபத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆலய பரிபாலன
தர்மகர்த்தா சபை
செயலாளர்
செ.யுகேந்திரன்.

(36333)(6.7.11)

## மரண அறிவித்தல்

# சின்னத்தம்பு ஏகாம்பரம்



முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பு ஏகாம்பரம் (21.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான இராசமணி-கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மனோகரன்(UK), பாஸ்கரன்(UK),அன்புக்கரன்(UK), சத்தியவாணி(ஜேர்மனி),பிரபாகரன்(பிரான்ஸ்),வசீகரன் (ஆஸ்திரேலியா),சந்திரவாணி(பிரான்ஸ்), சுகிர்தவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலநாதன்(ஜேர்மனி),சத்தியவாணி (UK), ராகினி (UK),வித்யா(UK),வாசுகி (பிரான்ஸ்),பிரகாசினி (ஆஸ்திரேலியா), மதிஸ்வரன்(பிரான்ஸ்), உதயன் (UK) ஆகியோரின் மாமனாரும், பிரியந், சுவேதா, பிரவிந்,ரிசாந், வியூசாந், வர்சி, சிந்தியா,சந்தியா,ஆகாஸ்,விதுஷா, ஹரிணி,மிதுஸ்,திவ்யா, காவியா,விகாஸ்,விசால், அகிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, வைரவநாதன் மற்றும் திருநாவுக்கரசு(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான காந்தி,இந்திரா, சங்கரப்பிள்ளை, கணபதிப்பிள்ளை மற்றும் திலகம்(ஜேர்மனி), சிறி,கிளி (இந்தியா),கருணா(சுவிஸ்), செல்லம்மாஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.04.2013) புதன்கிழமை பி.ப. ஒருமணியளவில் அல்லைப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(36335)(5.6.7)

# இராணுவத் தாக்குதலில் சிரியாவில் 80 பேர் சாவு



டமஸ்கஸ், ஏப்.24
சிரியாவில் ஜியாடெட் அல் பத்ல் என்ற நகரைச் சுற்றி வளைத்து அரச படைகள் மேற்கொண்டு வரும் தாக்குதல்களில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட 80 பேர் உயிரிழந்துள்ளனர்.
கடந்த 5 நாள்களாக அரச படைகள் அந்த நகரைச் சுற்றி வளைத்துத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். டமஸ்கஸின் தெற்குப் பகுதியில் புரட்சியாளர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சிரிய அரச படைகள் இந்தத் தாக்குதலை நடத்தி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.
தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தாக்குதல்களால் அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள சரியான உயிரிழப்புகள் குறித்த தகவல்களைப் பெற முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ள மனித உரிமை அமைப்புகள் 250இக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று தாம் நம்புவதாகவும் தெரிவிக்கின்றன.
சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாக இதுவரை 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# விஷ வாயுத் தாக்குதல்

## மாணவிகள் 74 பேர் கடும் பாதிப்பு

காபூல், ஏப்.24
பெண்கள் பாடசாலை ஒன்றின் மீது தலிபான்களால் நடத்தப்பட்ட விஷவாயுத் தாக்குதலில் 74 மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆப்கனின் தலுகான் நகரிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

**பெண்களுக்கு தடை**

ஆப்கனில் தலிபான்கள் ஆட்சியில் இருந்தபோது பெண்கள் பாடசாலை செல்வது தொடர்பில் கடும் கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர். பெண்கள் பர்தா அணியாமல் வீட்டை விட்டு வெளியே செல்லக் கூடாது, பெண்கள் பாடசாலை செல்லக் கூடாது போன்ற தடைகள் நடைமுறையில் இருந்தன. பின்னர் அமெரிக்கத் தலையீட்டால் தலிபான்கள் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் இவ்வாறான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டிருந்தன. எனினும் தற்போதும் பெண்கள் பாடசாலை செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் தலிபான் அமைப்பு பெண்கள் பாடசாலைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. அதனால் ஏறத்தாழ 550 பெண்கள் பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் மூடப்பட்டுள்ளன.

**விஷவாயுத் தாக்குதல்**

இந்த நிலையிலேயே தலுகான் நகரில் பீவி ஹவா உயர்நிலைப் பாடசாலையில் பரவிய விஷ வாயுவால் பல மாணவிகள் மயக்கமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விஷ வாயு தலிபான்களால் திட்டமிடப்பட்டு பாடசாலைக்குள் பரவவிடப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. 74 மாணவிகள் பாதிப்புகளுக்குள்ளாகிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர்களில் சிலரின் நிலைமை மோசமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கூறுகின்றன. (ற)

■ கடந்த ஆண்டு பாடசாலை குடிதண்ணீர்த் தொட்டியில் விஷம் கலக்கப்பட்டதில் 700 மாணவிகள் பாதிக்கப்பட்டனர்.



■ சில மாதங்களுக்கு முன்னர் ஆண்கள் பாடசாலை மீது நடத்தப்பட்ட விஷ வாயுத் தாக்குதலில் 200 பேர் பாதிக்கப்பட்டனர்.

# 'ஸ்கட்' ரக ஏவுகணைகளை நிலைநிறுத்துகிறது வடகொரியா

## குற்றஞ்சாட்டுகிறது தென்கொரியா

சியோல், ஏப்.24
வடகொரியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் மேலும் இரண்டு ஏவுகணைகளை வடகொரியா நிலைநிறுத்தியுள்ளது என்று தென்கொரியா தெரிவித்துள்ளது.
வட கொரியாவின் ஒவ்வொரு அசைவையும் அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரியா தீவிரமாக கண்காணித்து வருகின்றது. இந்த நிலையிலேயே வடகொரியா ''ஸ்கட்' ரக ஏவுகணைகளை ஹேம்கியாங் பகுதி யில் நிலை நிறுத்தியுள்ளது என்று தென்கொரியா தெரிவித்துள்ளது.
வடகொரியாவின் நிறுவுநர் கிம் ஜீ ஜீங்கின் பிறந்த தினமான ஏப்ரல் 15ஆம் திகதி வடகொரியா தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்று தென்கொரியா எதிர்பார்த்திருந்தது. எனினும் அவ்வாறு எதுவும் நிகழவில்லை. இந்தநிலையில் தென்கொரியாவிலிருந்து பிரிந்து வடகொரியாவின் இரா ணுவம் உருவாக்கப்பட்ட அமைக்கப்பட்ட நாள் ஏப்ரல் 25ஆம் திகதியாகும். எனவே அந்தநாளில் வடகொரியா தாக்குதல்களை ஆரம்பிக்கக்கூடும் என்று தென்கொரியா எதிர்பார்க்கிறது. (ற)

# பங்களாதேஷ் ஜனாதிபதியாக அப்துல் ஹமீட்



டாக்கா, ஏப்.24
பங்களாதேஷின் புதிய ஜனாதிபதியாக அப்துல் ஹமீட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
பங்களாதேஷின் ஜனாதிபதி ஸில்லியுர் ரஹ்மான் கடந்த மாதம் உயிரிழந்ததை அடுத்து வேறு எவரும் குறித்த பதவிக்கு பரிந்துரைக்கப்படாத நிலையில் புதிய ஜனாதிபதியாக அப்துல் ஹமீட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
பங்களாதேஷின் 20 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அப்துல் ஹமீட், அந்நாட்டு நாடாளுமன்றத்தின் சபாநாயகர் என்பது குறிப்பிடத்தக்கது.
அத்துடன் முன்னாள் ஜனாதிபதி ஸில்லியுர் ரஹ்மான் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றதன் பின்னர் அப்துல் ஹமிட் பதில் ஜனாதிபதியாக செயற்பட்டிருந்தார். (ற)

# மியன்மார் மீதான தடைகள் நீக்கம்

## ஐரோப்பிய யூனியன் அறிவிப்பு

நைப்பியித்தெள, ஏப்.24
மியன்மார் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளன என்று ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.
மியன்மாரில் இராணுவ ஆட்சி நடைபெற்றபோது அந்த நாட்டுக்கு எதிராக பல்வேறு தடைகளை ஐரோப்பிய யூனியன்விதித்திருந்தது.



எனினும் தற்போது அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜனநாயகம் மலர்வதற்கான சூழல் ஏற்பட்டுள்ளதை அடுத்து தடைகளை நீக்கும் முடிவை ஐரோப்பிய யூனியன் எடுத்துள்ளது.
நேற்றுமுன்தினம் தடைகளை நீக்கும் ஆவணத்தில் ஐரோப்பிய யூனியன் கையொப்பமிட்டபோதும், ஆயுதங்கள் இறக்குமதிக்கான தடை இன்னமும் நீக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.
இந்த தடை நீக்கத்தால், இயற்கை வளம் மிகுந்த மியன்மாரில் ஐரோப்பிய வர்த்தக நிறுவனங்கள் மீண்டும் கால்பதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு அமெரிக்கா வும், வர்த்தக நிறுவனங்களை அங்கு முதலீடு செய்யும் விதத்தில் தடைகளை தளர்த்தியது
இதேவேளை, மியன்மாரில் அண்மைக் காலமாக இரு இனங்களிடையே கடும் முரண்பாடுகள் ஏற்பட்டு வன்முறைகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



பொஸ்டன் குண்டுவெடிப்புச் சம்பவம் அமெரிக்க மக்களைப் பெரிதும் உலுக்கியுள்ளது. குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்காகவும், காயமடைந்தவர்களுக்காகவும் ஆங்காங்கே மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

# அஷ்ரப் தேர்தலில் போட்டியிடலாம்




லாகூர், ஏப்.24
பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெற உள்ள பொதுத் தேர்தலில் போட்டியிட நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
அஷ்ரப் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளதால் அவரது வேட்பு மனுவை நிராகரிக்க பாகிஸ்தான் தேர்தல் அதிகாரிகள் முடிவு செய்திருந்தனர். எனினும் அஷ்ரப் மீதான வழக்குகளை விசாரித்த லாகூர் நீதிமன்றம் அவர் மீது எந்தக் குற்றமும் இல்லை என்று தெரிவித்துள்ளது. அத்துடன் அவர் தேர்தலில் போட்டியிட எந்தவிதமான தடைகளும் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. (ற)

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு பெண்கள் உட்பட 5 பேர் சாவு

நியூயோர்க், ஏப்.24
அமெரிக்காவில் மர்ம நபரொருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
அமெரிக்காவின் சியாட்டெல் நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பிலேயே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
திடீரென உள்ளே நுழைந்த துப்பாக்கிதாரி குடியிருப்பில் வசித்தவர்களை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

■ அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட துப்பாக்கிக் கட்டுப்பாடு தொடர்பான சட்டம் வாக்கெடுப்பின் போது தோல்வியுற்றது.



தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் அங்கிருந்த கார் நிறுத்துமிடம் அருகே மயங்கிக் கிடந்த ஒருவரை காப்பாற்ற முயன்றபோது அங்கிருந்த ஒருவர் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்.
அதையடுத்துப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து 4 உடல்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் காயமடைந்த மேலும் சிலரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர் குறித்தும், தாக்குதலுக்கான காரணம் குறித்தும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# கர்தினால்களுக்கான உதவித் தொகை இரத்து



ஜெருசலேம், ஏப்.24
கர்தினால்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படும் ரூபாய் 30 லட்சத்தை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார் புதிய போப்பாண்டவரான முதலாவது பிரான்சிஸ்.
போப் பெனடிக்ட் ஓய்வு பெற்றதை அடுத்து புதிய போப்பாண்டவராக முதலாவது பிரான்சிஸ் பதவி ஏற்றார். மிகவும் எளிமையானவர் என்று அறியப்படும் அவர் போப்பாண்டவருக்கு அடுத்த படியாக இருக்கும் கர்தினால்களுக்கு வழங்கப்படும் சுமார் ரூபாய் 30 லட்சம் உதவித் தொகையையும் ரத்து செய்துள்ளார் என்று தெரியவருகிறது.
இவர் தனக்கு வழங்கப்பட்ட சொகுசுக் காரை பதவியேற்ற அன்றே தவிர்த்து பேருந்தில் பயணம் செய்தார் என்று இவரது எளிமைக்கு உதாரணமாக அந்த நிகழ்வை சொல்வதுண்டு. (ற)

# இரணைமடு குடிதண்ணீர் திட்டத்துக்கு நாம் தடையாக இருக்கக் கூடாது

## பூநகரிப் பிரதேச சபைத் தலைவர்

பூநகரி, ஏப்.24

இரணைமடு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்கு நாம் ஒருவரும் தடையாக' இருக்கக் கூடாது. கிளிநொச்சி மாவட்டத்துக்கான நீர்த் தேவைகள் கவனத்தில் கொள் ளப்பட்டே இந்தத் திட்டம் உருவாக்கப்படுகிறது. இவ் வாறு தெரிவித்தார் பூநகரிப் பிரதேச சபைத் தலைவர் பி.சிறிஸ்கந்தராஜன்.

சமூகமயப்படுத்தப்பட்ட கிரா மிய குடிதண்ணீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சமூக அமைப்புகளின் பிரதிநி திகள் மத்தியிலேயே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார். அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்;

இரணைமடுக்குளத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்துக் கான விவசாய காணிகளுக் கான நீர் விநியோகத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையி லேயே இந்தத் திட்டம் உரு வாக்கப்பட்டுள்ளது. அதை விட குளம் புனரமைக்கப் பட்டு மேலதிக தண்ணீரைக் கொண்டே பூநகரி, யாழ்ப் பாணம் பகுதிகளுக்கு குடி தண்ணீர் விநியோகிக்கப் படவுள்ளது.

எதிர்கால நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சமூக ஆர்வலர்களும், மக்களும் அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண் டும். மட்டுமல்லாது இந்தத் திட்டத்தில் தற்போது குடி தண்ணீர் நெருக்கடியை எதிர் கொண்டுள்ள பூநகரிப் பிர தேசமும் இந்தத் திட்டத்தில் பயன் பெறவுள்ளது.

இதன் ஊடாக எமது பிரதேச மும் செழிப்படையும். தூர நோக்குடன் செயற்பட்டால் மாத்திரமே அபிவிருத்தியூடாக நாம் முன்னேறமுடியும்.

திட்டத்தை நடைமுறைப் படுத்த நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். கிளி நொச்சி மாவட்டத்துக்கான தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யாது வெளியிடங்க ளுக்கு குடிதண்ணீரைக் கொண்டு செல்ல அனுமதிக் கமாட்டோம். அது பற்றி மக் கள் கவலை கொள்ளத் தேவை யில்லை- என்றார். (ஐ)

# வவுனியாவில் இருந்து தூர இடங்களுக்கு பஸ்சேவை சீரின்மையால் மக்கள் அவதி

## சீராகச் சேவை நடைபெறுகிறது என்கிறார் தனியார் பஸ் சங்கத் தலைவர்

வவுனியா, ஏப்.24

வவுனியா நகரில் இருந்து தூர இடங்களுக்கான சேவையில் ஈடுபடும் பஸ்கள் பயணி களை ஏற்றியபடி நீண்ட நேரம் காத்திருப்பதாகவும், இதனால் தாம் மணிக்கணக் கில் கடும் வெய்யிலில் காத் திருந்து பயணிக்க வேண்டி யுள்ளதாகவும் மக்கள் தெரி விக்கின்றனர்.

குறிப்பாக, வவுனியாவில் இருந்து சேவையில் ஈடுபடும் தனியார் மற்றும் இ.போ.ச. பஸ்களில் தாம் இந்த அவ லத்தை தினமும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

செட்டிகுளம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு செல்லும் பஸ்களே இவ்வாறு காலதாமதமாக நேர ஒருங் கின்றிச் சேவையில் ஈடுபடு வதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இதனால் தாம் உரிய நேரத் துக்குச் செல்ல வேண்டிய இடங் களுக்கு செல்லமுடியாதுள்ள தாகவும், அவசர தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ள தாகவும் தெரிவிக்கின்றனர்.

பஸ் சேவைகளை நம்பி பாட சாலைக்கு செல்லும் மாணவர் களும், உத்தியோகத்தர்களும் இதன்போது நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ள தாகத் தெரிவிக்கின்றனர்.

தூர இடங்களில் இருந்து வவுனியா நகருக்கு வந்து செல்லும் மக்கள் பஸ் சேவை சீரின்மையால் ஒருநாள் முழு வதையுமே செலவிட வேண்டி யுள்ளதாகவும் முக்கியமாக, அரச செயலகம், வைத்திய சாலை போன்ற இடங்களுக்கு உரிய சேவை நேரத்தில் தம் மால் செல்ல முடியாதுள்ள தாகவும், அத்தோடு சேவை களைப் பெற்று மீண்டும் வீடு செல்வதற்காக மணிக்கணக் கில் காத்திருக்க வேண்டி யுள்ளதாகவும் தெரிவிக்கின் றனர்.



இது குறித்து வவுனியா மாவட்ட தனியார் பஸ் சேவைச் சங்கத்தின் தலை வரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

'தமது சங்கத்தின் கீழ் பஸ்கள் யாவும் சீரான நேர இடைவெளியில் நடை பெறுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு 35 நிமிட இடைவெளியிலும், பரந்தன் ஊடாகப் புதுக்குடியிருப்புக்கு 45 நிமிட இடை வெளியிலும், நட்டாங்கண்டல் ஊடாக முல் லைத்தீவுக்கு 40 நிமிட இடை வெளியிலும், மல்லாவிக்கு 1 கால் மணி நேர இடைவெளி யிலும், செட்டி குளத்துக்கு 50 நிமிட இடை வெளியிலும் பஸ் சேவைகள் நடத்தப் படுகின்றன.

இந்த நேர ஒழுங்கில் மாற் றம் ஏற்படுத்தப்படுவதி ல்லை- என்றார். (ஐ)

# கஞ்சாவுடன் இருவர் கைது

செட்டிகுளம், ஏப்.24

செட்டிகுளம் பொலிஸ் பிரி வில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு நபர்கள் பொலிஸாரி னால் கைது செய்யப்பட்டனர்.

செட்டிகுளம் பகுதியில் ஆயி ரத்து 39 மில்லிக் கிராம் கஞ்சாவை வைத்திருந்த இந்த நபர்கள் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப் படையில் கைது செய்யப் பட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மதவாச்சிப் பிரதேசத் தையும் மற்றவர் செட்டிகுளத் தையும் சேர்ந்தவர்களாவர். கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸாரின் விசாரணை யைத் தொடர்ந்து வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். (க-86)

# மேட்டுப் பயிர்ச் செய்கையில் முசலிப் பிரதேச மக்கள்



மன்னார், ஏப். 24

முசலிப் பிரதேச மக்கள் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாகத் தமது விவசாய நிலம், கிணறுகள், குளம் ஆகியவற்றை இழந்த நிலை யிலும் தற்போது தாம் மீள் குடியமர்ந்த இடத்தில் தமது வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை ஆரம் பித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையின் காரணமாக மன்னார் முசலி மக்களின் வாழ் வாதாரத்தினை உயர்த்தும் விவசாய நிலம், குளம் மற்றும் கிணறு போன்ற இயற் கையான சொத்துக்கள் அழிந்த நிலையிலும் தங்களின் வாழ் வாதாரத்தினை உயர்த்தும் நோக்கோடு முசலி மக்கள் தற் போது மேட்டுநிலப் பயிர்ச்செய் கையை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் பச்சை மிளகாய், தக்காளி, வெண்டி ஆகிய பயிர்களைத் தற்போது பயி ரிட்டுள்ளனர்.

தமக்குத் தேவையான உர வகைகளையும், ஆலோசனை களையும் வழங்குவதில் மன் னார் மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரிகள் ஆர்வம் காட்டுவதில்லை யென இந்த மேட்டுநிலப் பயிர்ச்செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த முறை அதிகமான விவசாயிகள் மிளகாய் மற்றும் கடலை ஆகியவற்றைப் பயிரிட்டனர். ஆனால் அவற் றுக்கு உரிய விலையும், அழிவு மானியங்களும் இதுவரைக் கும் கிடைக்கவில்லை என அந்த விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

அதேபோன்று வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைகளை மேற் கொள்ள முடியாத நிலையும் காணப்படுகின்றது. வீட்டுக் காணிகளில் இருந்த கிணறு கள் யாவும் போரின்போது அழிவடைந்த நிலையில் உள் ளமையே இதற்கான காரண மாகும்.

எனவே முசலிப் பிரதேசத்தின் உயர் அதிகாரிகள் பாதிக்கப் பட்ட தமது நலன் கருதி துரித பணிகளை முன்னெடுக்கு மாறு இந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-12)

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில்

# சேதமடைந்த வீடுகளை திருத்தும் பணி ஆரம்பம்

புதுக்குடிருப்பு,ஏப்.24

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த கால போர் அனர்த்தங்களால் சேத மடைந்த வீடுகளை புனர மைக்கும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக புதுக்குடி யிருப்பு பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில்:

சேதமடைந்த விவரங்கள் பிரதேச செயலகங்களால் திரட்டப்பட்டன.

திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வீடுகளை புனரமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் அந்தந்த கிராம சேவகர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

திருத்த வேலைகளுக்காக விண்ணப்பித்தவர்கள் கிராம அலுவலகங்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள பட்டியலில் தமது விவரங்கள் உள்ளடக் கப்பட்டுள்ளதா என்பதை உறு திப்படுத்திக் கொள்ள முடியும்.

பெயர்விவரம் இடம்பெறாதிருப் பின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துடன் அல்லது தமது பகுதி கிராம சேவையாளர் களுடன் தொடர்பு கொண்டு தமக்கான புனரமைப்பு விவ ரங்களை பதிவுசெய்து கொள் ளுமாறும் - புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உதவித்திட் டப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-400)

# இடர் முகாமைத்துவக் குழு

வவுனியா ,ஏப். 24

வவுனியா வடக்கு ஆனந்த புளியங்குளப் பகுதியில் இடர் முகாமைத்துவக் குழு அமைக் கப்பட்டுள்ளது.

இதில் சிறப்புப் பிரிவுகளாக, முன்னெச்சரிக்கைக் குழு, மீட்புக்குழு, உணவு மற்றும் நிவாரணக் குழு, அவசர நிலைக்கான மீள் கட்டுமானக் குழு என்பன அமைக்கப்பட் டுள்ளன.

வவுனியா நொச்சிக்குளம், ஆனந்தபுளியங்குளம், சமணங்குளம் பகுதியில் இடர் முகாமை செயற்பாடு களில் இந்தக் குழு கடமை யாற்றும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-402)

# கலையுணர்வே மனிதனை நல்வழிப்படுத்துகிறது

## வவுனியா வடக்கு பிரதேச செயலர் உரை

அக்கராயன்,ஏப். 24

கலையுணர்வே மனிதனை நற்குணமுடையவர்களாக மாற்றுகின்றது.

அத்தகைய உணர்வு அற்ற ஒருவன் சிறந்த மனிதனாக வாழ முடியாது- இவ்வாறு தெரி வித்தார் வவு னியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன்.



வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

எமது சமூகத்தில் விளையாட் டையும் கலைகளையும் புறந் தள்ளிவிடுவோமாயின் நாம் நோய் பிடித்தவர்களாக மாறுகிறோம். கலை எங் களிடம் இல்லை என்றால் நாம் வாழ்வதில் அர்த்த மில்லை என்றுதான் பொருள்படும். கலை என்பது ஓர் ஊடகம். அது எப்போதும் மறறவர்களை நல்வழிப் படுத்தும் இயல்பு கொண்டது.

ஒருவருடைய திறமைகளை வெளிக்கொணரவும் பாராட்ட வும் முக்கியத்துவம் பெறு கிறது.

எனவே கலையையும், இலக் கியத்தையும் நாம் வளர்த் தெடுத்துப் பேண வேண்டும் -என்றார். (ஐ-18)

# உயர்தரத்துக்கு விண்ணப்பம்

கிளிநொச்சி,ஏப். 24

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி கிளிநொச்சியின் உயர்தரப் பிரிவில் மாணவர் களைச் சேர்த்துக் கொள்வதற் கான அனுமதிகளைப் பெற் றுக் கொள்ளுமாறு பாடசாலை யின் அதிபர் கேட்டுள்ளார்.

இதன்படி கண்டாவளைக் கல்விக் கோட்டத்தின் கீழ் உள்ள முருகானந்தாக் கல்லூரி யில் கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி கற்பதற்காக புதிய மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும்.

மாணவர்களையும் அவர் களது பெற்றோரையும் நாளை மறுதினம் 26 ஆம் திகதி பிற் பகல் 4.30 மணிக்கு பாட சாலையில் தொடர்பு கொள்ளு மாறு பாடசாலை அதிபர் தி.வரதன் கேட்டுள்ளார். (ஐ-6)

# நயினாதீவு நாகபூஷணி ஆலயத்தில் விதியை மீறினார் பொலிஸ் அதிகாரி

## அடியார்கள் அதிருப்தி; கண்டனம்

கொழும்பு, ஏப்.24

பொலிஸ் அதிகாரி ஒருவர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தினுள் மேற்சட்டையுடன் சென்று ஆலய விதிகளை மீறியமைக்கு அங்கு கூடி நின்ற பக்தர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த செய்தி பிரபல சிங்கள பத்திரிகை ஒன்றில் முன்பக்கச் செய்தியாக வெளிவந்துள்ளது.

அந்தச் செய்தியின் முழு விவரம் வருமாறு:-

வட பகுதியில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் சாதாரண உடையில் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் வந்திருந்தார்.

அம்மனுக்குப் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவ்வேளை அவர் தமது மேற்சட்டையைக் கழற்றாமல் ஆலயத்துக்குள் சென்றார்.

இந்து ஆலயங்களுக்குள் செல்வதாயின் ஆண்கள் மேற்சட்டையைக் கழற்றிய பின்னரே செல்ல வேண்டும். இது சம்பிரதாய பூர்வமானது.

ஆனால் இந்தப் பொலிஸ் அதிகாரி அதனை மீறியுள்ளார். இது தொடர்பாக ஆலயப் பூசகரிடம் கேட்டபோது ''பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களுடன் வீணாகப் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளவதற்குத் தாம் விரும்பாததால் ஆலயச் சம்பிரதாயம் தொடர்பாக அவர்களுக்கு நினைவூட்டுவதில்லை''.- என்றார்.(க-12)

## மின்கம்பங்கள் நிறுத்தப்படுவதற்கு எதிராகப் போராட்டம்...



புத்தளம் களப்பில் மின்கம்பங்கள் நிறுத்தப்படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று செவ்வாய்க் கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து புத்தளம் களப்பின் ஊடாக உயர்வலு மின் கம்பிகளை வெளிப் பிரதேசங்களுக்கு கொண்டு செல்வதற்கான மின்கம்பங்கள் புத்தளம் களப்பில் நிறுத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே, இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது என்று மீன்பிடிச் சங்கங்கள் தெரிவித்தன. இந்த மின்கம்பங்கள் களப்பில் நிறுத்தப்படுவதால் தங்களின் மீன்பிடித் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் என்று மீன்படிச் சங்கங்கள் குறிப்பிட்டன.

# பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடக்குமா?

## முடிவு வெள்ளிக்கிழமை தெரியும்

கொழும்பு,ஏப் 24

கொழும்பில் நடத்தப்படவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாடு, வேறொரு நாட்டுக்கு மாற்றப்படக் கூடிய சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை லண்டனில் நடைபெறவுள்ள பொது நலவாய. அமைச்சு செயற் குழு கூட்டத்தில் விவாதிக் கப்படும் என்று தெரிவிக் கப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்தக் கூட்டத்தின் போது இலங்கை விடயம் தொடர்பில் பேசுவதற்கு முன்னர் தீர்மானிக் கப்பட்டி ருக்கவில்லை.

எனினும் கடந்த வாரம் தென்னாப்பிரிக்காவில் இடம்பெற்ற பொதுநலவாய நீதித்துறை மாநாட்டின் போது இலங்கை தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதில் இலங்கையைப் பொது நலவாய அமைப்பில் இருந்து நீக்க வேண்டும் எனவும், கொழும்பில் நடத்தவுள்ள மாநாட்டை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும், தீர்மானம் நிறைவேற்றப் பட்டதுடன், நாளை நடைபெற வுள்ள அமைச்சரவை செயற்குழு கூட்டத்தில் இலங்கை விடயம் பேசப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாளை வெள்ளிக்கிழமை இலங்கை விடயத்தை அமைச்சரவை செயற்குழு விவாதிக்கவுள்ளது.

இதன் போது பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்துவதா? இல்லையா? என்பது தொடர்பில் முக்கிய தீர்மானம் எடுக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (த)

# அடைக்கலம் கோருபவர்கள் மீது ஆஸி.கடுமையான சோதனை

சிட்னி,ஏப்.24

அடைக்கலம் கோரி வருபவர்களைக் கடுமையான சோதனைக்குட்படுத்தும் நடைமுறையை ஆஸ்திரேலியா அரசு நியாயப்படுத்தியுள்ளது. இந்த நடைமுறையின் கார்ணமாக மேற்கு ஆஸ்திரேலியாவில் படகுகளில் வந்திறங்கி 9 நாள்களுக்குள் 38 இலங்கை அடைக்கல கோரிக்கையாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

அடைக்கலம் கோரி வருபவர்கள் கடுமையான விசாணைக் களுக்குட்படுத்தப்படுவார்கள் என்று ஆஸ்திரேலியா சமஷ்டி குடிவரவு அமைச்சர் பிரெண்டன் ஒ கோனர் கூறினார்.

இலங்கையர்களான அடைக்கலம் கோரிக்கையாளர்களுக்கு சட்ட உதவி வழங்கப்படாமை குறித்து மனித உரிமை சட்ட அறிஞர்கள் தெரிவித்துள்ள கவலைகளை அமைச்சர் புறக் கணித்தார். வழக்கறிஞர்கள் தமது சட்ட விவாதங்களை உயர் மட்டங் களுக்குக் கொண்டு செல்வதற்காக எப்போதுமே வாதிட் டுக்கொண்டுதான் இருப்பார்கள் என்றார்-அவர். (த-ப)

## சைக்கிள் ஓட்டப் போட்டி

கைதடி மேற்கு, சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 57ஆவது ஆண்டு விழா நிகழ்வில் நாளை (25.04.2013) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு வடமாகாண ரீதியான சைக்கிள் ஓட்டம் நிலைய முன்றலில் ஆரம்பமாகவிருப்பதால் பங்கு கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

சரஸ்வதி சனசமூக நிலையம்
கைதடி மேற்கு, கைதடி.
(சி/9234) (23) 0776128435 (அயிதரன்)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி மனோன்மணி சண்முகநாதன்

ஈஞ்சடி, சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சண்முகநாதன் நேற்று (23.04.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சரவணமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் கலேந்திரன் காலஞ்சென்ற சுரேந்திரா ஆகியோரின் தாயும் விஜிதாவின் அன்பு மாமியும் புவிந்திரன், சுதாகரன், மேனன், சுரேந்திரா, விஜேன்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2013) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய் (36357) (23-16-14) தகவல்: ச.கலேந்திரன் (மகன்)

### இலட்சுமிப்பிள்ளை மார்க்கண்டு



காரைநகர், களபூமி, தன்னாலையைப் பிறப்பிடமாகவும் திக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இலட்சுமிப்பிள்ளை நேற்று (23.04.2013) செவ்வாய்க்கிழமை காலை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்- வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்மா பார்வதி, காலஞ்சென்றவர்களான இராமநாதன், சுப்பிரமணியம் மற்றும் தோனியம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, கந்தையா மற்றும் இராசலட்சுமி, பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான, சுந்தரம்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் பரமேஸ்வரியின் பாசமிகு தாயும் ஆறுமுகராசாவின் பாசமிகு மாமியும் நடராசா, கோடீஸ்வரன், தர்மினி ஆகியோரின் பேர்த்தியும் கறுஜாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (23.04.2013) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் களபூமி, தில்லை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஆ.கோடீஸ்வரன் (பேரன்)

(36358) (23-16-14)

## கருத்தமர்வு

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் 'ஹியூகோ சாவேஸ்-உலகமய எதிர்ப்பு அரசியல் எனும் தலைப்பிலான கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

செயற்றிறன் அரங்க இயக்கத் தலைமையகத்தில் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் நாளை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறவுள்ள இந்தக் கருத்தமர்வில் மு.இராசநாயகம் தலைமையுரையும் சபா.தனுஜன் கருத்துரையையும் வழங்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம் பெறும் இந்த நிகழ்வில் கலை இலக்கிய, சமூகவிஞ்ஞன, அறிவியல் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(ஒ-ரி)

## மரண அறிவித்தல்

### திருமதி தருமலிங்கம் நித்யசுவலட்சுமி

யாழ்ப்பாணம் கற்குளி சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி தருமலிங்கம் நித்யசுவலட்சுமி கொழும்பில் நேற்றுமுன்தினம் (22.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காரைநகர் ஆறுமுகம் -தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், கௌரி(இத்தாலி), ரேணுகா (சுவிஸ்), தர்சினி(லண்டன்), ரமேஸ் (பிரான்ஸ்), டினேஸ் (இத்தாலி) ஆகியாரின் அன்பு தாயும், சண்முகநாதன்(இத்தாலி), அமிர்தலிங்கம்(சுவிஸ்), கிரிதரன்(லண்டன்), கிருஸ்ணலேகா, ஜமீரா ஆகியோரின் அன்பு மாமியும், டினோத், டில்சிகா, பிரணவி, பிரவீஸ், சுவாரிசன், சுலக்ஷன், கிர்திஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த் தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வத்தளை, மகிந்த மலர்ச்சாலையில் (கார்கீல்ஸ் பூட்சிற்றி முன்பாக)வைகக்கப்பட்டு நாளை (25.04.2013) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக வத்தளை கெரவலப்பிட்டிய மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெரவலப்பிட்டிய.
தொலைபேசி:- 0777 239491, 0770330290.

தகவல்: பிள்ளைகள்.

# எரிகாயங்களுடன் யாழ்.ஆஸ்பத்திரியில் மூதாட்டி சாவு

யாழ்ப்பாணம்,ஏப்.24

குப்பி விளக்கு தட்டுப்பட்டதனால் எரிகாயத்துக்கு உள்ளாகி யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நாராந்தனை மத்தி. ஊர்காவற்றுறையில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த றொக்கையா நெத்தலின் (வயது-67) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

வீட்டில் குப்பி விளக்கை பிடித்து புடவைகள் எடுக்க முற்பட்ட போதே விளக்குத் தட்டுப்பட்டு அவர் அணிந்திருந்த உடையில் தீப்பிடித்தது. எரிகாயங்களுடன் அவர் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஓ-4)

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF ARTS

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mention posts.

Senior Professor / Professor of
**Education / Economics / Fine Arts / Geography / Linguistics / Tamil / History**
Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in
**Education /Geography/Hindu Civilization/ Law / English Language Teaching**

**Note:**
i. For the position in **Education** preference will be given to those who have relevant special degree with major component of study programme in Arts / Social Science stream.
ii. Preference will be given those who have a postgraduate degree in physical Geography / Human Geography for the appointment for the Post of Senior Lecturer Grade I/II in the Department of **Geography.**
iii. Preference will be given those who worked on his/her undergraduate level research on physical geography especially Geomorphology / Human Geography with special reference to Demography for the Post of Lecturer (probationary) in the Department of **Geography.**

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.61100 – 11x 1425 – 82775/- p.m. |
| Professor | Rs.56505 – 13x1310 – 73535/- p.m. |
| Senior Lecturer Grade I | Rs. 45545 – 7x1050 – 52895/-p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 39755 – 11x790 – 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs. 27775 – 10x645 – 34225/-p.m. |

Note:

In addition to the above salary, the following allowances will also be paid:

(i) Academic allowance (on basic salary)

| Posts | 01.01.2013 | 01.07.2013 |
|---|---|---|
| Senior Professor/ Professor | 73%/75.5% | 85% |
| Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II | 72% | 80% |
| Lecturer (Probationary) | 49.875% | 60% |

(ii) Research allowance equal to 35% of Academic staff , based on their research activity
(iii) Special allowance

| From 01.01.2013 | From 01.07.2013 | From 01.10.2013 |
|---|---|---|
| 15% | 17.5% | 20% |

(iv) Cost of living allowance of Rs. 6,600/- p.m.

**Statutory benefits:**
(i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr. II and above.
(ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
(iii) Gratuity payments
(iv) Employees' Trust Fund benefits.
(v) Free Medical Services.

**Closing date:**
**Post of Senior Professor/Professor - 23.07.2013**
**Other posts - 27.05.2013**

Applications and other required documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self–addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
(C/9390)(2.6)

உதயன்
விளம்பரங்களுக்கு
advt@uthayan.com
0215671111

**ஆங்கில ஆசிரியர் தேவை**

மதுரம் கல்வி நிலையம் கோப்பாய் தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களில் ஆங்கில பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை. தொடர்பு- 0779122918

வீரமாகாளியை சரண் புகுந்தால் வீரசக்தி பெறலாம்
வண்ணார் பண்ணை
அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்

## மணவாளக் கோல உற்சவம்

1) 24.04.2013 புதன்கிழமை காலை 8 மணிக்கு பூர்வாங்க கிரியை ஆரம்பம்
2) காலை 9 மணிக்கு யாக பூசை ஆரம்பம்
மு.ப. 10 மணிக்கு விசேட திரவிய ஹோமமும், சங்குப் பூசையும்
3) மு.ப. 10 மணி கும்ப பிரதட்சணமும் சங்கு அபிசேகமும்,
மு.ப. 11.30 மணிக்கு உச்சிக்காலப் பூசை.
நண்பகல் 12 மணிக்கு அன்னதானம்
மாலை 5 மணிக்கு மூலஸ்தான பூசையும்
5.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் திருவூஞ்சலும், தொடர்ந்து அம்பாள் உள்வீதி, வெளிவீதி வலம் வருதல் இடம்பெறும்.

இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க
வீரமாகாளி அம்பாள்
தேவஸ்தானம்.
(சி/9395) (10,6)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி முத்துமலர் திரு[illegible]னசோதி



எமது இரு மிஷன் வை[illegible]சாலைகளில் அநேக ஆண்டுகளாக சேவ[illegible]ரிந்த எங்களால் அன்பாக அழைக்கப்படும் முத்து அக்கா (திருமதி முத்துமலர் திருஞானசோதி) அவர்களின் பிரிவால் துயமடைந்துள்ளோம், கவலையடைந்து ள்ள அன்னாரின் உற்றார், உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

வைத்திய மேலதிகாரி, வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
மக்லியோட் வைத்தியசாலை, இணுவில், கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை,
மானிப்பாய்.
(36353) (23-16-14)

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் (வ.து) இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

*பனிக்கட்டி ஆலை, குளிரூட்டிக் கொள்கலன் என்பவற்றை வாடகை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்தலுக்கான கேள்வி கோரப்படுகின்றது.*

யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்துக்குச் சொந்தமான இல.18, முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள ஐந்து தொன் உற்பத்தி இயலளவு கொண்ட பனிக்கட்டி ஆலை மற்றும் கொள்கலன் குளிரூட்டி அறை, ஐஸ் உடைக்கும் இயந்திரம் ஆகியவற்றை எதிர்வரும் 01.05.2013 தொடக்கம் 31.10.2013 வரையான காலப்பகுதியில் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலைள் கோரப்படுகின்றன.

1.நாட்டமுள்ள விலைமனுதாரர்கள் கேள்வி ஆவணங்களை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2.கேள்வி ஆவணங்களை 24.04.2013 தொடக்கம் 29.04.2013 வரையான காலப் பகுதியில் அலுவலக நாள்களில் 10 மணியிலிருந்து 3 மணி வரை அலுவலக நேரத்தில் கேள்விப் படிவத்திற்குரிய மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5, 000/- காசாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூடிய கடித உறையினுள் இட்டு கூறுவிலை எனக் குறிப்பிட்டு தலைவர், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூ.ச.ச. சம்மேளனம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைகள் பெட்டியினுள் 30.09.2013 அன்று மு.ப. 10 மணிக்கு முன்னதாக கிடைக்கத் தக்கதாக சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் கேள்வி நேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும்.
4. மேலதிக விவரங்களை அலுவலகத்திலோ அல்லது 021 222 2547, 9797 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவே பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்:
*யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் (வ-து)*
இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சி/9230) (23-16-14)

## மரண அறிவித்தல்

திருமதி **நாகம்மா குமாரசாமி**

(4ஆம் வடடாரம் புங்குடு தீவு)



புங்குடுதீவு 4ஆம் வட் டாரத்தைப் பிறப்பிடமாக வும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா கு மா ர சா மி நேற்று (23.04.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா குமாரசாமி யின் அன்பு மனைவியும், பர மேஸ்வரி, புவனேஸ்வரி, சிவயோகம், தவமணி (ஜேர்மனி), கனகசபாபதி (ஜேர்மனி), திலகேஸ்வரி, கௌரிரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயும், நட ராசா, இராசரத் தினம், நாகேந்திரம் (ஜேர்மனி), விஜயரத் தினம்(ஜேர்மனி), தியாகராசா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான கண்ணம்மா, நல் லம்மா, அருளம்பலம் மற்றும் கனகலிங் கம், கமலம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம்(வர்த்தகர்), தில்லையம்பலம், சிவசாமி(வர்த்தகர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.04.2013) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2மணிக்கு கேரதீவு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்: குடும்பத்தினர்.
ஐ.நடராசா(மருமகன்)

# அடிப்படை வசதிகள் இன்றி குடியமர்ந்த குடும்பங்கள்

வலி.தென்மேற்கு, ஏப்.24
வலி.தென்மேற்குப் பிரதேச சபையால் கட்டுடைப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட ஐந்து குடும்பங்கள் குடிதண்ணீர், மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமங்களின் மத்தியில் பல மாதங்களாக வாழ்ந்து வருகின்றன.

தமது இந்த அவல நிலை குறித்துப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பல தடவைகள் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அறிவித்திருந்தபோதிலும் இன்றுவரை எந்த வித முன்னேற்றகரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கவலைதெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் செயற்பாடு குறித்து ஆத்திரமடைந்த குடும்பத்தினர் குறிப்பிட்ட தினத்துக்குள் அடிப்படை வசதிகள் செய்து தரப்படாவிட்டால் முன்பு வாழ்ந்த இடத்தில் மீண்டும் குடியமர்வோம் என்று எச்சரித்துள்ளனர்.

> மலசலகூடம், குடிதண்ணீர் கூட இல்லாமல் இந்தப் பகுதி மக்கள் இன்னமும் சிரமத்துடனேயே வாழ்கிறார்கள்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலம் அமைப்பதற்காகப் பொது மக்களின் நிதியுதவியுடன் வாங்கப்பட்ட மானிப்பாய் எரிபொருள் நிலையத்துக்குப் பின்புறமாகவுள்ள யாழ்ப்பாணம் சிவன் கோயிலுக்குச் சொந்தமான காணியில் பல வருடங்களாக வாழ்ந்து வந்த ஐந்து குடும்பங்கள் பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டுடையிலுள்ள காணியில் பிரதேச சபையால் குடியமர்த்தப்பட்டன.

குடிதண்ணீர், மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகள் உட்பட சகல வசதிகளும் செய்து தரப்படுமென்று உறுப்பினர்களால் உறுதிமொழி வழங்கப்பட்டது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடு கட்டுவதற்கு 27 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

உறுப்பினர்களின் பேச்சை நம்பிக் கட்டுடையில் குடிசைகளை அமைத்த குடும்பங்களுக்குப் பல மாதங்களாகியும் மலசல கூட வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

குடியிருக்கும் காணியிலிருந்து வெகுதூரத்தில் ஐந்து குடும்பங்களுக்குமாக அமைக்கப்பட்ட ஒரேயொரு குழாய்க் கிணறும் செயலிழந்துள்ளது.

இதனால் மலசல கூடம், குடிதண்ணீர் போன்ற வசதிகளின்றிச் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வரும் இந்தக் குடும்பங்களின் நிலைப்பாடு குறித்து உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்த போதிலும் இன்று வரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பிரதே சபை உறுப்பினர்களின் செயற்பாடு குறித்து ஆத்திரமுற்ற குடும்பத்தவர் குறிப்பிட்ட தினத்துக்குள் அடிப்படை வசதிகள் செய்து தராவிட்டால் தலைமை அலுவலகத்துக்கு அருகில் முன்பு வாழ்ந்த இடத்தில் மீண்டும் குடிசைகள் அமைத்து வாழ்வோம் என்று தெரிவித்துள்ளனர். (ம-115)

### கைதடி முதியோர் இல்லத்தில் இருந்து

## அழைத்துச் செல்லப்பட்டவர் மீண்டும் இல்லத்தில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்.24
கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த வயோதிப பெண் ஒருவரை அவரது சகோதரி, தான் தன்னுடன் வைத்துப் பராமரிக்கப் போவதாகக் கூறி அழைத்துச் சென்று 24 மணி நேரத்தில் அவர் மீண்டும் இல்லத்தில் இணைக்கப்பட்ட அதிர்ச்சியான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது குறிந்து இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கரணவாய் தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் அன்னம்மா (வயது-80) என்ற வயோதிபப் பெண் இந்த மாத முற்பகுதியில் எவரது பராமரிப்பும் அற்ற நிலையில் அந்தப் பிரதேச கிராம சேவகர் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தினரின் உதவியுடன் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

திடீரென இவரது சகோதாரி தங்கராசா பார்வதி என்பவர் இல்லத்துக்கு வந்து தனது அக்காவைத் தான் வைத்து பராமரிக்கப் போவதாகவும் அவருக்கு வெளிநாட்டு உதவிகள் உள்ளன எனக்கூறி இல்ல நிர்வாகத்துடன் அடம்பிடித்து ஒருவாறு அவரை அழைந்துச் சென்றார்.

மறுநாளே பிரதேச கிராம சேவகர் மற்றும் சமூகசேவைகள் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் அவரது இல்லத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

அங்கு அந்த வயோதிபப் பெண் உரியமுறையில் பராமரிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தினர்.

இதனை அடுத்து உடனே அந்த வயோதிபப் பெண், சகோதரியின் வீட்டில் இருந்து அழைத்து வரப்பட்டு அரச இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

பணத்துக்காக இவ்வாறு வயோதிபர்களை பராமரிப்பது தொடர்பாக பொறுப்பற்ற முறையில் நடந்து தமது தேவைகளை நிறைவு செய்வதற்கும் சமூகத்தில் சிலர் இப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் இல்ல அத்தியட்சகர் கூறினார். (ம-17)

### ஊர்காவற்றுறையில் மரக்கறிச் சந்தை

வலி.மேற்கு,ஏப்.24
பொதுமக்களின் வசதி கருதி ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நகர்ப் பகுதியில் குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதியில் இருந்து 45 லட்சம் ரூபா செலவில் மரக்கறிச் சந்தை ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மீன் சந்தைக்குப் பக்கத்தில் பழைமை வாய்ந்த கட்டடத்தில் வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வரும் இந்தச் சந்தைக்கு வரும் பாவணையாளர்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

மக்களின் இந்த நிலைப்பாட்டை உணர்ந்துகொண்ட பிரதேச சபை குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதியிலிருந்து 45 லட்சம் ரூபா செலவில் மரக்கறிச் சந்தையை அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

### மின்சாரம் பெற மண்டைதீவில் பலர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.24
மண்டைதீவு பிரதேசத்தில் மின்சாரம் பெறுவதற்கு அதிகமான மக்கள் விண்ணப்பித்து வருகின்றனர்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்தப் பிரதேசத்துக்கான மின்சாரம் அண்மையில் விநியோகிக்கப்பட்டது. இதுவரைக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்த மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ளது..

இந்த நிலையில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அதிகமான மக்கள் மின்சாரத்தை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர். மின் விநியோகத்துக்கு விண்ணப்பித்த மக்களுக்குமின்சார இணைப்பை விரைவாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் கூறினார். (ம-17)

### இது என்ன பாதையா, பாலைவனமா...?



நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான வாகனங்கள் செல்லும் புங்குடுதீவுப் பகுதியின் பிரதான வீதி

புங்குடுதீவு சின்ன ஆலடி அல்லது பண்டத்தன் வீதியே இது. கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாகக் கண்டு கொள்ளப்படாத வீதி. மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு அலங்கோலமாகக் காணப்படுகிறது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் தெரிவித்திருந்தார் என்றும், ஆனால் இதுவரை நடவடிக்கைகள் ஏதுமின்றி இன்னமும் பள்ளமும் திட்டியுமாகக் காணப்படுகிறது என்றும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ஒ-7)

## புங்குடுதீவு வல்லன் பகுதிக்கு எப்போது பஸ் சேவை?

யாழ்ப்பாணம், ஏப்.24
புங்குடுதீவு வல்லன் பகுதிக்கு பஸ்சேவை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடந்த முறை நடைபெற்ற வேலணைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இறுப்பிட்டிக்கு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் புங்குடுதீவு வல்லன். பகுதிக்கும் பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள் குறிப்பிட்டிருந்தனர்.

பஸ் சேவை ஆரம்பிக்கப் போவதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தபோதும் இன்னமும் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை.

இந்தப் பகுதியில் தற்போது ஐம்பதுக்கும் அதிகமான குடும்பங்கள் உள்ளன.

அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக விரைவில் பஸ் சேவை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேலும் கூறினர். (ம-7)

## இலங்கை வங்கிக் கிளை மருதனார்மடத்தில்

வலி.வடக்கு,ஏப்.24
மருதனார்மடம் வலிகாமம் கல்வி வலயத்தில் இயங்கும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஊழியர்களின் நன்மை கருதி இலங்கை வங்கியின் கிளை பிரிவு ஒன்று இயங்கத் தொடங்கியுள்ளது.

வடமாகாண கல்வித் திணைக்கள ஊழியர்களின் நன்மை கருதியும் வங்கிச் செயற்பாட்டை ஊழியர்கள் இலகுவாக பெற்றுக் கொள்ளும் வகையிலும் இலங்கை வங்கி சுன்னாகம் கிளையின் கீழ் இந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை வங்கிக் கிளை மருதனார்மடம் கல்வி வலயத்தில் இயங்கத் தொடங்கியதன் மூலம் வலிகாமம் கல்வி வலய ஊழியர்களும் வடமாகாண கல்வித் திணைக்கள ஊழியர்களும் நன்மை அடையக் கூடியதாகவுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-86)

## கிராமிய கடற்றொழில் அமைப்புகளை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை

வலி.தென்மேற்கு,ஏப். 24
கடல்தொழில், நீரியல் அபிவிருத்தி அமைச்சரின் ஆலோசனைக்கமைய யாழ். மாவட்டத்தில் உள்ள கிராமிய கடல்தொழில் அமைப்புகள் யாவும் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் என்.பொன்னம்பலம் மேற்கொண்டுள்ளார்.

கடல்தொழில் அமைப்புகளைப் புனரமைப்பது சம்பந்தமாக தேசிய மீனவர் மகா சம்மேளனத்தின் செயலாளர் எம்.பி.பிரேமசிறி பெரேரா, யாழ்.மாவட்ட கிரர்மிய கடல் தொழில் அமைப்புகளின் சம்மேளனத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;

தேசிய மீனவர் மகா சம்மேளனத்தின் கீழ் இயங்கும் மாவட்ட மற்றும் கிராமிய கடல்தொழில் சங்கங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரட்ணவின் ஆலோசனைக்கமைய தேசிய மீனவர் மகா சம்மேளனத்தின் தேசிய சபை தீர்மானித்துள்ளது. இதற்கமைய தேசிய மீனவர் மகா சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து கிராமிய கடற்றொழில் அமைப்புகளையும் புனரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது.

எனவே தாங்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமிய கடற்றொழில் அமைப்புகளையும் உடனடியாக கடற்றொழில் திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து புனரமைப்பு செய்வதற்கு அனுமதியளிப்பதுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கோள்கிறேன்- என்றுள்ளது. (ம-115)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# உர வகைகளை தயாரிக்க விவசாய அமைச்சு திட்டம்

தேயிலை, தென்னை மற்றும் றப்பர் செய்கை களுக்குரிய உர வகைகளை எதிர் காலத்தில் தயாரிப் பதற்கான திட்டத்தை விவசாய அமைச்சு விடுத்துள்ளது.

களஞ்சிய வசதிகள், கலவை இயந்திரங்கள் மற்றும் அது சம்பந்தமான அறிவு என்பவற்றை நிறைவு செய்த பின்னர் வெகு விரைவில் இதன் உற்பத்திச் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது தனியார் துறையிடமிருந்து இந்த உர வகைகள் பெறப்பட்டு உர மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இவற்றின் தரம் குறைந்து காணப்படுவதாக விவசாயிகளிடமிருந்து குற்றச் சாட்டுக்கள் கிடைத்து வருகின்றன. இதனால் தரச் சிறப்பு வாய்ந்த உர வகைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காகவே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-22)

# மணியம் தோட்ட வீதிகள் விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்ப்பாணம், மணியம் தோட்டம் பகுதியில் உள்ள அனைத்து உள்ளக வீதிகளும் விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் அ.இரவீந்திர தாசன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த பிரதேசத்தில் பிரதான வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும் உள்ளக வீதிகளை விரைவில் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட வீதிகள் புனரமைப்பு இன்றி உள்ளன. அந்த வீதிகளைத் தார் ஊற்றி புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார்.

இதேவேளை- அநேகமாக உள்ளக வீதிகள் மணல் வீதிகளாகக் காணப்படுவதால் இந்த வீதிகளூடாகப் பயணம் செய்யும் மக்கள் சிரமப்படுகின்றனர்.

மாரி காலங்களில் இந்த வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் வேறு பிரதான வீதிகளைப் போக்குவரத்துக்கு பயன்படுத்தியும் வருகின்றனர். (ந-17)

## மலேரியா தினம் அனுஷ்டிப்பு

சுகாதார அமைச்சினால் உலக மலேரியா தினம் நாளை வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மலேரியா ஒழிப்புத் தொடர்பான செயற்றிட்டங்களை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள சுகாதார நிறுவனங்கள் தத்தமது பகுதியில் உள்ள பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபை ஆகியவற்றுடன் இணைந்து மலேரியா தடுப்பு தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ந-9)

## மனனப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.24

சைவ சமய அபிவிருத்திக் கழகம் திருநாவுக்கரசர் குரு பூசைத் தினத்தை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியினை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் பாலர் பிரிவில் தரம்1,2 மாணவரும், கீழ் பிரிவில் தரம்3, 4 மாணவர்களும் கலந்துகொள்வர்.

போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறும்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் மே 4 ஆம் திகதி வழங்கப் படும்.

போட்டியில் பங்குபெற விரும்புபவர்கள் சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல 82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (ந)

## 26 பேர் கைது

# அடித்து துன்புறுத்தல் குற்றத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்.குடாநாட்டில் பிறருக்கு அடித்துக் காயப்படுத்தும் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தக் குற்றச்சாட்டில் கடந்த வாரம் மாத்திரம் 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேசமயம் விசாரணைகளும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

தனிப்பட்ட ரீதியிலும் குழுக்களாகவும் சேர்ந்து ஒருவரை ஒருவர் மோதிக்கொள்கின்றனர். பெரும்பாலும் தனிப்பட்ட ரீதியிலான முரண்பாடுகளே இதற்குக் காரணம்.

பிறருக்கு அடித்துக் காயப்படுத்தும் சம்பவங்கள் கடந்த பல மாதங்களாக அதிகரித்துள்ளன. அந்த வகையில் கடந்தவாரம் மாத்திரம் 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தவிர வீதி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 4 பேரும், மதுபோதையில் கலகம் விளைவித்த 11 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 4 பேரும், கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ந-4)



புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த திருவிழாவின்போது, அம்பாள் வீதி வலம் வருவதைக் காணலாம். (ந-7)

## யாழ். பஸ் நிலைய பாதுகாப்பு ஊழியரை தாக்கியவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்.பஸ்நிலையத்தில் பாதுகாப்பு ஊழியர் ஒருவரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் அரியாலையைச் சேர்ந்த ஒருவர் கடந்த சனிக் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கடமையில் நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தருடன் முரண்பாடு ஏற்பட்டு, இந்தச் சம்பவம் நடந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறு காயமடைந்த பாதுகாப்பு ஊழியர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-4)

## இடமாற்றம்

வலி.வடக்கு, ஏப்.24

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் நல்லூர் முத்திரைச் சந்தை செம்மணி வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருகோணமலையில் இருந்த வட மாகாண அமைச்சின் விளையாட்டுத் திணைக்களம் யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் உள்ள வலிகாமம் கல்வி வலய மேல் மாடியில் இயங்கி வந்தது.

கடந்தவாரம் முதல் வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் செம்மணி வீதியில் உள்ள தனியார் இல்லத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. (ந-86)

# காலம் மாறலாம் ஆனால் மார்க்கம் மாறமுடியாது

கொழும்பு, ஏப்.24

ஹிஜாப் இஸ்லாம் முஸ்லிம் மாதர்களுக்கு வழங்கியுள்ள ஒழுக்கத்தின் அடையாளமாகும். இதனை நாம் ஒரு நாளும் கைவிடமாட்டோம். கைவிடவும் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் கூறினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 'ஒரு வானொலியின் இதயக்குரல் ஓய்ந்தது' என்னும் நூராணிய ஹஸன் நினைவு மலர் வெளியீட்டு விழா உயன்வத்தை நூராணியா மஹா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன் தலைமை தாங்கினார்.

அவர் உரையாற்றுகையில், மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நாங்கள் இலக்கியத் துறையில், நாடகத்துறையில், கல்வித்துறையில், எழுத்துத் துறையில், சிறந்து விளங்குபவர்களாக இருக்கின்றோம். நீதி அமைச்சுக்கும் ஒரு இக்கட்டான நிலை அரசுக்கு ஒரு இக்கட்டான நிலை. இது எதற்காக எனில் முஸ்லிம்கள் சட்டக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டமையே. ஆனால் அது அவர்களுடைய திறமையாகும்.

> கிழக்கு மாகாணத்தில் கிராமப் புறத்தில் வாழும் முஸ்லிம் பெண்களின் கல்வித்திறன் மிகவும் உயர்ந்ததாக இருக்கின்றது.

கொழும்பு நகரில் வாழும் பிள்ளைகளை விட குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் கிராமப் புறத்தில் வாழும் முஸ்லிம் பெண்களின் கல்வித்திறன் மிகவும் உயர்ந்ததாக இருக்கின்றது. காலம் மாறும் பொழுது சம்பிரதாயம் ,கடமை , மார்க்க அனுஸ்டானம் , பர்தா முறை மாறுமா? மாறவும் கூடாது மாறச் செய்யவும் வேண்டாம். இதனை நாடாளுமன்றத்தில் பேசியுள்ளேன். ஒழுக்கத்தின் அடையாளத்தை முஸ்லிம் மாதர்களுக்கு வழங்கியுள்ளது இதனை நாங்கள் ஒரு நாளும் கைவிட மாட்டோம்- என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (ந-ரி)

## நிர்வாகிகள் தெரிவு

கொழும்புத்துறை, ஏப்.24

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் நடப்பு வருடத்துக்கான நிர்வாக சபைத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை தற்போதைய தலைவர் கிளிபேட் அன்ரனிப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

அரியாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்குக்கான பயிற்சி விளையாட்டரங்கில் நடைபெற்ற லீக் அங்கத்தவர்களுக்கான கூட்டத்தில் இடம்பெற்ற தெரிவில் நிர்வாக சபைக்குத் தெரிவானோரின் விவரம் வருமாறு:-

தலைவர்-கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, செயலாளர்- எஸ். தர்மராஜா , பொருளாளர் -க. தவஸ்கந்தா, உப செயலாளர்- பகீரதன், உப தலைவர்கள்- இளம்பிறையன், ஆனல்ட் சுரேந்திரன், ஆனந்தராசா, தர்மகுலநாதன்.(ம-135)

## பங்கீட்டு அட்டை பருத்தித்துறையில் மீளாய்வு

வடமராட்சி, ஏப்.24

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குடும்பத்தினரும் தத்தமது பிரிவு கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு பங்கீட்டு அட்டைகளை மீளாய்வுக்கு உட்படுத்து மாறு பருத்தித்துறை பிரதேச செயலகம் மக்களைக் கோரியுள்ளது.(ஒ-8)

## புகைப்படப் பிரதிக்கும் கட்டணம் உயர்ந்தது

வலி.வடக்கு, ஏப்.24

மின்சாரக் கட்டணத்தின் அதிகரிப்பைத் தொடர்ந்து புகைப்படப் பிரதியெடுத்தல் கடைகளில் புகைப்படப் பிரதியெடுப்பதற்கானகட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புகைப்படம் பிரதியெடுப்பதற்கான கட்டணம் ஒரு ரூபாவில் இருந்து இரண்டு ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடக்கூடியதாகும்.

ஏற்கனவே புகைப்படப் பிரதிகள் எடுப்பதில் சில வர்த்தக நிலையங்கள் அதிக கட்டணத்தை அறவிடும் நிலையில் தற்போதைய மின் கட்டண அதிகரிப்பைக் காட்டி மேலும் கட்டண அதிகரிப்புச் செய்துள்ளமை பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்களைக் கடுமையாக பாதித்துள்ளமை சுட்டிக் காட்டக் கூடியதாகும். (ந-86)

# சுயவிவரக்கோவை சீர் செய்யும் பணி

தென்மராட்சி,ஏப். 24

தென்மராட்சி கல்வி வலயத்தில் அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா பணியாளர்களின் சுயவிவரக் கோவைகளை சீர் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர்களின் சுயவிவரக்கோவையை பூரணப் படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் சுயவிவரக் கோவையில் காணப் படாததால் குறித்த உத்தியோகத்தர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வலய க் கல்வி அலுவலகத்துடன்தொடர்பு கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தெரிவித்துள்ளார்.

செல்வி சிவராசா உதயகுமாரி மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி, திருமதி மதரேஸ்வரி சின்னத்துரை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மு.அரியரத்தினம் மட்டுவில் சரஸ்வதி வித்தி, திருமதி சாவித்திரி நவரத்தினம் கைதடி விக்னேஸ்வரா வித்தி,

திருமதி செல்வராணி சிவ சோதி நாவற்குழி ம.வி. (ம-9)



யாழ்ப்பாணம், அத்தியடி விநாயகர் கோயில் பக்திமுக்தி பாவனர் திருவிழாவில் ஓதுவார் ஆர்.சண்முகராஜாவுக்கு ஆலயகுரு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். (ம)

## சுகாதாரமற்ற சூழலில் குடி தண்ணீர் கிணறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.24

நெடுந்தீவு மணல் துறைப் பகுதியில் உள்ள நல்ல தண்ணீர் கிணறுகளில் சுகாதாரமற்ற சூழ்நிலை காணப்படுகின்றன. அநேக கிணறுகளில் குப்பை கூழங்கள் விழுந்து கிடப்பதையும், கட்டுகளில் மரக் கன்றுகள் வளர்ந்துள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (ந-7)

## பொதுக்கூட்டம்


தென்மராட்சி,ஏப்.24

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர் நலன்புரி சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர் வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வூதியர்களின் நலன்கள் தொடர்பாக பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் பிரதேச ஓய்வூதியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ந-9)

# இலங்கை

## செய்ய வேண்டியது என்ன?



> இலங்கை இனப்பிரச்னைக்கு போர் தீர்வாகாது. அந்த மக்களின் நியாயமான உணர்வு புரிந்துகொள்ளப்பட வேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து கூடுதல் சுயாட்சி வழங்க வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களின் துயரத்துக்கு முடிவுகட்ட வேண்டும். அங்குள்ள மக்கள் அமைதியாகவும் சமஅந்தஸ்துடனும் வாழ வழிவகை செய்ய வேண்டும் என்ற உணர்வோடு தமிழகமே குரல் கொடுத்தது. தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மாணவர்கள் களத்தில் இறங்கிப் போராடினர்.

இலங்கை இனப்பிரச்சினை தொடங்கி அரை நூற்றாண்டுகாலம் ஆகிவிட்டது. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை ராணுவத்திற்குமான ஆயுத மோதல் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் நெருங்கும் நிலையில்கூட இலங்கைத் தமிழர் இனப்பிரச்னைக்கு நியாயமான தீர்வு காணப்படவில்லை.

### தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்படும் தமிழ் மக்கள்

போர் முடிவுக்கு வந்த நிலையில் ராஜபக்ஷ அரசு, தமிழ் மக்களுக்கு அளித்த எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. 13-வது சட்டத்திருத்தம் மற்றும் அதற்கு மேலேயும் சென்று தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படும் என்று அவர் கூறினார். ஆனால், குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகள் கூட இலங்கைத் தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுகிறதுஎன்பதே உண்மை.

அரசியல் தீர்வுகாண ஆக்கப்பூர்வமான முன்முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் அரசுத் தரப்பில் நடத்தப்படும் பேச்சுவார்த்தை காலங்கடத்தும் உத்தியாக அங்குள்ள தமிழ் மக்களால் பார்க்கப்படுகிறதே தவிர, அவர்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக இல்லை.

இலங்கை விடுதலை பெற்ற பிறகு அந்த நாட்டின் பூர்வகுடிகளான தமிழ் மக்கள் பல்வேறு வழிகளில் புறக்கணிக்கப்பட்டனர். ஜனநாயக ரீதியாக தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தத்தொடங்கினர். ஆனால், பண்டாரநாயகா அரசு முதல் தொடர்ச்சியாக வந்த அரசுகள் அதற்குசெவிசாய்க்கவில்லை. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கா ஒரு நேர்காணலில் இலங்கையில் இதுவரை வந்த எந்த ஓர் அரசும் தமிழ் மக்களின் கோரிக்கையை நியாயமான முறையில் அணுகித் தீர்க்கவில்லை என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், 1975-இல் பிரிவினைக் கோரிக்கை தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்டது. நடைமுறைச் சாத்தியமாக இல்லாவிட்டாலும்கூட அரசியல் தீர்வுக்கான நிர்ப்பந்தமாகவே அது பார்க்கப்பட்டது. இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தொடர்ந்து நியாயமான தீர்வு காணப்படாத நிலையில் ஆயுதந்தாங்கிய பல்வேறு குழுக்கள் உருவாகித் தொடர்ச்சியான மோதல்கள் நடந்து வந்தன.

ஒரு நிலையில் இலங்கை ராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நீண்ட நெடிய மோதல் நடந்தது. இதை முடிவுக்குக் கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சமாதான முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கையெழுத்தான ராஜீவ் காந்தி -ஜெயவர்த்தன உடன்பாட்டில் பல சாதகமான அம்சங்கள் இடம் பெற்றிருந்தன. அந்த உடன்பாட்டையும் நடைமுறைப்படுத்தவில்லை.

### இறுதிப் போரில் மனிதப்படுகொலைகள்

இந்தப் பின்னணியில் 2009-ஆம்ஆண்டு இறுதிக்கட்ட மோதல் நடந்தது. "இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு ஆயுத மோதல் தீர்வாகாது. இப்போது நடந்து கொண்டிருக்கும் போரை முடிவுக்குக் கொண்டுவர இந்திய அரசும் ஐ.நா.சபையும் உடனடியாகத் தலையிட வேண்டும். விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதன் மூலம் ஓர் அரசியல் தீர்வு காண வேண்டும். இந்த மோதலில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை உடனடியாகத் தடுக்க வேண்டும்" என்று இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்கள் பலர் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால், ஐ.நா.சபையும் இந்திய அரசும் அதில் தலையிடாத நிலையில் ஒரு மிகப்பெரிய மனிதப் பேரழிவு நிகழ்ந்தது. அது தமிழ் மக்கள் நெஞ்சில் மாறாத வடுவாக உள்ளது. இறுதிகட்ட மோதலின்போது 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா.சபை நியமித்த குழுவின் அறிக்கை கூறுகிறது. உண்மையில் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருக்கும்.

"போர் நிறுத்தப் பகுதி' என்று அரசினால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் தஞ்சமடைந்த மக்களின் மீது கூட கொத்து குண்டுகள் வீசப்பட்டன. காற்றில் உள்ள பிராணவாயுவை இழுக்கும் வகையிலான வேதியியல் குண்டுகள் கூட பயன்படுத்தப்பட்டு மக்கள் மூச்சுத் திணறிச் சாகுமாறு செய்யப்பட்டனர். மருத்துவமனைகள், செஞ்சிலுவைச் சங்க மையங்கள் போன்றவை கூட குண்டு வீச்சிலிருந்து தப்பவில்லை. பெண்கள், குழந்தைகள் என குவியல் குவியலாக கொல்லப்பட்டனர் என்பதற்கு வலுவான சாட்சியங்கள் கிடைத்துள்ளன.

12 வயதுப் பாலகன் பாலசந்திரன் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டமை ராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனத்துக்கு சாட்சியமாக உள்ளது. இலங்கை ராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட ஏராளமான இளைஞர்களின் கதி இன்னமும் கூட என்னவென்று தெரியவில்லை. இறுதி கட்ட மோதலின் போது கடுமையான மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் நடந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. அப்படி எதுவும் நடக்கவில்லை என்று ராஜபக்ஷ அரசு கூறுவதை ஏற்க முடியாது.

போரின்போது முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்ட மக்கள் இன்னமும் கூட முழுமையாக மீள்குடியமர்த்தப்படவில்லை என்றே அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் ராணுவ முகாம்கள் இன்னமும் நீடிக்கின்றன. தமிழ் மக்கள் பாரம்பரியமாக வசித்த பகுதிகளில் சிங்கள மக்கள் திட்டமிட்டுக் குடியமர்த்தப்படுகிறார்கள். பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசால் கட்டப்படும் வீடுகள் சிங்களவர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என்ற தகவலும் கிடைத்துள்ளது. தமிழர்கள் வாழும் பகுதிகளில் திட்டமிட்டு பௌத்த ஆலயங்கள் நிறுவப்படுகின்றன. தமிழ் மக்களின் நிலம் ராணுவத்தினரால் பறிக்கப்படுகிறது என்றும் தகவல்கள் வருகின்றன.

இலங்கை இனப்பிரச்னைக்கு போர் தீர்வாகாது, அந்த மக்களின் நியாயமான உணர்வு புரிந்து கொள்ளப்பட வேண்டும், இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து கூடுதல் சுயாட்சி வழங்க வேண்டும். தமிழரும் தமிழரும் அனைத்து நிலைகளிலும் சமமாக நடத்தப்பட வேண்டும். அவர்களது சமூக - பொருளாதார, பண்பாட்டு, வாழ்வுரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

### தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும்

இலங்கையின் அண்டை நாடு என்ற முறையிலும், "சார்க்' கூட்டமைப்பில் இரு நாடுகளும் அங்கம் வகிக்கின்றன என்ற முறையிலும், அணி சேரா நாடுகளின் அமைப்பின் உறுப்பினர் என்ற அடிப்படையிலும், இலங்கையில் நடக்கும் நிகழ்வுகள் தமிழகத்தில் இயல்பாகவே பிரதிபலிக்கும் என்ற முறையிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண இந்திய அரசு அழுத்தம் தரவேண்டும். அதே நேரத்தில் தனி ஈழம் மட்டுமே இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைக்குத் தீர்வாக இருக்க முடியும் என்பது சரியல்ல.

ராஜபக்ஷவின் எதேச்சாதிகார ஆட்சிக்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி உள்ளிட்ட சிங்களவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கவுன்சிலில் வாக்கெடுப்பு நடந்த மார்ச் 21-ஆம் திகதியன்று ராஜபக்ஷ அரசு கட்டணத்தை உயர்த்தியுள்ளது.

சமீபத்தில் உயர்கல்வியை தனியார்மயமாக்கிட ராஜபக்ஷ அரசு முடிவெடுத்த போது அதை எதிர்த்து இலங்கை முழுவதும் தமிழ் மற்றும் சிங்கள மாணவர்கள் ஒன்றிணைந்து போராடி அரசின் முடிவை முறியடித்துள்ளார்கள்.

இவ்வாறு ராஜபக்ஷ அரசுக்கு எதிராக இன வேறுபாடின்றி நடைபெறும் ஜனநாயக இயக்கம் பலப்படக் கூடிய அடிப்படையில் இங்கு நமது அணுகுமுறை அமைய வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களின் இன்றைய உடனடித் தேவை தொடர்ச்சியாக நடந்த போரினால் சின்னாபின்னமான அவர்களது வாழ்க்கையைச் சீரமைப்பதுதான். அவர்களது பாரம்பரிய வாழ்விடங்களில் மீள்குடியமர்த்துவது, தமிழர்கள் வாழும் பகுதியிலிருந்து ராணுவத்தை விலக்குவது, போரினால் பாலைவனமாக மாறிவிட்ட பகுதிகளை புதுப்பிப்பது, நிலம், வேலை வாய்ப்பு, வழிபாட்டு உரிமை போன்றவற்றை நிலைநிறுத்துவது என்பதுதான் யதார்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டதாக அமையும்.

இறுதிக்கட்டப் போரின் போது நடத்தப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுயேச்சையான நம்பகத்தன்மை கொண்ட, இலங்கைக்கு வெளியில் உள்ள நீதிமான்களையும் உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதை இலங்கை அரசு ஏற்க வேண்டும். தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும்.

ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீடு தமிழ் மக்களின் பால் கொண்ட அக்கறையினால் அல்ல. அதன் ஆதிபத்திய சதுரங்க விளையாட்டில் ஒரு பகுதியே அதுவாகும். மேலும் வளர்முக நாடுகளில் தலையிடுவதற்கான ஒரு வாய்ப்பாகவே அமெரிக்கா இந்தப் பிரச்சினையைக் கருதுகிறது. மனித உரிமை மீறலில் வேறு எந்த நாட்டையும் விட அமெரிக்காவே முதலிடத்தில் உள்ளது.


இலங்கைத் தமிழர்களின் நிலைமை, அவர்களின் உடனடியான வாழ்வாதாரம் போன்ற இன்றைய யதார்த்த நிலைமையைக் கணக்கில் கொள்ளாமல் இங்கு கிளப்பப்படும் முழக்கங்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவாது. நீண்ட, நெடிய போரினால் வாழ்க்கை நிலைகுலைந்து கண்ணீரோடு வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் இனியேனும் நிம்மதியாக தங்களது சொந்த வாழ்விடத்தில் சமத்துவத்துடன் வாழ வேண்டும். அதற்கான அரசியல் தீர்வுக்கு நாம் போராட வேண்டும்! ★

*(நன்றி: தினமணி)*

கல்வி நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பில் அரசியல் செல்வாக்கு:

# ஒட்டுமொத்த அமைச்சரவைக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளை

கொழும்பு,ஏப். 24
கல்வி நிர்வாக சேவையில் சட்டத்துக்கு முரணான வகையில் வெளிநபர்களை இணைத்துக் கொள்வதற்கு எதிரான மனு ஒன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.



மேலும் அமைச்சரவை உறுப்பினர்களுக்கு கட்டளைகளையும் அனுப்பி வைத்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான சிசிர டி ஆப்ரூவின் உத்தரவின் பிரகாரம் அடுத்த மே மாதம் 15 ஆம் திகதியன்று நீதிமன்றம் முன் தோன்றுமாறு அமைச்சரவைக்கு கட்டளைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன உட்பட அமைச்சரவை, கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரத்ன, அமைச்சரவைச் செயலாளர் எஸ்.அபேசிங்க ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் அதன் உறுப்பினர்கள் 54 பேரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் சட்டரீதியான செயற்பாட்டு விதிக்கோவையைப் பின்பற்றாது, அமைச்சரவையின் தீர்மானமொன்றுக்கு அமைய 37 ஆயிரம் பேருக்கு பரீட்சையொன்றை நடத்தி, அவர்களுள் 12 ஆயிரம் பேர் சித்தியடைந்துள்ளதாகத் தெரிவித்து அவர்களுள் 410 பேரை இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தேர்ந்தெடுப்பதற்கு செயலாற்றி வருவதாக நீதிமன்றத்தில் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் அமைச்சரவையின் தீர்மானத்தை ரத்துச் செய்யுமாறும் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கான கட்டளையைப் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-22)

## கட்சிகளின் செயலாளர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் அழைப்பு



கொழும்பு,ஏப். 24
அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் 54 பேரை எதிர்வரும் மே 3 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்துக்கு வருகை தருமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பட்டியல்களை மீளாய்வு செய்வது உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் சந்திப்பின்போது ஆராயப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

நடைபெறவிருக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்படக் கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் வாக்காளர் பட்டியல்களை மீளாய்வுக்கு உள்ளாக்கப்படும் செயற்பாடுகள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப் படுவதால் இந்த ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல்களை மீளாய்வுக்கு உள்ளாக்கும் செயற்பாடுகளை அடுத்துவரும் மே முதலாம் திகதியில் இருந்து அதாவது ஒரு மாதத்துக்கு முன்னரே ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-22)

## இராஜதந்திர சேவை உயர் அதிகாரிகளின் பதவிகளில் மாற்றம்

கொழும்பு,ஏப்.24
இராஜதந்திர சேவையில் ஈடுபட்டுள்ள உயர் அதிகாரிகளின் பதவிகளில் திடீர் மாற்றம் ஏற்படுத்தப்பட உள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் லத்தீன், அமெரிக்க நாடுகளில் கடமையை மாற்றி வரும் அதிகாரிகளின் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளினால் பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை வெற்றிகரமாக எதிர்நோக்கும் நோக்கில் இவ்வாறு மாற்றங்கள் செய்யப்பட உள்ளன.

எதிர்வரும் மூன்று மாதங்களில் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



கட்டான தேர்தல் தொகுதியில் உள்ள ஹீணடியான என்ற இடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேறு மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்துவைத்தார்.

## வடக்கு, கிழக்கில் நிர்வாக சேவைக்கு புதிதாக இணைந்த 43 பேருக்கு களுத்துறையில் பொலிஸ் பயிற்சி

கொழும்பு, ஏப்.24
வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இருந்து இலங்கை நிர்வாக சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள 43 பேருக்கு களுத்துறைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பொலிஸ் விதிமுறைகள் மற்றும் சட்டத்தை நடைமுறைப் படுத்தல் தொடர்பான பயிற்சி நெறியொன்று களுத்துறையிலுள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் கடந்த 17 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.திலக்கசிறி தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி மூலமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பயிற்சி நிறுவன மான இலங்கை அபிவிருத் திகள் நிர்வாக நிறுவனத்தில் ஓராண்டு கால பயற்சி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


இந்த உத்தியோகத்தர்களுக்கு அரசின் பல்வேறு நிறவனங்களிலும் பயிற்சிகள் வழங்கப்படுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில், சுடுகலன்களை இனங்காணுதல், சுடுகலன்களைக் கையாளுதல், தற்பாதுகாப்பு பொலிஸ் முறைமைகள், சட்டத்தை நடை முறைப்படுத்தல், உடல், உளரீதியான பயிற்சி, ஆளுமை அபிவிருத்தி திறமைகள் அபிவிருத்தி, நீச்சல் உள்ளிட்ட ஏராளமான பயிற்சிகள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-22)

# கற்பிட்டிக் கடலில் 'டொல்பின்'களை கண்டுகளிக்கும் சுற்றுலா பயணிகள்

## நான்கு மாதங்களில் 30 லட்சம் ரூபா வருமானம்

புத்தளம், ஏப்.24
புத்தளம், கற்பிட்டிக் கடலில் ''டொல்பின்''களை முண்டியடித்துக் கண்டு களிக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து கடந்த நான்கு மாதங்களில் 30 லட்சம் ரூபா அறவிடப்பட்டுள்ளது.



கடந்த ஆண்டு நவம்பர் மூன்றாம் திகதியிலிருந்து முதற்தடவையாக டொல்பின்களை காணவரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான அனுமதிச் சிட்டை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

டொல்பின்களைக் காணவரும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளில் சிறார்களுக்கு பத்து ரூபா வீதமும் ஏனையோருக்கு இருபது ரூபாய் வீதமும் பணம் அறவிடப்படுகிறது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளில் வளர்ந்தவர்களுக்கு எட்டு அமெரிக்க டொலர்களும் சிறுவர்களுக்கு பத்து அமெரிக்கா டொலர்களும் அறவிடப்பட்டு வருகின்றது. கற்பிட்டி, இலந்தடிய, கண்டல்குழி ஆகிய மூன்று இடங்களில் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் நிரந்தர அலுவலகங்கள் அமைந்துள்ளன.

இந்த அலுவலகங்களினால் அனுமதிச் சிட்டைகள் வழங்கப்படுகின்றன. டொல்பின்களைக் கண்டுகளிப்பது தொடர்பாக சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இதன் பிரகாரம் டொல்பின்களைக் கண்டு களிப்பதற்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் 50 மீற்றர் தூரத்துக்கு மேலாகச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை .

மேலும் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தும் ஆர்ப்பாட்டமின்றியும் இவற்றைக் கண்டு களிப்பதன் காரணமாக இந்த உயிரினங்கள் முன்னர் எப்போதும் இல்லாதவாறு கற்பிட்டிக் கடற்பிரதேசத்தை நாடி வருவதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பொறுப்பதிகாரியான என்.சீ.திஸாநாயக்க தெரிவித்தார். (க-22)

## புற்றுநோய்க்கு விசேட மருந்துகள் கடந்த ஆண்டு ரூ.150 கோடி செலவு

கொழும்பு, ஏப்.24
புற்றுநோயாளர்களுக்கு விசேடமாகத் தேவைப்படும் மருந்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்கு கடந்த ஆண்டு 150 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

புற்று நோயாளர்களுக்கு வைத்தியசாலைகளில் வழங்கப்படும் மருந்து வகைகளைத் தவிர அதற்கு மேலதிகமாகத் தேவைப்படும் விசேட மருந்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்கே இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு விசேடமான மருந்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சரின் அனுமதி அவசியம் தேவைப்படு கின்றது.

வாரமொன்றுக்கு 50 வரையிலான கடிதக் கோவைகள் இது தொடர்பான சுகாதார அமைச்சரின் அனுமதிக்காக முன்வைக்கப்படுவதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டுகின்றது.

மேலும், புற்று நோயாளர்களுக்கு வழங்கப்படும் விசேடமான மருந்து வகைகள் சில 60 ஆயிரம் ரூபாய் முதல் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையிலான விலை மட்டங்களில் காணப்படுவதாகவும் அமைச்சு தெரிவிக்கின்றது.

இலங்கையில் 15 ஆயிரம் பேர் வருடாந்தம் புற்று நோயாளர் பட்டியலில் இணைந்து கொள்வதாகத் தெரிவிக்கும் சுகாதார அமைச்சு, நாட்டின் சனத்தொகையில் நூற்றுக்கு 9 சதவீதமானவர்கள் புற்றுநோயினால் துன்புறுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. (க-22)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதரர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலைமாறும்.

**இடபம்:** வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர் களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**மிதுனம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். பணவரவு உண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மன நிறைவு கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு உண்டு.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப் படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். முன்கோபத்தால் நல்ல வர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப் படுவீர்கள்.

**கன்னி:** யாருக்காகவும் பிணைகையெழுத்திட வேண்டாம். உறவுகளிடையே மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மேலதிகாரியை கலந்தாலோசித்து முடிவெடுப்பது நல்லது.

**நாளை**

*சித்திரை-12 வியாழக்கிழமை 25.04.2013*
*திதி: பூரணை பி.இ. 02.10 வரை*
*நட்சத்திரம்: சித்திரை பி.ப. 05.19 வரை*
*சுபநேரம்: 07.30- 09.00 வரை*
*இராகுகாலம்: 01.30- 03.00 வரை*

**துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். விருந்தினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

**விருச்சிகம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**தனுசு:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உறவினர்கள், நண்பர்களுடன் உரிமையுடன் பேசி பெயரை கெடுத்துக்கொள்ளாதீர்கள். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதர வகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**மீனம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | | 8 | | 2 | 6 | | |
| | | 2 | 6 | 5 | | 7 | 4 | |
| | | | 3 | | | | | |
| 8 | 6 | 4 | | 3 | | | 7 | 5 |
| | | 3 | | | | 4 | | |
| 2 | 7 | | | 6 | | 8 | 1 | 3 |
| | | | | | 6 | | | |
| | 3 | 5 | | 8 | 4 | 1 | | |
| | | 6 | 1 | | 3 | | 8 | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 2 | 8 | 4 | 1 | 6 | 9 | 3 |
| 1 | 6 | 4 | 7 | 9 | 3 | 2 | 8 | 5 |
| 9 | 8 | 4 | 2 | 6 | 5 | 7 | 1 | 4 |
| 4 | 5 | 7 | 3 | 1 | 6 | 8 | 2 | 9 |
| 8 | 3 | 9 | 4 | 7 | 2 | 5 | 6 | 1 |
| 2 | 1 | 6 | 5 | 8 | 9 | 3 | 4 | 7 |
| 3 | 9 | 5 | 6 | 2 | 4 | 1 | 7 | 8 |
| 6 | 4 | 8 | 1 | 5 | 7 | 9 | 3 | 2 |
| 7 | 2 | 1 | 9 | 3 | 8 | 4 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரை யான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுர்ங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ALL OUT
Pest control service
கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை
உத்தரவாதத்துடன்
பாதுகாத்துக் கொடுக்க
நாங்கள்
இருக்கின்றோம்




தொடர்புகளுக்கு
ந.ருபகாந்த் : 0771515897 , கு.கிருஷாந்தன் : 0771588022

## புதிய ஆசிரியர்களை ஆளுநர் சந்திக்கிறார்

யாழ்ப்பாணம், ஏப். 23

வடமாகாணப் பாடசாலைகளுக்கு புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களை வடமாகாண ஆளுநர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே வடமாகாணப் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற கணித, விஞ்ஞான பட்டதாரி மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி போதனாவியல் டிப்ளோமாதாரி ஆசிரியர்கள் தமது நியமனக் கடிதங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார். (16)

## நாதஸ்வர, தவில்இசைக்கச்சேரி

சண்டிலிப்பாய்-சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த சப்பறத் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இலங்கை-இந்திய கலைஞர்கள் இணைந்து வழங்கும் சிறப்பு நாதஸ்வர தவில் இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள கலைஞர்களான பட்டுக்கோட்டை எஸ்.குமார் (நாதஸ்வரம்) கலைமாமணி கே.ஜி.கல்யாண சுந்தரம் (சிறப்புத் தவில்), திருச்சி வி.வி.ரமணன் (தவில்) ஆகியோரும் நிகழ்வில் கானமழை பொழிவார்கள். (ந)

## மாதாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப். 23

யாழ்.மாநகர சபையின் ஏப்ரல் மாத பொதுக் கூட்டம் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் சி.தா.தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (16)

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கணினி இயக்குநர், கணக்காளர் தேவை. (பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

**தகைமைகள்**

**கணக்காளர் (உதவியாளர்)**

★ க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
★ ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்க வேண்டும்
★ முன்அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
★ கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
★ வயதெல்லை 23-35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கணினிஇயக்குநர்**

★ க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
★ MS Office நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
★ MS Excel முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
★ வயதெல்லை 21-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுய விவரக் கோவை, அடையாள அட்டை போட்டோ பிரதி, சான்றிதழ்களின் போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 30.04.2013 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல: 4450**
**C/O உதயன்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(36239)(6.7.11)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி A9 சாலையில் அமைந்துள்ள 35 அடி அகலமும் 75 அடி நீளமும் உடைய முதலாம் மாடிக் கட்டடத்தொகுதி, பிரித்து அல்லது முழுமையாக வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- 077 3500082

## புறோயிலர் குஞ்சு விற்பனைக்கு

நீயூ பேனாட், வகிறா, C.I.C கிறீன் வெலி, புசலாவ, சமீர இறைச்சிக் கோழிக்குஞ்சு வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு)
தொடர்பு- 0775959863
விநியோகத்தர்- மகா பாம் ஹவுஸ்

## விற்பனைக்கு

KJ XXXX இலக்க TERIOS SUN 100% JAPAN தயாரிப்பு 18000KM. டாக்டர் பாவிக்கும் வாகனம் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0773081905

## பத்தாம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்



அமரர்
**தொம்மை பிலிப்பு**

அன்னை மடியில்
20.05.1927

ஆண்டவன் அடியில்
24.04.2003

ஆண்டுகள் பத்து சென்றிடினும்
ஆறவில்லை எம் துயரம்
அவனியில் எம்மை ஆளாக்க
அயராது பாடுபட்டுழைத்த எம் அன்புத் தந்தையை
நன்றி உணர்வுடன் நினைக்கின்றோம் இந்நாளில்
நித்தமும் எம் மனதில் நிலை பெற்றிருக்கும்
நின் அன்பான வார்த்தைகளை எண்ணி
நெஞ்சுருகி வாழ்கின்றோம்
நின் ஆன்மா ஆண்டவரில் அமைதி பெற
இறையருள் வேண்டுகின்றோம்

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

கச்சாய் வீதி, கொடிகாமம். (36314)(16.14.09)

# மின்சார கட்டணம் அதிகரித்தும் கூட சபைக்கு 2,600 கோடி ரூபா நட்டம்

## புலம்புகிறார் சபையின் தலைவர்



கொழும்பு, ஏப்.24
ஏற்கனவே மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் மின்சாரசபை 2 ஆயிரத்து 600 கோடி ரூபாய் வரையிலான நிவாரண உதவிகளைத் தொடர்ந்தும் வழங்க வேண்டிய நிலையிலுள்ளதாக மின்சார சபையின் தலைவர் டபிள்யூ. பீ.கணேகல தெரிவித்துள்ளார்.

மின்சார சபையின் இந்த ஆண்டுக்கான ஒட்டு மொத்தச் செலவினம் 25 ஆயிரத்து 600 கோடி ரூபாவாக இருக்குமெனத் தெரிவித்த அவர், சபையின் வருடாந்த வருமானம் 17 ஆயிரத்து 800 கோடி ரூபாய் எனவும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய மின்சார சபையின் செலவினத்துக்கும் வருமானத்துக்கும் இடையிலான இடைவெளி 7 ஆயிரத்து 800 கோடி ரூபாவாக உள்ளது.

மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஆயிரத்து 750 கோடி ரூபாவையும், தனியார் துறையின் உற்பத்தி நிறுவனங்களுக்கு 2 ஆயிரத்து 100 கோடி ரூபாவையும், மக்கள் வங்கிக்கு 4 ஆயிரத்து 200 கோடி ரூபாவையும் செலுத்த வேண்டியுள்ளது. இதன் பிரகாரம் 8 ஆயிரம் கோடி ரூபா வரையில் கடன் தொகையைச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மின்சார சபைக்கு வழங்கி வரும் எரிபொருள்களின் விலைகளைக் கடந்த முதலாம் திகதியில் இருந்து அதிகரித்துள்ளது. (க-22)

## சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி



கொழும்பு,ஏப்.24
இலங்கையின் சுற்றுலாத் துறையில் இந்த மாதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று ஆங்கில வர்த்தக சஞ்சிகை ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது.

எனினும் சுற்றுலா அபிவிருத்தித் திணைக்களம் அதனை மறைத்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை குறித்த தகவல்கள் முன்கூட்டியே வெளியிடப்பட்டன.

எனினும் மார்ச், ஏப் ரல் மாத முதல் பகுதிக்கான சுற்றுலா அறிக்கை இன்னும் வெளியாகவில்லை.

சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத வீழ்ச்சியை சுற்றுலாத்துறை திணைக்களம் மூடிமறைத்து வருகிறது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களும் சுற்றுலாத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பதினைந்து மாணவர்கள் ஒவ்வாமையால் பாதிப்பு

கட்டுகஸ்தோட்டை,ஏப்.24
கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்துக்குட்பட்ட ஹத்தரலியத்த ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

அதனால் சுமார் 15 மாணவர்கள் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுகவீனமுற்ற மாணவர்களுக்கு வைத்திய சிகிச்சை பெறப்பட்ட பின்னர் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். இரண்டாம் தவணைக்கான நேற்று முன்தினம் பாடசாலை ஆரம்பமான நிலையிலேயே இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


## சேவை நலன் பாராட்டு

### தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா

(உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி)



*ஆறேழாண்டாசிரியப் பணியாற்றி யொழுகல்*
*ஆறே யறிவோடகங் குளிரச் சுவையாயீந்து ஆறவைத்து*
*ஆறிரண்டாண்டாலோசகராய்ப் பணிப்பாளரா யமர்ந்து*
*ஆறிது வென்று ஆரம்பக்கல்வித் தேர்ச்சி*
*-யைம்பதூட்டும் ஆசானே*
*ஆறுபத்தகவை வரவாறுமுகமுமழகிய புன்சிரிப்பும் ஆறாது*
*ஆறு; பற்றில்லா அறிவுயர அவனியொடக மூவப்ப வாழி வாழி*

| | |
|---|---|
| 1. யா/மட்டுவில் சந்திரமௌலீசா வித்தி | - 02.02.1972 - 28.02.1972 |
| 2. யா/கைதடி குருசாமி வித்தி | - 01.03.1972 - 31.12.1976 |
| 3. பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை | - 01.01.1976 - 31.12.1978 |
| 4. மா/கவு பெல்ல தமிழ் வித்தி | - 01.01.1979 - 30.03.1979 |
| 5. மா/பலாபத்வெல தமிழ் வித்தி | - 01.04.1979 - 31.12.1979 |
| 6. மா/இரத்தோட்டை இ.ம.வி | - 01.01.1980 - 30.04.1985 |
| 7. யா/மட்டுவில் சரஸ்வதி வித்தி | - 01.05.1985 - 30.07.1985 |
| 8. யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி | - 01.08.1985 - 30.04.1994 |
| 9. வலயக்கல்வி அலு. தென்மராட்சி | - 01.05.1994 - 25.04.2013 |

(C/9267)(10.6.7)

ஊழியர் நலன்புரிக் கழகம்,
தென்மராட்சி கல்வி வலயம், சாவகச்சேரி.



## ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

- நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வரட்சி, சருமவியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
- இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பசைகள் எம்மிடம் உண்டு.

### ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

- எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வரட்சி இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்க்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆஸவங்கள், தைலங்கள், சூரணங்கள், குளிகைகள், சிரப் வகைகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

### சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!

இல்லறத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற பாவியுங்கள் "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
தொலைபேசி: 021 222 2567
(சி/7245)(45.6.7)



## செபம்

எனது வேண்டுதலை ஏற்று, எனது மன்றாட்டுக்களுக்கு செவி சாய்த்த புனித கன்னி மரியாள், பூண்டிமாதா, சதாசகாயமாதா, வேளாங்கன்னிமாதா, அர்ச்.யூதாதேயு மற்றும் எல்லா அர்ச்சேஷ்டவர்களுக்கும் எனது நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.
**- உங்களது அடியாள்.**
(சி/9380)(6.2)

## கோழி விற்பனைக்கு

ஒரு மாதம், 2 மாதம், 3 மாதம் நிரம்பிய ஊர்க் கோழிகள், குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:சிவகுமாரன் பாம், கல்வியங்காட்டு சந்தி.
T.P- 077 684 5519
(36325)(6.7.11)

## லொறி விற்பனைக்கு

NP-GG XXXX இலக்கமுடைய கொமட் சுப்பர், Full Body லங்கா அசோக் லேடன் லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 787 2944
(36332)(6.7.11)

## காணிவிற்பனைக்கு

கிளிநொச்சி, கரடிப் போக்குச் சந்தியிலிருந்து ஒரு மைலுக்குள் உருத்திரபுரம் பக்கமாக குடியிருப்பதற்கும், வயல் செய்வதற்கும் உகந்ததான 6 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 773 0521, 077 704 6705
(36332)(6.7.11)

## வேலைக்கு ஆள்தேவை

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள
**புடைவைக் கடைக்கு**
ஆண், பெண் இருபாலாரும் 18-28 வயதுக்குட்பட்டவர்கள் தேவை.
முன்னனுபவம் விரும்பத்தக்கது.
நேரிலோ தொலைபேசியிலோ உடன் தொடர்புகொள்ளவும்
தொடர்பு: 077 736 3797
(36337)(6.7.46)
கொண்டாட்டம் ரெக்ஸ்ரைல்
பரமேஸ்வரா சந்தி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி சிவனேஸ்வரன் குலசெல்வராணி

*(ஓய்வுபெற்ற ஆசிரியர் சிவனேஸ்வரன் ரீச்சர்)*



வேலணை, வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவனேஸ்வரன் குலசெல்வராணி 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இராமலிங்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற இரத்தினசபாபதி மற்றும் சுபத்திராதேவி தம்பதியரின் மருமகளும், சிவனேஸ்வரனின் அன்பு மனைவியும், சுகீசனின் (மருத்துவ பீட மாணவன்-பலாரஸ் பல்கலைக்கழகம்) அன்புத் தாயும், குலசௌந்தரவதி, குலனேசவதி, குலராசவதி, பஞ்லக்சுமி, குலரஞ்சிதசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், நாகேஸ்வரன், ஜெகதீஸ்வரி, ஞானேஸ்வரி, கலாவதி, விக்கினேஸ்வரி, விக்கினேஸ்வரன் மற்றும் தனபாலசிங்கம், இராஜரட்ணம், மகாலிங்கம், மகேஸ்வரன், சந்திரவதனா ஆகியோரின் மைத்துனியும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.
077 720 3027

தகவல்:
இ.சிவனேஸ்வரன் (கணவர்)
சுகீசன் (மகன்).
(36336)(6.7.11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி




அமரர்
**பாலரத்தினம் விஜயராணி**
பிறப்பு
04.06.1954
இறப்பு
25.03.2013

கடந்த 25.03.2013 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் விஜயராணி அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று (24.04.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

3 ஆம் ஒழுங்கை,
முல்லை வீதி, பரந்தன்.

குடும்பத்தினர்.
(26292)(45.6.7)



# யாழ்ப்பாணம் வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்

## (நாச்சிமார் கோயில்)

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் 24-04-2013



### அருளாசிச் செய்தி

இன்று வண்ணையம்பதி காமாட்சி அம்பாள் ஆலயத்தில் தேர்த்திருவிழா. அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம் என்னும் வாக்குக்கிணங்க இன்று தேரேறி வரும் தேவியைச் சரணடைந்தால் இப்புவியில் சீரோடுஞ் சிறப்போடும் வாழலாம். ஆதிபராசக்தியின் அம்சமாக விளங்கும் அம்பிகை காமாட்சியின் தேர்த்திருவிழா சிறக்க அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

அன்னை ஸ்ரீ காமாட்சி நாச்சிமார் கோயில் என வழங்கும் இந்த ஆலயத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கின்றாள். தம்மை வணங்கி வாழும் அடியவர்களுக்கு நல்வாழ்வருளி நல்லருள்புரியும் நாயகியாக விளங்கும் காமாட்சித்தாயானவள் இந்த நல்ல நாளிலே சித்திரத்தேரிலே ஆரோகணித்து அருள்மாரி பொழிகின்றாள்.

வாழ்த்துவதற்கு வாயும் நினைப்பதற்கு நெஞ்சும் தந்த ஒரு தனிப் பெரும் இறைவியானவள் இன்று தேரேறிவந்து அடியார்க்கருளும் அன்னையாக அருள்பாலிக்கின்றமை நாம் செய்த புண்ணியப் பேறாகும்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், நல்லை ஆதீனம்.



### ஆலய பிரதம குருவின் ஆசியுரை

யாழ் நகரின் மத்தியிலே காங்கேசன் துறை பிரதான வீதியிலே அமைந்திருக்கின்ற நாச்சிமார் கோயில் என்று சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்ற வண்ணை குளங்கரை மருதடி காமாட்சி அம்பாள் ஆலயத்தில் அமர்ந்திருந்து அடியவர்க்கெல்லாம் அருளாட்சி செய்து கொண்டிருக்கும் அன்னை காமாட்சி அம்பிகையினது இரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. அழகிய சித்திரத்தேரிலே அம்பாள் அதிலாவண்ணிய சொருபிணியாக அமர்ந்திருக்க அம்பாளின் இரதோற்சவத்தை கண்டுகளிக்கும் அனைவரும் இப்பிறவியிலே செய்த பாவங்கள் அகன்று அனைவரும் வாழ்வில் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று வாழ்வாங்கு வாழ அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என்று அம்பாளைத் தியானிப்பதோடு, எமது நல்லாசிகளையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

சர்வே ஜனகா சுகினோ பவந்து

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ. நடராஜ குருக்கள்.



செல்வா மஹால்
செல்வா றெஸ்ரோரன்ற்
மங்களகரமான நிகழ்வுகளுக்குத் தேவையான அனைத்து உணவு வகைகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் இந்தியன், சைனீஸ், அமெரிக்கன், பிறைட்றைஸ் உணவு வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்
இல.1229, கே.கே.எஸ்.வீதி, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம்.
email:a www.chelvagroup.com. T.P 021 221 9779



சாருஜன் ஜுவெல் சிற்றி
22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள...
620, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

சிறந்த மில்க் வைற் சோப் பாவியுங்கள்
மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
527, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 1497

சகல விதமான அச்சுவேலைகளும் குறித்த தவணையில் நவீன முறையில் குறைந்த செலவில் உடன் செய்து கொள்ள நாடுங்கள்
சிவதயா பிறிண்டேர்ஸ்
575, கே.கே.எஸ்.வீதி,
(நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்).
T.P: 021 5672342

லம்போதரா
மிதிவண்டி திருத்துநரும் உதிரிப்பாக விற்பனையாளரும்
1006, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ அம்பாள் எலெக்ரிகல்ஸ்
கேற், கிறில் இரும்பு வெல்டிங் வேலைகளுக்கும் சிறந்த இடம்.
1039, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

Mangala
மங்களா காட்சியறை
Office & Home Furniture
MANGALA SHOW ROOM
536, K.K.S. Road, Jaffna.

B.K.மலிரி சொப்
மின்சார உபகரணங்கள் ரீவி அன்ரனாக்கள், P.V.C. பைப் வகைகள், கல்வனைஸ் பைப் வகைகள், பெயின்ற் வகைகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
1008, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 1447



ராஜா கிறீம் ஹவுஸ்
சரஸ்வதி மண்டபம்
இல.37, சேர் பொன் இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவில் அருகில், யாழ்ப்பாணம்.
T.P.: 021 320 7369, 021 222 1678

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6972, Fax : 021 222 8869
சாரங்கா நாணயமாற்று சேவை
151/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6972

செந்தூரன் எலெக்ரிக்கல்ஸ்
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

# சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா இன்று புதன் கிழமை நடைபெறும். காலை 7 மணிக்கு இடம் பெறும் வசந்த மண்டபபூசையை அடுத்து காலை 8 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருட்காட்சி கொடுப்பார்.
மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும். (வ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.24
நல்லூர் கைலாசபதிப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திரு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
அதனைத் தொடர்ந்து மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருவிழா ஆரம்பமாகி தினமும் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன. (வ-14)

★ ★ ★

சங்கானை நாச்சிமார் அம்மன் ஆலய கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.
கும்பாபிஷேகக் கிரியைகளை ஆலய பிரதம குரு சிவாச்சாரிய திலகம் சிவஸ்ரீ. கை. கிருஷ்ண குமாரக் குருக்கள், சிவாகம கிரிய தத்துவ சிவஸ்ரீ. ச.மு. ரவிக்குருக்கள் ஆகியோர் நடத்துவர். (வ)

★ ★ ★

புலோலி, புற்றளை சித்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல உற்சவம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. காலை 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி விஷேட பூசை, சுவாமி வீதி உலாவுடன் உற்சவம் நிறைவுறும். (ஒ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.24
வண்ணை நாச்சிமார் ஆலய வருடாந்த பெருந் திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும். மறுநாள் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (வ)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீமனோன்மணி அம்பிகா சமேத அண்ணமகேஸ்வரர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறும்.
அன்றைய தினம் காலை 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 11 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளி வீதியுலா வருவார். மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம் பெறும்.(வ)

# நாதஸ்வர, தவில் இசைக்கச்சேரி

யாழ்ப்பாணம், ஏப்.24
சண்டிலிப்பாய்-சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த சப்பறத் திருவிழா இன்று புதன் கிழமை நடை பெறவுள்ளது. நிகழ்வில் இலங்கை- இந்திய கலைஞர்கள் இணைந்து வழங்கும் சிறப்பு நாதஸ்வர, தவில் இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.
இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள கலைஞர்களான பட்டுக்கோட்டை எஸ். குமார் (நாதஸ்வரம்) கலைமாமணி கே.ஜி. கல்யாணசுந்தரம் (சிறப்புத் தவில்), திருச்சி வி.வி. ரமணன் (தவில்) ஆகியோரும் நிகழ்வில் கான மழை பொழிவார்கள். (ந)

## மானிப்பாயில் புத்தாண்டு விழா

மானிப்பாயில் புத்தாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.
இந்த விழாவை மானிப்பாய் பொலிஸார், மானிப்பாய் வர்த்தக சங்கத்தினர், சிவில் பாதுகாப்புக் குழுக்கள் இணைந்து கடந்த சனிக்கிழமை மானிப்பாய் அட்டகிரி மைதானத்தில் நடத்தியுள்ளனர்.
மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பேத் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வுக்கு ஓய்வு பெற்ற நீதிபதி வ.வசந்தசேனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கல விளக் கேற்றி ஆரம்பித்து வைத்தார்.
நிகழ்வில் கிறிஸ் மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, பெண்கள் கிடுகு பின்னல், பலூன் உடைத்தல், கயிறு இழுத்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.
காலை முதல் மாலை வரை இடம்பெற்ற இந்தப் போட்டியில் பங்கு பற்றியவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்பட்டன. (எ-100)

**சுஜீவா வைத்தியசாலை**
(தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுள் வேத வைத்தியசாலை)
விடுமுறை அறிவித்தல்
25.04.2013 வியாழக்கிழமை, 26.04.2013 வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களும் வைத்தியசாலை மூடப்பட்டிருக்கும். மீண்டும் 27.04.2013 சனிக்கிழமை முதல் வழமைபோல் இயங்கும்.
சேவை நேரம் Dr.ஜெ.ஜெயலன்
காலை 7.00-11.00
மாலை 3.00 -5.00
வெள்ளிக்கிழமை விடுமுறை (36341)(5.6.7)
தொ.பே.: 077 559 4147/021 568 5333
இல. 6, கலட்டி அம்மன் வீதி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**மின்சாரம் இல்லையா?**



எவ்வித எரிபொருள் செலவும் இல்லாது 24 மணி நேரமும் மின்சாரத்தை பெற்றுக் கொள்ளலாம்.
(20 வருட உத்தரவாதம் வழங்கப்படும்)

| | |
|---|---|
| ரூபா 18200/= இற்கு | 20w Solar, 25 AM Battery, 5 மின்குமிழ் (வயருடன்) Phone Charger |
| ரூபா 27800/= இற்கு | 40w Solar, 35 AM Battery, 6 மின்குமிழ் (வயருடன்) Phone Charger |
| ரூபா 87,600/= இற்கு | 100w Solar, 60 AM Battery, 7 மின்குமிழ் Phone Charger, 19" LED TV, DC Receiver |
| ரூபா 120,000/= இற்கு | DC Motor, 150w Solar, (100 தென்னைமரங்களுக்கு நீர் இறைக்கலாம்) |

சகலதும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
விவரங்களுக்கு:
JAFFNA TECHNICAL INSTITUTE
23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P: 0778249949
NEW ASIAN CENTER 56/15 B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
எமது நிறுவனத்தில்...



Digital Camera & Mobile Phone
திருத்திக் கொடுக்கப்படும்



மற்றும் எம்மிடம் Mobile Phone களுக்கான Display, Ribon, Charger, Battery, Touch Pad என்பன பெற்றுக் கொள்ளலாம்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி அ. மோகன ராஜலிங்கத்தின்
அன்புத் தாயார்
திருமதி பூமணி இராசரத்தினம்
அவர்கள் 14.04.2013 அன்று
இறைவனடி சேர்ந்ததையிட்டு
எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.
பாடசாலைச் சமூகம்,
யா/ நுணாவில் கிழக்கு அரிர்தாம்பிகை வித்தியாலயம்

# சாவகச்சேரி நகரசபை செயலருக்கு சேவை நயப்பு விழா

தென்மராட்சி, ஏப்.24
சாவகச்சேரி நகரசபையில் செயலாளராகக் கடமையாற்றி இளைப்பாறும் சுப்பிரமணியம் புத்திசிகாமணிக்கு நகர சபை சமூகத்தினர் நடத்தும் மணிவிழாவும் சேவை நயப்பு விழாவும் இன்று பிற்பகல் 3 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆசியுரையை தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலய போதகர் வண.பிதா செல்வநாயகம் நிகழ்த்த வாழ்த்துரையை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் , மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் த.அம்பலவாணர், கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை அதிபர் ஆ.தங்கவேல், இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர், கவிஞர் த.நாகேஸ்வரன், உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் நிர்வாக அலுவலர் எஸ். பாலச்சந்திரன் உட்பட பலர் நிகழ்த்துவர்.(வ-9)

# புதிய ஆசிரியர்களை ஆளுநர் சந்திக்கிறார்

வடமாகாணப் பாடசாலைகளுக்கு புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களை வடமாகாண ஆளுநர் இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இந்தக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
எனவே வடமாகாணப் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற கணித, விஞ்ஞான பட்டதாரி மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி போதனாவியல் டிப் ளோமாதாரி ஆசிரியர்கள் தமது நியமனக் கடிதங்களுடன் சமுகமளிக்குமாறு வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ஒ-16)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
யாழ் சுண்டிக்குளி கல்லூரி மாணவியும்
ஸ்ரீகாந்தன் - சிவகுமாரி ஆகியோரின்
சிரேஷ்ட புதல்வியுமான டிலக்சனா
நடைபெற்று முடிந்த க.பொ.த
சாதாரணதரப்பரீட்சையில்
6A 3B பெறுபேறுபெற்று
சித்தியெய்தியதைப் பாராட்டுகின்றோம்.
உறவினர்கள் (C/9228)

**கடை விற்பனைக்கு**
கிளிநொச்சி ஏ-9 வீதியிலுள்ள கரடிப்போக்கு சந்திக்கும் கந்தசாமி கோயிலுக்குமிடையில் உறுதிக்காணியில் அமைந்த இரண்டு கடைகள் ***(பழைய சிங்கர் கொம்பனி இருந்த கடைகள்)*** விற்பனைக்குள்ளன. தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கங்கள்
077 865 8595 077 584 1221
(காலை 6.00 - மாலை 6.00 மணிவரை) (36342)(6.2.7)

## வரையறுக்கப்பட்ட பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் வாடியடி, பூநகரி

## பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

**பதவி:** பொதுமுகாமையாளர்
**பதவி இலக்கமும்/ சம்பளக் குறியீடும்:** 101/06
(சுற்று நிருபம் 04/2012 இன்படி)
**பதவியின் தன்மை:** நிரந்தரம்
**சம்பள அளவுத் திட்டம்:** 11950-15300 (சுற்று நிருபம் 66/2006 இன்படி)
155 ×10-180×10
**சம்பளத்திற்கு மேலான படிகள்:** படிகள் அடங்காத சம்பளத்தின் 15% விசேட படி மற்றும் வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 5850.00 என்பன சுற்று நிருபம் 02/2012 இற்கு அமைவாக வழங்கப்படும். கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக் கப்படும் இதர படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்:**

அ. கூட்டுறவு ஊழியர் 07 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 08 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமமான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 08 ஆண்டு கால அனுபவம் இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 06வருட கால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 வருட கால அனுபவம் கட்டாயமாகும்/ க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 10 வருட சேவையாற்றிய அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

**வயதெல்லை:** 18 வயதிற்கு உட்பட்டவராகவோ அல்லது 45 வயதிற்கு மேற்பட்டவராகவோ இருத்தல் ஆகாது. எனினும் ஏற்கனவே கூட்டுறவு சேவையிலுள்ளவர்களிற்கு இவ் வயதெல்லை பொருந்தாது.
**அனுகூலங்கள்:** கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்குரிய சலுகைகள் அனுகூலங்கள் கிடைக்கப்பெறும்.

ஏற்கனவே வேறு கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களினை குறித்த கூட்டுறவுச் சங்கத்தினூடாகவே அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்வாறின்றி நேரடியாக விண்ணப்பத்தினை அனுப்பி வைத்திருப்பது தெரியவரும் பட்சத்தில் குறித்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் கடமையாற்றும் சந்தர்ப்பத்தில் தெரியவரும் பட்சத்தில் உடன் பதவியினை விட்டு விலக வேண்டிய நிலை ஏற்படும்.

**பிணை:** நிர்வாக சபையினால் தீர்மானிக்கப்படும் ரொக்கம், ஆதனப் பிணை செலுத்தப்படல் வேண்டும்.
**விண்ணப்ப படிவம்:** தாங்கள் சுயமாக தயாரித்தல் வேண்டும்.
**விண்ணப்ப முடிவு திகதி:16.05.2013**
**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:** தாங்கள் சுயமாக தயாரித்த விண்ணப்ப படிவங்களினை **தலைவர், வரையறுக்கப்பட்ட பூநகரி ப.நோ.கூ.சங்கம், வாடியடி, பூநகரி** எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ந.சுந்தரமூர்த்தி
தலைவர்
வரையறுக்கப்பட்ட பூநகரி ப.நோ.கூ.சங்கம், பூநகரி.
தொபே இல: 021 320 8076
(c/9388)(6.7.11)



வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட விக்ரோறியாக் கல்லூரியின் துடுப்பாட்ட அணியினர். தொடர்ந்து 4 வருடங்களாக விக்ரோறியாக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-86)

# யாழ். மாவட்ட மட்ட கரப்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.24
யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான மாவட்ட மட்டக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மற்றும் வசாவிளான் மகா வித்தியாலயம் என்பன சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.
இப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் ஆவரங்கால் நடராஜ ராமலிங்கம் வித்தியாலயத்தில் இடம் பெற்றன.
19 வயதுப் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் மோதின. இதில் 2:1 என்ற செற் கணக்கில் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாகியது.
இதில் மூன்றாமிடத்தினை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது.
அடுத்து இடம்பெற்ற 17 வயது பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், அளவெட்டி அருணாசலம் மகா வித்தியாலயமும் மோதின. இதில் மகாஜனக் கல்லூரி 2:0 என்ற நேர் செற்றில் அருணாச்சலம் மகாவித்தியாலயத்தைத் தோற்கடித்து சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தினை ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.



15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வசாவிளான் மகா வித்தியாலய அணியும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் மோதின இதில் வசாவிளான் மகா வித்தியாலய அணி 2:0 என்ற நேர் செற்றில் வென்று சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தினை சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (ற-400)

## யாழ்.மாவட்ட வலைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.24
யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் புதிய தலைவராக செல்வி ராதை அருளம்பலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன.
இதில் புதிய தலைவராக திருமதி ராதை அருளம்பலமும், உப தலைவராக திருமதி கே.உதயசுதாவும், செயலாளராக செல்வி திருச்செல்வம் துஷியாவும், உபசெயலாளராக சிவாஸ்ரீயும், பொருளாளராக ஐ.சசிக்குமாரும் தெரிவுசெய்யப்பட்டனர்.
இவர்களுடன் வலய ரீதியான நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.
யாழ்.வலயம் - எம். மதிவாணன், நல்லூர் வலயம்- ஆர். ஸ்ரீராமண், வலிகாமம்- எ.ரி.இன்பதாஸ், வடமராட்சி-சி.வசந்தகுமார், தென்மராட்சி- இ.சயிலன் மற்றும் தீவகம்-எஸ்.தயானி
அத்துடன் வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவி திருமதி ஏ.ஜே.எவ்.ரூபசிங்கம் பதவி வழியாக உபதலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ற-400)

கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத் தொடர்

# மூளாய் விக்ரோறி அணியை வீழ்த்தியது மானிப்பாய் பரிஸ்

வலி.வடக்கு, ஏப்.24
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தால் கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட விளையாட்டு கழக கிரிக்கெட் அணிகளுக்கிடையே நடத்தப்படும் 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்றில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்-கழகம் 104 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 223



ஓட்டங்களை பெற்றது.
வினோத் 54 ஓட்டங்களையும், கிஷோக்குமார் 53 ஓட்டங்களையும், ஹரிகரன் 36 ஓட்டங்களையும், துவாரகன் 20 ஓட்டங்களையும், சுபாஷ் 16 ஓட்டங்களையும், நிதர்சன் 14 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். உதிரிகளாக 26 ஓட்டங்கள் பெறப்பட்டன.
பந்துவீச்சில் மூளாய் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பில் பவன் 2 இலக்குகளையும், தனுஸன், விபுல், சுரேந்திரன் ஆகியோர் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் 28.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.
கணேஷ் 42 ஓட்டங்களையும், நகுலன் 24 ஓட்டங்களையும், சுசிந்திரன் 13 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றனர். உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன.
பந்துவீச்சில் நிக்ஷன் 3 இலக்குகளையும், யாழினியன் 2 இலக்குகளையும், வினோத் 2 இலக்குகளையும், துவாரகன், ஹரிகரன், சபேசன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற-86)

## வலைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவராக ரூபசிங்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.24
யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவியாக திருமதி ஏ.ஜே.எவ்.ரூபசிங்கம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.
யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்டத்தினை வளர்த்தெடுத்தல் உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதுடன் புதிய நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.
சங்கத்தின் புதிய தலைவாராக திருமதி ஏ.ஜே.எவ்.ரூபசிங்கம், உபதலைவராக திருமதி ஜெயானந்தகுமாரி சரவணபவ ஐயரும், செயலாளராக செல்வி எஸ்.மனோன்மணியும் , பொருளாலராக திருமதி மிதுலாரமணனும் உபபொருளாளராக திருமதி எல்.மகேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் நிர்வாக உறுப்பினர்கள் ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டனர். (ற-400)




வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை பெண்கள் அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி.

'ஓவர் கேம்' கரப்பந்தில்

# சம்பியனை வீழ்த்தியது சாவற்கட்டு மகாத்மா

யாழ்ப்பாணம், ஏப்.24
கல்வியங்காடு ஞானபாஸ்கரதேயா விளையாட்டுக் கழகத்தின் 93 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட 'ஓவர் கேம்' கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.
நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜி.பி.எஸ். விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் சம்பியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
3 சுற்றுக்களைக் கொண்ட ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி 15:12,15:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டு சம்பியனானது.(ற-23)

## பங்குபற்றும் அணிகள் விண்ணப்பிக்கலாம்



வல்வெட்டித்துறை, ஏப்.24
வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட மட்டத்திலான மென்பந்து கிரிக்கெட்டு சுற்றுத் தொடர் ஒன்று நடத்தப்படவுள்ளது.
10 பரிமாற்றங்களைக் கொண்ட 11 பேர் பங்குபற்றும் இந்தத் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# கரப்பந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப் 24
புது வருடத்தை முன்னிட்டு வெப்ரிஸ் திருச்சபையின் ஆதரவுடன் மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழகம் நடந்தும் ஆண் பெண் இருபாலருக்குமான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இந்தப் போட்டிகள் நாளை வியாழக் கிழமை புதிய பாரதி விளை யாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ற-23)


### மரதன் போட்டிகள் அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், ஏப்.24
வடமாகாண விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக ஆண், பெண் இருபாலாருக்குமான வேகநடை, மரதன் போட்டிகள் எதிர்வரும் மே மாதம் 4ஆம் 5ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ற-23)

### மெய்வல்லுநர் போட்டி சனிக்கிழமை

யாழ்ப்பாணம், ஏப்24
சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (ற-23)

# கெயில் அதிரடி; அதிர்ந்தது அரங்கு அடங்கியது புனே




கெயிலின் அதிரடியில் சிக்கிச் சின்னாபின்னமாகியது புனே வாரியர்ஸ். வெறும் 15 பந்துகளில் அரைச் சதத்தையும் 30 பந்துகளில் சதத்தையும் கடந்து தனது சாதனையை பெங்களூர் மைதானத்தில் நேற்றுப் பதிவு செய்தார் கிறிஸ்கெயில் .

ஐ.பி.எல். தொடரின் 31 ஆவது போட்டி புனே, பெங்களூர் அணிகள் மோதின.

நாணயச் சூழற்சியில் வென்ற புனே அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

அதன் பிரகாரம் முதலில் துடுப்பெடுத்தாட பெங்களூர் அணி சார்பில் கிறிஸ் கெயிலும் டில்சானும் களமிறங்கினர்.

சற்றும் எதிர்பாராத விதத்தில் புனே பந்து வீச்சாளர்களின் பந்துகள் கெயிலின் துடுப்பில் பட்டு நாலா பக்கமும் சீறிப் பாய்ந்தன.

தனது முழுப்பந்து வீச்சாளர்களையும் பயன்படுத்தி கெயிலின் அபார ஆட்டத்தை கட்டுப்படுத்த புனே பெரும் வியூகங்களை வகுத்தது.

எனினும் கெயிலுக்கு முன்னால் அவர்களின் பந்துவீச்சுக்கள் எடுபடவில்லை. தனக்கு கிடைத்த பந்துகளை ஆறு ஓட்டங்களாக மாற்றிக் கொண்டிருந்தார் கெயில் 5 ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே அணி 60 ஓட்டங்களைக் கடந்தது. கெயில் 15 பந்துகளில் 50 ஓட்டங்களை விளாசினார்.

மறுமுனையில் டில்சான் நிதானமாக ஆட அடுத்து 15 பந்துகளில் சதம் கடந்தார் கெயில்.

ஐ.பி.எல் போட்டியில் மிகக் குறைந்த பந்துகளில் 30 பெற்ற சதமாக இது பதிவாகியது.

11 பந்துப் பரிமாற்றங்களில் 150 ஓட்டங்களைக் கடந்தது பெங்களூர். இறுதியில் 5 இலக்குகளை இழந்து 264 என்ற மிகப் பெரிய இலக்கை புனேக்கு எதிராக நிர்ணயித்தது பெங்களூர் அணி. கெயில் இறுதிவரை



ஆட்டமிழக்காது 66 பந்துகளில் 17 சிக்ஸர்கள், 13 பவுண்டரிகள் அடங்கலாக 175 ஓட்டங்களை விளாசினார்.

அடுத்தடுத்துக் களமிறங்கிய டில்சான் (35) கோலி, வில்லியஸ் (31) திவாரி (12) ரம் உல்(0) வரிசையாக ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் டின்டா 2 இலக்குகளையும், மார்ஸ், ரைட் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

இமாலய இலக்காக விரட்ட களமிறங்கியது பூனே அணி இரண்டாவது பந்திலேயே உத்தப் பாவை (0) இழந்தது தொடர்ந்து வந்த வீரர்களாலும் நிலைத்து நிற்கமுடியவில்லை மளமளவென சரிந்தன இலக்குகள் 6 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 4 இலக்குகளை இழந்து தடுமாறியது பூனே இறுதியில் 9 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களை மாத்திரமே பூனே அணியால் பெற முடிந்தது.

ஆட்ட நாயகனாக அதிரடி சதம் விளாசிய கெயில் தெரிவானார். (ந-16)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
வாரநாள் புதிய பிரிவு
29.04.2013 திங்கள் கிழமை
பிரிவு 1 : காலை 9.00 - 10.00
பிரிவு 2 : மாலை 3.00 - 4.00
காலம் : 3 மாதம் கட்டணம் : ரூபா 3000 மட்டும்
அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்தோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் வகுப்பில் கலந்துகொள்ளலாம்.
பயிற்சி பற்றி அறிந்துகொள்ள முதல் வகுப்பில் இலவசமாக கலந்துகொள்ளலாம்.
29.04.2013 திங்கள் கிழமை பதிவுசெய்வோருக்கு ரூபா 500 பெறுமதியான புத்தகம் இலவசம்
ஷாம்சன் யாழ்நகர் 077 621 4567

வீடு விற்பனைக்கு
நவாலி கிழக்கு, சின்னப்பா வீதியில் உள்ள ஒரு பரப்புக்காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778998334 (சி/9394) (10,6,7)

## மரண அறிவித்தல்

### திருமதி ரதிதேவி பாலசிங்கம்



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரதிதேவி பாலசிங்கம் 22.04.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாரங்கபாணி-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், ஐயாத்துரை-ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கம் (களஞ்சியக் காப்பாளர், மகாராஜா நிறுவனம்) அவர்களின் அன்பு மனைவியும், பிரதீபா(ஆசிரியை, உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை), கௌதமி(லண்டன்), பிரகலாதன்(சிரேஷ்ட விரிவுரையாளர்,களனி பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும்,புஷ்பானந்தம் (உதவி நிலஅளவை அத்தியட்சகர், நெடுங்கேணி), ஜயந்தன் (லண்டன்), ஜீவனி (விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துளசிகா, ஸ்வஸ்திகன்,ஜனுஷன், ஸ்வானுகா ஆகியோரின் அன்புப் பாட்டியும், சுசிலாதேவி சாரங்கபாணி (பேரவை உறுப்பினர்,யாழ் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான ரங்கநாதலிங்கம், கணேஸ்வரி, கணநாதன், யோகேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,காலஞ்சென்ற வயாவிளான் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2013) புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு.

(36334)(5.6.7)

தகவல்:
பிள்ளைகள்.

விசேட கருத்தரங்கு
கிராம அலுவலர் தரம் - III போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன.
நேரம்: 3.00-6.00 P.M
மேலதிக தொடர்பு: 077 175 3838
ஐடியல்
மானிப்பாய்,
கிரீன் ஆஸ்பத்திரி பின் வீதி.

விசேட கருத்தரங்கு
கிராம அலுவலர் தரம்III போட்டிப் பரீட்சை விழிகாட்டல் கருத்தரங்கு.
ஆரம்பம் April- 25, 26,27 9.00- 4.00p.m
விரிவுரையாளர்கள்
P.உமாசங்கர்
N.P.கமல்தாசன்
அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்.
நாவலர் கல்வி நிலையம். ஆனைப்பந்தி, யாழ்நகர்.
T.P.0774696695

IDM Nations Campus
Jaffna Branch
Managed by Aharam Solution (Pvt) Ltd
#216, Navalar Road, Jaffna
OneDay Workshop
On Android Apps. Development
By an Industrial Developer
27th April 2013 (Saturday)
9.00 am - 3.00 pm
Tel:021 222 9901
Mob:077 5632056
Register on or before 27th April 2013
Avenue : #216, Navalar Road, Jaffna

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளது
வங்கியியல் கற்கைநெறிகள்
CBF&DBF
Chartered
CAB 1 & CAB 11
External degree
GAQ, BA1, BA (Final)
1st in com, BCOM(part 1), BCOM(part 11), BCOM(final)
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்
Further Details
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382

புதிய பிரிவுகள் ஆரம்பம்
29-04-2013(SAT)
Certificate course in English
(6 months)
Sat & Sun 8.30-12.30
Spoken Sinhala
(6 months)
Sat & Sun 7.00-9.00
Further Details
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிறர் பாரத்தைத் தாங்கக் கை கொடுத்தால் எமது பாரம் குறைவும் - ஆவ்பரி

# புதன் பொய்கை

A

உதயன் | ஏப்ரல் 24 2013 புதன்கிழமை | பக்கங்கள்: நான்கு

## தேவை கொஞ்சம்
# பெருந்தன்மை

■ ராஜராஜன்

தற்போதைய தலைமுறையினரிடம் பெருந்தன்மையைப் பிரதிபலிக்கின்ற நற்குணங்கள் அருகி வருவதைக் காணமுடிகின்றது.

நல்ல குணாதிசயங்களைக் கொண்டிருப்பதற்குத் தகைமைகள் எதுவும் தேவையில்லை. வயது வேறுபாடுகள் இல்லை. ஆண், பெண் என்ற பேதமும் குறுக்கே நிற்காது- ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வித்தியாசமும் கணக்கிடப்படமாட்டாது.

பெருந்தன்மையான குணங்கள் மனிதர்கள் அனைவரிடத்திலும் இருக்க வேண்டியவை.

இதற்கு மகாபாரதத்திலிருந்து ஒரு சிறந்த உதாரணத்தைக் கூற முடியும். குந்திதேவியின் மகனாகப் பிறந்த போதிலும் தேரோட்டியின் மகனாக வளர்ந்து கௌரவர்களின் நல்ல நண்பனாகத் திகழ்ந்தவன் கர்ணன். வில் வித்தையில் சிறந்து விளங்கிய அவன் துரியோதனனின் ஆத்ம நண்பனாக விளங்கினான்.

தேரோட்டியின் மகன் என்று கூறி அரச வம்சத்தினருக்குரிய கௌரவம் அவனுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனைக் கணையும் பொருட்டு ஒரு சிற்றரசனாக அவனது நிலையைத் துலங்கச் செய்தான் துரியோதனன்.

ஒருநாள் துரியோதனனின் மனைவியாகிய பானுமதியும், கர்ணனும் ஓய்வாக இருந்து தாயம் விளையாட்டில் சுவாரஸ்யமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது துரியோதனன் திடீரென அங்கே தோன்றினான். பானுமதி அவனைக்கண்டு விட்டாள். கர்ணன் துரியோதனனின் வருகையை அறியவில்லை. தனது கணவனைக் கண்டதும் பானுமதி விளையாட்டை நிறுத்திவிட்டுத் திடீரென எழுந்தாள். இதற்கான காரணத்தை அறியாத கர்ணன் அவள் எழுவதைத் தடுக்க முயன்றான். அப்போது அவனது கரத்தில் சிக்கிய பானுமதி அணிந்திருந்த மணிகளாலான ஆபரணமொன்று அறுந்துவிழ மணிகள் நாலாபுறமும் சிதறி ஓடின. அப்போது துரியோதனன் சம்பவ இடத்துக்கு வந்துவிட கர்ணன், பானுமதி ஆகியோர் தர்மசங்கடத்தினுள் தள்ளப்படுகின்றனர். ஆனால் துரியோதனன் இதனை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல 'மணிகளை எடுக்கவா கோர்க்கவா' என்றும் கேட்கின்றான்.

இங்குதான் துரியோதனனின் பெருந்தன்மைக்குணம் வெளிப்பட்டு நிற்கின்றது.

தனது மனைவியிடத்திலும், நண்பனான கர்ணனிடத்திலும் அவன் கொண்டிருந்த நம்பிக்கையின் வெளிப்பாட்டை இது எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொரு மனிதனிடத்திலும் இந்தக் குணம் அமைந்து விடுமாயின் உலகமே ஒரு சொர்க்கமாக மாறிவிடும்.

ஆனால் இன்று எம்மிடையே இத்தகைய குணங்கள் வெளிப்படுவதாகத் தெரியவில்லை. மனிதர்களின் இதயங்கள் அழுக்காறு நிறைந்து காணப்படுகின்றமையே இதற்கான காரணமாகும். இதனால் என்ன நடக்கின்றது?


ஒருவன் இன்னொருவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ தீங்கு செய்துவிட்டால் பாதிக்கப்பட்டவர் தமது வாழ்வின் இறுதி நாள்வரை அதனை மறப்பதில்லை. தனக்குத் தீமை செய்தவனை எந்த வகையில் தண்டிக்கலாம் என்ற சிந்தனையே அவரது மனதில் ஓடிக்கொண்டிருக்கும். இதனால் உணவையும் தூக்கத்தையும் கூட இவர் மறந்து விடுவார். ஒரு நோயாளி போன்றே இவர் மாறிவிடுவார். தனக்குத் தீமை செய்தவனை அவர் அந்தக் கணமே மறந்து மன்னித்திருப்பாரேயாகில் இந்த நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கவே மாட்டாது.

இதைப்போன்றுதான் அன்றாட வாழ்க்கையிலும் பல சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

நல்ல திடகாத்திரமும் உடல் ஆரோக்கியமும், அமையப்பெற்ற ஒருவர் பஸ் ஒன்றின் இருக்கையில் சாவகாசமாக அமர்ந்திருக்கின்றார். பஸ்ஸினுள் பிரயாணிகள் நெரிப்பட்டுக் கொண்டு வியர்வை வழிய அடைபட்டு நிற்கின்றனர். அப்போது கர்ப்பிணிப் பெண் ஒருத்தி வேறு வழியின்றி அந்தப் பஸ்ஸை மறித்து ஏறுகிறாள். நடந்துநர் அந்தப் பெண்ணுக்கு யாராவது ஒருவர் இருக்கையை விட்டுக் கொடுக்குமாறு உரத்த குரலில் விண்ணப்பிக்கின்றார்.

இந்தக் குரலைக் கேட்டதும் அதுவரை விழித்திருந்த அந்தக் குறிப்பிட்ட நபர் கண்களை மூடியவாறு உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவரைப் போன்று பாவனை செய்கின்றார். ஆனால் இயலாமையுடன் காணப்பட்ட வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் தமது இருக்கையில் இருந்து எழுந்து அந்தப் பெண்ணுக்கு இடம் வழங்குகின்றார். இதுதான் பெருந்தன்மைக் குணத்தின் இரு வேறு கோலங்கள்.

ஒரு தனி மனிதனில் இருந்து அதிகாரத்தில் இருப்போர்வரை பெருந்தன்மைக்குணம் அமைந்துவிட்டால் எத்தனையோ பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வு கிடைத்துவிடும். ஆனால் இந்த உயரிய குணம் மெல்ல மெல்ல மறைந்து வருவதையே காணமுடிகின்றது.



நாம் மற்றவர்களுக்கு அள்ளிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. எம்மால் இயன்ற சிறு உதவிகள், ஆறுதல் வார்த்தைகள் என்பனவே போதும். அவை மிகவும் பயனுள்ளனவாக ஏனையோருக்கு உதவும். இன்று ஜப்பான் நாட்டின் ஆத்ம நண்பனாகத் திகழும் அமெரிக்கா அந்த நாட்டின் பேரழிவுக்குக் காரணமாக இருந்துள்ளது.

ஜப்பான் தனது போர் விமானங்களின் மூலமாக அமெரிக்காவின் துறைமுகமொன்றைத் தாக்கியதற்குப் பதிலடியாக அமெரிக்காவினால் அணுகுண்டுகள் வீசப்பட்டன. இதனால் ஜப்பான் நாடு பேரழிவை எதிர்கொண்டது. பல தசாப்தங்களாக இதன் பாதிப்புக்களை அந்த நாடு எதிர்கொண்டது. ஜப்பானின் போர் வெறியை அடக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இந்த அணுகுண்டுகள் வீசப்பட்டாலும் அவற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏதுமறியாத அப்பாவி மக்களே. தான் ஒரு பெரிய நாடு மட்டுமல்ல ஏனைய உலகநாடுகளுக்கு வழிகாட்ட வேண்டுமென்றகடப்பாடு உள்ள நாடு என்பதை அன்று உணர்ந்து அமெரிக்கா பெருந்தன்மையுடன் நடந்திருந்தால் ஜப்பான் மக்கள் அந்தப் பேரழிவிலிருந்து தப்பித்திருக்க முடியும். ஆனால் நடந்ததோ வேறு.

தற்போது முழு உலகமுமே அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் கொரிய நாடுகளின் குமுறல் நிலை தவிர்க்கக் கூடியது. ஓர் இனம், ஒரே மொழி, ஒரு மதம் என்ற பிணைப்பைக் கொண்ட இந்த இரு நாடுகளிலும் ஒருவருக்கொருவர் உதவாத நிலையிலுள்ளவர்களும் வசிக்கின்றனர். ஏற்கனவே ஜேர்மனி, வியட்நாம் ஆகிய நாடுகளில் நிலவிய நிலைதான் இங்கும் காணப்படுகின்றது. ஆனால் எந்த வேளையிலும் போர் மூளலாம் என்ற அச்சத்தில் இருநாட்டு மக்களும் உறைந்து காணப்படுகின்றனர்.

இந்த இரு நாட்டின் தலைவர்களும் பெருந்தன்மையைக் கடைப்பிடித்தால் பெரும் அழிவுகளைத் தவிர்க்க முடியும்.


இல்லாவிட்டால் உலகப் போர் ஒன்று மூளும் அபாயநிலை தோன்றுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எமது நாடு இந்தியாவைப் போன்று பல்லினங்களைக் கொண்டதல்ல. சிங்களவர், தமிழ், முஸ்லிம்கள் என மூவின மக்களையே பெரும்பான்மையாகக் கொண்டது. அதிலும் முஸ்லிம்கள் தமது தாய் மொழியாகத் தமிழையே கொண்டுள்ளனர். ஆகவே சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளுக்கும் இடையில் வேறுபாடுகளை வளர்க்காது சமமாகப் பேணியிருந்தால் இந்த நாட்டிலே இடம்பெற்ற துயர சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்க மாட்டாது. ஆனால் பெரும்பான்மை இன ஆட்சியாளர்களின் அற்பத்தனத்தாலும் சிறுபான்மை இனத்தவர்களை மதிக்கின்ற பெருந்தன்மைக் குணங்கள் இல்லாததாலும் ஏராளமான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. பெரும் அழிவுகள் ஏற்பட்டன. இனங்களுக்கிடையில் களைய முடியாத அளவு வெறுப்புணர்வு ஏற்பட்டது.

இவ்வளவு அழிவுகள் ஏற்பட்ட பின்னரும் அதிகாரத்தில் இருப்பவர்களின் கண்கள் திறந்ததாகத் தெரியவில்லை. சிறுபான்மை இனத்தவர் மீது எள்ளளவு அனுதாபமும் அவர்களிடத்தில் ஏற்படவில்லை. இதன் விளைவுகள் எதிர்காலத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமே இல்லை.

ஆகவே ஒரு தனி மனிதனில் இருந்து அதிகாரத்தில் இருப்போர் வரை பெருந்தன்மைக்குணம் அமைந்துவிட்டால் எத்தனையோ பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வு கிடைத்துவிடும்.

ஆனால் இந்த உயரிய குணம் மெல்ல மெல்ல மறைந்து வருவதையே காணமுடிகின்றது. இதனால் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு காலம்தான் பதில் கூற வேண்டும். ★




# மன அழுத்தத்தை போக்க சில வழிகள்...

இன்றைய சுறுசுறுப்பான வேலை பளுமிக்க நம் வாழ்க்கை முறையில், மன அழுத்தம் என்னும் தவிர்க்க இயலாத ஒரு அங்கமாகவே மாறித்தான் போய்விட்டது.

நமக்கு ஏற்படும் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த, மனதை அழுத்தத்தில் இருந்து வேறு ஏதாவது சிந்தனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். நாம் செய்யும் செயல்கள் நமக்கு பிடித்த விடயமாக மட்டுமில்லாமல் அது நம் கவலைகளையும் மறக்கச் செய்வதாக இருக்க வேண்டும்.

மன அழுத்தத்தைக் குறைக்க சில வழிகள் வருமாறு:-



**புத்தகம் படிப்பது**

புத்தகம் படிப்பது என்பது மன அழுத்தத்தைக் குறைக்கும் ஒரு சிறப்பான வழி. படிக்க நல்ல புத்தகங்களை வைத்திருந்தால், அவைகளைப் படிக்க ஆரம்பிக்க வேண்டும். இதனால் அறிவு வளர்வதோடு, மனமும் நல்ல புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

**யோகாசனம்**


தினசரி யோகாசனப் பயிற்சி செய்வதால் உடம்பிலுள்ள தசைகள் நன்கு விரிவடைந்து ஓய்வு பெறும். அதனால் மன அழுத்தம் குறையும். யோகாசனத்தால் உடம்பு விரிவடையும் பொழுது மனம் சாந்தமாகி பின்னர் அமைதி அடையும்.

**இசையைக் கேட்பது**

கூடுதலான மன அழுத்தம் ஏற்படும் நேரத்தில் முதலில் செய்ய வேண்டியது நல்ல இசையை கேட்டு மகிழ்வதே. இசை நமது மனதுக்கு இதமானதாக இருக்கும். மேலும் நமக்கிருக்கும் துன்பங்களை மறக்கச் செய்யும். எனவே துன்பம் தரும் விடயங்களால் ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைக்க இசை பெரிதும் உதவி புரிகிறது.

# உலகில் நீளமான 'றோல் கேக்'

உலகில் மிக நீளமான றோல் கேக் ஜப்பானில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கேக் டோக்கியோவில் உள்ள கல்லூரி ஒன்றில், 90 சமையல் கலைஞர்களும், மாணவர்களும் இணைந்து உருவாக்கி உள்ளனர். இந்தக் கேக் 130.68 மீற்றர் நீளம் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கேக் உலகில் மிக நீளமான கேக் என கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.







உலகில் மிக நீளமான றோல் கேக் என கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.





# உஷ்ணத்தை குறைக்க தர்ப்பூசணி

கோடையில் தாகத்தைத் தணிப்பதற்கு தர்ப்பூசணி ஒரு சிறந்த பழம். இத்தகைய பழத்தை அப்படியே சாப்பிடப் பிடிக்காதவர்கள், அதனை ஜூஸ் போன்று செய்து அருந்தலாம்.

மேலும் அதிக பசியுடன் இருப்பவர்கள் தர்ப்பூசணி ஜூஸைக் குடித்தால், பசி அடங்கிவிடும். மேலும் உடல் எடையைக் குறைக்க நினைப்போருக்கும் இந்த ஜூஸ் சிறந்தது.

கோடை காலத்தில் இதன் விளைச்சல் பன்மடங்காக இருக்கும். அந்தந்தப் பருவத்தில் கிடைக்கும்போது அதனை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



# நீளமான கண் இமை

சீனாவைச் சேர்ந்த பெண்ணொருவர் கண் இமையை நீளமாக வளர்த்ததன் மூலம் உலகின் மிக நீளமான கண்ணிமைக்கு சொந்தக்காரர் என்ற சாதனை படைத்துள்ளார்.

கண் இமையில் இவ்வளவு அதிகமான முடிகள் வளர்வதற்கு சாத்தியம் இல்லையென்றாலும், சில ஹோமோன் சுரப்பிகள் மூலம் தலைமுடி போல கண்ணிமையும் வளரலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.



# குளத்தின் நடுப்பகுதி சென்று பார்க்கலாம்

வழக்கமாக குளங்களைப் பார்வையிடுபவர்கள் அதன் ஓரத்தில் நின்றே ரசிக்க வேண்டும்.

ஆனால் ஆஸ்திரேலியாவில் அமைந்துள்ள குளமொன்றில் அதன் நடுப்பகுதி வரை சென்று திரும்ப முடியும்.

# எங்கள் நாடு

ஈழம் எங்கள் தாய்நாடு
இணையில்லாத நன்னாடு
நாளும் அதன் புகழ்பாடு
நன்றாய் வாழ வழிதேடு
உழவும் தொழிலும் வளர்நாடு
உத்தம குணங்கள் நிறைநாடு
பழகும் தமிழும் சிங்களமும்
பண்பாய் வளரும் தாய் நாடு
ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாய்
ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்
பெரிதாய் வேற்றுமை காட்டாமல்
பிறந்த நாட்டைக் காத்திடுவோம்

க.கீர்த்தனன், தரம்-10எ,
யா/ கைதடி விக்கினேஸ்வர வித்தி.




# உலகின் சிறப்புக்கள்

★ மிகப் பெரிய நூலகம் உள்ள இடம்?
மாஸ்கோ
★ பெரிய செய்தி நிறுவனம்?
ராய்ட்டர்
★ இலத்திரனியல் பொருள்களின் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது?
ஜப்பான்
★ நதியே இல்லாத நாடு?
சவுதி அரேபியா
★ கார்களை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு?
அமெரிக்கா
★ அஞ்சல் துறையில் சிறப்புற்ற நாடு?
இந்தியா
★ வைரத்தை அதிகமாக வெட்டி எடுக்கும் நாடு?
தென் ஆபிரிக்கா
★ அதிக எடை உள்ள பறவை?
ஊமை அன்னம்
★ முதலில் பெண்களுக்கு வாக்குரிமை தந்த நாடு?
நியூசிலாந்து
★ மிக உயரமான மேட்டு நிலம்?
திபெத்
★ பெரிய அரண்மனை உள்ள நாடு?
வத்திக்கான்
★ உயரமான சுதந்திர சிலை உள்ள நாடு?
அமெரிக்கா
★ வேகமாக ஓடும் பறவை?
தீக்கோழி
★ உலகின் கூரை?
திபெத்

நேச.வித்யாசாகர்,
கிளிநொச்சி.

# உதவிக்கு வந்த உருளைக்கிழங்கு!



நாள் முழுவதும் மாங்காய்களை விற்றுவிட்டு, கூடையுடன் கிளம்பினாள் அங்கம்மாப்பாட்டி. வழியில் சமையலுக்கு உருளைக்கிழங்கும் வெங்காயமும் வாங்கிக்கொண்டு வீடு திரும்பினாள்.

உருளைக்கிழங்குகளை ஒரு சட்டியில் போட்டுத் தண்ணீர் ஊற்றினாள். அடுப்பில் வைத்துவிட்டு வெங்காயம் வெட்ட உட்கார்ந்தாள். அப்போது ஓர் உருளைக்கிழங்கு மட்டும் சட்டியில் இருந்து குதித்துக் கீழே உருண்டது.

''ஷ்... ஆ... என்ன பாட்டி இப்படியா ஒரேயடியாக நெருப்பை அதிகமாக்குவது'' என்றது உருளைக்கிழங்கு. பாட்டிக்கு ஆச்சர்யம். குட்டிக் குட்டி கைகாலுடன் அந்த உருளைக்கிழங்கைப் பார்க்கவே சிரிப்பாக இருந்தது.

''பேசும் உருளையே, நீ எப்படி இங்கே வந்தாய்?'' என்று கேட்டாள் பாட்டி

''நானா வந்தேன்? கடைக்காரன் உங்களிடம் தூக்கிக் கொடுத்துட்டான். இனிமேல் இங்கேயே இருக்கப் போகின்றேன். பசிக்குது சோறுபோடு'' என்றது அது.

''சோறு சமைத்துத்தான் தரவேண்டும். கொஞ்சம் பொறு. விறகு கொத்திக் கொண்டு வருகிறேன்'' என்றாள் பாட்டி.

''அதை நான் பார்த்துக்கிறேன் பாட்டி. நீங்கள் வேற வேலையைப் பாருங்கள்'' என்று சொல்லிவிட்டு, உருண்டுபோனது உருளைக்கிழங்கு.

சற்று நேரத்தில் உருளைக்கிழங்கு இருக்கிறதா, இல்லையா எனப் பார்க்க வெளியில் வந்தாள் பாட்டி. அவளால் நம்பவே முடியவில்லை. வீட்டு வாசலில் அத்தனை விறகுகளும் கொத்தப்பட்டு இருந்தன. ''போதுமா?'' என்று கை கால்களை உதறியபடி கேட்டது உருளைக்கிழங்கு.

சற்று நேரத்தில் சாப்பிட உட்கார்ந்தது. அதற்கு ஒரு கை சோறு போட்டுக் குழம்பு ஊற்றினாள் பாட்டி. ''இது எந்த மூலைக்கு? தட்டு நிறையச் சோறு போடுங்கள்'' என்று கத்தியது உருளை.

ஒரு தட்டுச் சோற்றையும் தின்றுவிட்டு, ''இன்னும்... இன்னும்...'' என்றது. பாட்டி கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்துவிட்டாள். ''உனக்குச் சோறு போட்டு எனக்குக் கட்டுபடி ஆகாது. போய் சம்பாதிச்சுட்டு வா'' என்றாள்.

''அவ்வளவுதானே'' என்று கிளம்பியது உருளைக்கிழங்கு. அது உருண்டு உருண்டு வீதிக்கு வந்தது. அங்கே மரத்தடியில் ஒரு தச்சன் நாற்காலி, மேசைகள் செய்துகொண்டு இருந்தான்.

''தச்சர் அண்ணே... இவ்வளவு பெரிசா மேசை நாற்காலி செய்து போட்டால் எப்படி விற்கும்? கொண்டா இழைப்புளியை'' என்ற உருளைக்கிழங்கு, சரசரவென அழகான பூக்கூடைகள், பூந்தொட்டிகள், சின்னச் சின்னக் கலைப் பொருட்கள் எனச் செய்தது.

சற்று நேரத்தில் அந்த வழியே வருவோர் போவோர் எல்லோரும், ''அடேடே... ரொம்ப நல்லாயிருக்கே'' என்றார்கள். கொஞ்ச நேரத்தில் சகலதும் விற்று முடிந்தன.

தச்சன் மிகவும் சந்தோஷப்பட்டான். ''உருளைக் கிழங்கே... என் கஷ்டம் தீர்ந்தது. இந்தா உன் வேலைக்கான பணம்'' என்று கொஞ்சம் பணம் கொடுத்தான்.

உருளைக்கிழங்கு பணத்துடன் தேவையான அரிசி, பருப்பு ஆகியவற்றை வாங்கிக்கொண்டு பாட்டி வீட்டுக்கு வந்தது. பாட்டியிடம் எல்லாவற்றையும் கொடுத்தது. ''பாட்டி நான் கிளம்புறேன்'' என்றது.


''அட, நீ எதுக்குப் போகனும்? இங்கேயே இரு'' என்றாள் கிழவி.

''இல்லை. நீ மாங்காய் விற்றுப் பிழைக்கிறே. இந்த வயசான காலத்திலேயும் சுறுசுறுப்பா இருக்கிறே. உனக்கு இனி என் உதவி தேவை இல்லை. நான் கிளம்புறேன்'' என்றது.

உருளைக்கிழங்கு கிளம்பிவிட்டது. உதவி தேவைப்படுகிற இடத்தில் அதை நிச்சயம் பார்க்கலாம்.



# புவியைக் காக்க 10 உறுதி மொழிகள்!





நாம் வாழும் பூமியைக் காப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதமாக, ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் 22-ஆம் திகதியை புவி தினம்' எனக் கொண்டாடுகின்றோம். 1969-இல் சான்ஃப்ரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற யுனெஸ்கோ மாநாட்டில், ஜான் மெக்கன்னல் என்பவர்தான் இப்படி ஒரு தினத்தை அனுசரிக்க வேண்டும் என்பதை முன்மொழிந்தார்.

இந்தத் தினத்தை 192 நாடுகள் அனுசரிக்கின்றன. பூமியைப் பாதுகாப்பதை நோக்கமாகக்கொண்ட இந்த தினம், சுற்றுச்சூழல் மாசு அடையாமல் காப்பது மற்றும் போர், வறுமை மற்றும் அநீதிகளுக்கு எதிராகச் செயல்படுவதன் முக்கியத்துவத்தையும் உணர்த்துகிறது. புவி வெப்பம் அடைவதைத் தடுத்து, புவியைக் காத்திட, மாணவர்களாகிய நம்மால்கூட முடியும். இதற்கு நாம் அன்றாட வாழ்வில் பின்பற்றுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழிகள்:

இயன்றவரை பிளாஸ்டிக் பொருள்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பேன். ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் ஒரு மரக்கன்று நடுவேன். நண்பர்களின் பிறந்தநாளுக்கு மரக்கன்றுகளைப் பரிசாகக் கொடுப்பேன்.

என் பெற்றோர் பயன்படுத்தும் வாகனங்களில் இருந்து வெளிவரும் புகை, குறிப்பிட்ட அளவுக்குள் இருக்கிறதா எனச் சோதிக்கச் சொல்வேன். என் வீடு, பாடசாலை என அனைத்து இடங்களிலும் தண்ணீர் வீணாவதைத் தடுப்பேன். மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன். பெற்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களால் இயங்கும் வாகனங்களைப் பயன்படுத்துவதைக் குறைத்து, அருகில் உள்ள இடங்களுக்கு நடந்தோ அல்லது சைக்கிளிலோ செல்வதைப் பழக்கமாகக்கொள்வேன்.

என் வீட்டில் குண்டு பல்புகளை மாற்றிவிட்டு, சி.எஃப்.எல். விளக்குகளைப் பொருத்தச் சொல்வேன். கண்ட இடங்களில் குப்பை கூளங்களைப் போடாமல் தடுப்பேன். வீதிகளில் எச்சில் துப்புவது, பொது இடங்களைக் கழிப்பிடமாகப் பயன்படுத்துவது போன்றவற்றைத் தடுப்பேன். புவி வெப்பம் அடைதல், காலநிலை மாற்றம் தொடர்பாகப் பேரணி, கண்காட்சிகள், இசை நிகழ்ச்சிகள், வீதியோர நாடகங்கள் மூலம் விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்வேன்.

# சாவுக்கே சவால் விட்ட சரித்திர பூமி ஈழம்



-வலையவன்-

மரணங்கள் மலிந்த பூமி எது என்று கேட்டால், ஈழத்தில் உள்ள இறைவனுக்குப் பேசும் சக்தியிருந்தால் அவன் தன் சுட்டு விரலால் தொட்டுக் காட்டுவான் அது ஈழம் தான் என்று. வெளித்தெரியாத பல ஜீரணிக்க முடியாத ரணங்கள் உள்ளே அமிழ்ந்து, புதைந்து கிடக்கும் ஒரேயொரு பூமியாக உள்ளது எது என காலத்திடம் கேட்டால், அதற்குப் பேசுகின்ற வல்லமையிருப்பின் அதுவும் கூறும் ஈழம் தான் என்று. உள்ளே கனன்று எரிந்த பெரு நெருப்பின் பின்னர், புதைந்து போன அகழ்வுகளை இலகுவில் கண்டறிந்து விட முடியாதவாறு வெள்ளரசுகள் மீது சுட்டித்தொப்பிகள் கவிழ்க்கப்பட்டு அசையும் உயிரினங்களாக நடப்பட்டிருக்கிறது.

காட்சிகளாய் பலவற்றை கண்டவர்களின் உயிர் மூச்சுக்கு ஆயுத அழுத்தம் கொடுக்கப் பட்டு, வெளியே ஏதும் பேச வாய் திறக்க மாட்டாதவர்களாக நாக்கு கிழித்துத் தொங்கும் தோரணங்கள் போல காற்றில் அசைய விடப்பட்டிருக்கிறார்கள். நடைப் பிணமாய் அந்தரிக்கும் பல ஜீவன்கள், சுற்றி வளைக்கப்பட்ட முட் கம்பி வேலியினுளிருந்து இன்றும் முனகும் உயிர்களின் அவலக் குரல்கள் என எல்லாவற்றையும் பார்த்தும் பாரமுகமாய் தன் நாளாந்த நாழிகைகளை நகர்த்துகிறாள் ஈழத்தாய்.

ஈழத் தாயவள் ஒரு காலத்தில் குளிர்ச்சியுற்றிருந்தாள். தன் மேனியில் வரி கொண்ட தேகங்கள் நடந்து, கொற்றவைக்கு வீரம் எனும் குளிர்த்தி நிறை அர்ச்சனைகள் செய்யப்பட்டு நாளும் வெற்றி எனும் நாமம் வாசலில் பொறிக்கப்பட்டிருந்ததால் ஈழத் தாய் இன்புற்றிருந்தாள். சாவு வரும் வழி எதிர்பார்த்து சரித்திரம் படைப்பதற்காய் காவல் இருந்தவர்கள் பல பேர் கொற்றவை எனும் வீரத்தின் தெய்வத்திற்கு தம் இன மானத்தால் திருமுழுக்காட்டினார்கள்.

இன்றோ, நாளையோ இறப்போமென நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவருக்கோ, உடலெல்லாம் இயக்கமற்று இருக்கும். ஒவ்வோர் நொடிகளையும் அச்சத்துடன் கழிக்க வேண்டும் எனும் ஏக்கம் நிறைந்திருக்கும். ஆனால் இதோ சாகப் போகிறோம் எனச் சந்தோசமாக வழியனுப்பும் சூரியனுக்கு கையசைத்து விட்டுச் சென்று சாவார்களே, அவர்களின் இறுதி நிமிடம் வரை மனதில் பயமேதுமிருக்காதாம்.

தங்களால் நாளை ஓர் இனத்தின் இளம் பிஞ்சுகள் சிரித்து மகிழ்வார்கள் எனும் நம்பிக்கையில் சென்றார்களா? இல்லை தொலை நோக்குப் பார்வையுடன் வேள்வி செய்த ஒருவனின் மானத்தை நிலை நாட்டச் செத்தார்களா? எதுவும் இலகுவில் அவர்களிடமிருந்து அறியமுடியாது- காரணம் அவர்கள் ஒவ்வோர் அசைவும் ஒரு காலத்தில் பிறர் அறிய முடியாதிருந்தது. காட்சிப் பிறழ்வுகள் போல திடுதிப்பென மாற்றங்களை உருவாக்கக் கூடிய காவற் தெய்வங்களாக அவர்களிருந்தார்கள்.

வேகம் எடுக்கும் விழிகளுக்குப் பின்னாலே இடம் பெறும் நிகழ்வுகளை அவர்களைக் கடந்து செல்லும் காற்றாலும் அறிய முடியாது. தாகம் எடுக்கையிலும் தமிழே வேண்டுமென தமிழ்ப் பால் குடித்த மறவைர்கள் வாழ்ந்த நிலம் ஈழம். நாம் கூனிக் குறுகி கும்பிட்டு வாழ்கையில்; நாம் இருக்கிறோம் என உணர்த்தி அடிமைத் தளையுடைத்த அற்புத மனிதர்கள் அவர்கள். இன்றோ நாளையோ எமைச் சாவு சூழ்ந்து கொள்ளும் எனும் அச்சத்துடன் வாழ்வது எவ்வளவு கொடுமையானது, ஆனால் இந்தா இதோ போய்ச் சாகிறோம் எனச் சிரித்தபடி- உதட்டோரம் ஒரு புன்னகையை உதிர்த்து விட்டுப் போய்ச் சாவதென்பது இவர்களால் எப்படிச் சாத்தியமானது? வரலாறே இவர்களைக் கண்டு அச்சப்பட்டிருக்கும். வானம்- முகில் - ஈழத்தின் காற்று இவையெல்லாம் இவர்களின் நகர்வுகளை உய்த்தறிய முடியாது ஏக்கம் கொண்டிருக்கும்.

வாழ்வில் ஒரு தடவையாவது அடிமைப்பட்ட இனம் நிமிர்ந்திருக்கிறதென்றால் அது இவர்களால் தானே சாத்தியம். முன்னொரு காலத்தில் ஈழம் சாவுக்குச் சவால் விட்டுக் காத்திருந்தது என்றால் அதுவும் இவர்களின் பிறர்க்கென வாழும் பண்பால் தானே நிரூபணம்! இன்று இவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் இல்லையென பலர் பேசுகிறார்கள். ஆனால் ஈழ வானில் தோன்றும் விடிவெள்ளிகளாகவும், நட்சத்திரங்களாவும் மேலிருந்து அவர்கள் ஏக்க விழிகளுடன் பார்த்திருப்பதை இறியாமலலவா அவர்கள் பேசுகிறார்கள்.

நாளை பிறக்கும் தமிழ்க் குழந்தையின் மூச்சுக் காற்றில் கலந்துமிருப்பார்கள். யாரால் இவர்களின் பிறப்பினை அறிய முடியும். சூட்சுமம் அறிய முடியாத நவீன மனிதர்கள் அவர்கள். அடிமைப்பட்டு அடங்கியிருந்த ஓர் இனம் பற்றி உலகம் தம்மால் தான் அறிந்து கொண்டது எனும் நிம்மதிப் பெரு மூச்சில் காணாமற் போய்விட்டார்களோ தெரியவில்லை. ஆனாலும் நாளை ஒரு சந்ததி நன்றாய் வாழ வேண்டுமென்பதற்காய் தம் வாழ்வைத் துறந்த நவீன முனிவர்கள் அவர்கள். ★

---

உலகில் தர்மம் குன்றும் வேளைகளில், தர்மத்தின் நிவர்த்திக்காக மகான்களும் மக்களும் பிரார்த்தனை செய்வதால், பரப்பிரம்மம் மனித உருவெடுத்து தர்மத்தை நிலைநாட்டும் என்று பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியுள்ளார். பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா இந்தக் கலியுகத்தில் தனிமனித தர்மம், குடும்ப தர்மம், சமூகத் தர்மம், உலக தர்மம் போன்ற சகல தர்மங்களும் சீர்குலைந்திருப்பதனால் பரப்பிரம்மம் அடுத்தடுத்து மூன்று தடவைகள் அவதரிக்க வேண்டியுள்ளதென்றும், இதையே சாயி அவதாரம் என்றும் கூறியுள்ளார். இம் மூன்றில் முதலாவது மகா நிலத்திலுள்ள ஷீரடியில் ஷீரடி சாயி பாபாவாக அவதாரம் நிகழ்ந்து 1918 இல் முடிவுற்றது. எட்டு வருடங்களுக்குப் பின்னர் 1926 இல் ஆந்திர மாநிலத்தில் உள்ள புட்டபர்த்தியில் இரண்டாவது அவதாரம் சத்தியசாயி பாபாவாக நிகழ்ந்து 2011 இல் முடிவுற்றது. மூன்றாவது அவதாரம் பிரேமசாயியாக கன்னட மாநிலத்தில் நிகழுமென்று பகவானே கூறியுள்ளார்.


பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா தான் அவதரித்த நாள் முதல் மகா சமாதி அடையும் வரை, மக்கள் எவ்வாறு வாழவேண்டுமென்று வாழ்ந்து காட்டியும், முப்பதாயிரத்துக்கு மேலான அருளுரைகளை வழங்கியும், வாகினித் தொடர் நூல்களை எழுதியும் கல்வி, மருத்துவ, குடிநீர் வழங்கல், கிராமிய சேவைத் திட்டங்களை வழங்கியும் மக்கள் எவ்வாறு வாழவேண்டுமென்று வழிகாட்டியுள்ளார். இந்தத் திட்டங்கள் மூலம், முக்கியமாக கல்வித் திட்டத்தின் மூலம் உயர்ந்த உன்னத மாற்றத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளார். இது இப்போது எங்கும் பரவலாகி வலிமையடைந்து வருகின்றது.

பகவான் சத்திய சாயிபாபா மகா சமாதியடைந்த [24.04.2011] ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதியை அவரது பக்தர்கள் மகோற்சவ ஆராதனையாகக் கொண்டாடுகின்றனர். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

சத்தியசாயி அவதாரம், ஒரு புதிய மதத்தை உண்டாக்குவதற்காக நிகழவில்லை. மக்களை அவரவர் பின்பற்றும் மதத்திலேயே எழுச்சியடையச் செய்வதே சாயி பாபாவின் நோக்கமாக அமைந்தது. ஆதலால் இவர் சர்வமதப் பிரியர் என்று அழைக்கப்பட்டார். அவர் வாழ்ந்த ''பிரசாந்தி நிலையம்'' என்ற ஆச்சிரமத்தில் பல உலக மாநாடுகள் நடந்தேறியுள்ளன. மேலும் அங்கே மத விழாக்களையும் சகல மக்களும் ஒன்றுகூடிக் கொண்டாடி வருகின்றனர்.

அவர் தூல சரீரத்தில் பிரசன்னமாயிருந்த காலத்தில், பல நாடுகளிலிருந்தும் மக்கள் பெருமளவில் கூடி,

வைத்திய கலாநிதி
இ.கணேசமூர்த்தி



# பகவானின் போதனைகள் மனித குலத்துக்கு பயனளிப்பவை

பகவானின் தரிசனத்தையும், ஆலோசனைகளையும், ஆசியையும் பெற்றார்கள். இன்றும் பலர் கூடி மகா சமாதி தரிசனம் பெற்று பல மத விழாக்களைக் கொண்டாடுகிறார்கள். பகவான் தான் 96 ஆண்டுகள் வரை தூல உடலில் இருப்பேன் என முன்னர் சொல்லியிருந்த போதும், 85 ஆவது வயதில் தூல தேகத்தை நீத்தது அடியார்கள் மத்தியில் ஏக்கத்தை உண்டாக்கியது. சத்தியசாயி பாபாவின் கூற்று சந்திர கலண்டரின் கணக்குப்படி சரியென்று இப்போது ஏற்றுக்கொண்டுள்ளார்கள். பகவான் தான் தனக்கு வேண்டிய விதத்தில், அவதார காலத்தை நீடிக்கவும், குறைக்கவும் தம்மால் முடியும் என்று பல தடவைகள் கூறியுள்ளார். தெய்வ சங்கல்பத்தை சாதாரண மனிதர்களான எம்மால் விமர்சிக்க முடியாது. அவர் தமது தூல சரீரத்தைச் சடுதியாக நீக்காமல் 27 நாள்கள் மருத்துவமனையில் தங்கியிருந்த பின்பே நீத்தார். இதனால் பக்தர்கள் விரக்தியடையாமல், அதிர்ச்சியடையாமல் உறுதியான மனநிலையை அடைய வாய்ப்பு ஏற்படுத்தினார். பக்தர்கள் உள்நோக்கும் ஆன்மிகப் பாதையில் செல்லத் தீவிரப்படுத்தினார்.

தெய்வம் மனித உருவில் இயங்கும்போது, தெய்வத்துவமும், மனிதத்துவமும் கலந்தே இருக்கும். இதனால் அவதாரத்தின் சக்தி சில வேளைகளில் வரையறுக்கப்படுகின்றது. ஆனால் உடலுருவம் நீங்கியதும், வரையறையற்ற, எங்கும் வியாபிக்கும் தன்மை வெளிப்படுகின்றது. இதுவே பக்தர்களின் வீடுகளிலுள்ள தெய்வப் படங்களிலிருந்து விபூதி சொரிவதும், அமிர்தம் ஊறுவதுமான அதிசயங்கள். இவை மட்டுமன்றி, தனது பக்தர்கள் பலரது கனவில் தோன்றி ஆலோசனைகள், ஆசீர்வாதங்கள் வழங்கி வருகின்றார். சிலருக்கு உடல் உருவத்திலேயே தென்பட்டுமுள்ளார்.

உருவ வழிபாட்டிலிருந்து அருவநிலை உணர்வை அடைவதே ஆன்மிக வளர்ச்சியாகும். பகவானின் நாமம், போதனை, ஸ்தாபனங்கள் நீண்ட காலத்துக்கு மனித இனத்தை உய்விக்கும் என்பதில் ஐயமில்லை. நமது பணி அவரின் நோக்கத்தையும், எமது நோக்கத்தையும் அடைவதேயாகும். அவரின் ஆசியையும் அருளையும் வேண்டிப் பிரார்த்திப்போம். ★

"நான் பாதுகாப்பாக
இருப்பதாக
உணர வேண்டும்"

பிரியந்தி

உங்களை எங்களால் உணரமுடிகிறது.

Amãna Takaful
மனிதாபிமானமுள்ளது.


காப்புறுதியின் சிறப்பினைக் கண்டறியுங்கள். சிறந்த முன்னெப்போதும் இல்லாத கொள்கைகளுடன் காப்புறுதியின் சிறந்த பெறுமதிகளை அனுபவியுங்கள்.

உங்கள் அனைத்து காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள், 011 750 1000 அல்லது www.takaful.lk உடன் இணையுங்கள்.

Amãna Takaful
Insurance Redefined

(C9225)

## ஐசிங் கேக்கில் ராஜினாமா கடிதம்



அலுவலகத்திலிருந்து விலகும் தருணம் இனிப்பாக அமைய வேண்டும் என்பதற்காக நபர் ஒருவர் தனது ராஜினாமா கடிதத்தை ஐசிங் கேக்கில் எழுதிக் கொடுத்துள்ளார்.

லண்டனைச் சேர்ந்த கிரிஸ் ஹோல்மஸ் (வயது 31) என்ற நபரே இவ்வாறு தனது ராஜினாமா கடிதத்தை கேக்கில் வடிவமைத்துக் கொடுத்துள்ளார்.

லண்டன், ஸ்டேன்ஸ்டட் விமான நிலையத்தில் தொழில் புரியும் இந்நபர் தான் வடிவமைத்த விசேட ராஜிநாமா கடிதத்தை புகைப்படமெடுத்து அதனை இணையத்தளத்திலும் வெளியிட்டுள்ளார்.

தனது தொழிலை ராஜிநாமா செய்துவிட்டு வெதுப்பகம் ஒன்றை அமைக்கப்போவதாக அந்தநபர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'நான் இந்த கேக்கை எனது பிரதி முகாமையாள ருக்காக வடிவமைத்தேன். அவர் இந்த கேக்கை பார்த்தவுடன் மிகவும் ஆச்சரியமடைந்திருப்பார் என்று நம்புகிறேன்' என கிரிஸ் ஹோல்மஸ் தெரிவித் துள்ளார்.

அந்த ராஜினாமா கடிதம் ஒரு கட்டுரையைப்போல் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நான் விலகும் தருணம் ஒவ்வொருவரது உதடுகளும் இனிப்பை ருசித்திருக்க வேண்டுமென நான் நம்புகிறேன் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாடுகடந்த உறவுகளிடம் உங்களைக்
கொண்டு செல்லும் Hutch IDD இப்பொழுது
செக்கனுக்கு
2 சதம்



உள்நாட்டு மற்றும் IDD அழைப்புகளை
செக்கனுக்கு 2 சதத்தில் அனுபவித்திடுங்கள்!

- ரூ. 298 ரீலோட் செய்து இச் சலுகையை அனுபவித்திடுங்கள்.
- ரீலோட் செய்து 30 நாட்களுக்கு செல்லுபடியாகும்.

(C9224)

www.hutch.lk
/hutchsrilanka
Call 1788

3G
HUTCh




# நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலய
# தேர்த் திருவிழா சிறப்புமலர் - 24.04.2013



## விக்கினந் தீர்க்கும் விநாயகனே இன்று தேரேறி வருக!

சரித்திரப் பிரசித்தி பெற்ற கைலாச பிள்ளையார் கோயிலில் இன்று தேர்த் திருவிழா அழகிய சித்திரத் தேரிலே ஐங்கரன் ஆரோகணித்து வரும் அற்புதக் காட்சி ஆனந்தக் கோலாகலமானது. விக்கினந் தீர்க்கும் விநாயகர் இன்று அடியார் படுந்துயரைக் களைய இன்று தேரேறி வருகின்றார். அருள்மயமான இந்த நல்ல நாளில் ஆனைமுகனின் அருள்பெற அடியார்கள் இன்று இங்கே குழுமி நின்று தேர்வடம் பிடித்து இழுக்கும் அருட்காட்சி மனதைப் பக்திமயமாக்கும். வினைத்தீர்க்கும் விநாயகர் அடியார் பெருமக்கள் அனைவருக்கும் அருள் புரிந்து நல்வாழ்வை நல்க வேண்டும் என நல்லை குருமணியின் பாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்க வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**- நல்லை ஆதீன குரு முதல்வர்.**

வசந்த மண்டபப் பூசை - காலை 7.30 மணிக்கு
சுவாமி தேரில் ஆரோஹணம் செய்தல் - காலை 9.15 மணிக்கு
சுவாமி தேரில் இருந்து
அவரோஹணம் செய்தல் - முற்பகல் 10.15 மணிக்கு
வசந்த மண்டப விசேட பூசை - முற்பகல் 10.45 மணிக்கு
நண்பகல் அன்னதானம்
மறுநாள் தீர்த்த உற்சவம் காலை 9 மணி.


தேரேறித் திருவீதி வரும் கயிலாய பிள்ளையாரே
நீரேறும் விழிகளுடன் ஆடும் எங்களுக்கு
சீரான வாழ்வுதனைத் தரணியில் தருவாயே.

க.கு.கந்தையாப்பிள்ளை அன்சன்ஸ்
318, மருத்துவமனைவீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

LINGAM & CO
General Hardware and Metal Mechants.
No.48, Stanley Road, Jaffna.
T.P. 021 222 2133

யாழ்.நகர மத்தியில்
"உதயன் விருந்தினர் விடுதி"




குழுமப் பதிவுகளுக்கு விசேட கழிவு உண்டு.


இல.... சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
021 222 2330
021 567 7603


(C/8535)(2.6)

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் அகவை 60இன் நினைவுகளும்

## அமரர் வேலுப்பிள்ளை இராஜரட்ணம்

### (R.B புக்கிங்சென்ரர் உரிமையாளர்)



அப்பா எம்மைவிட்டு நீங்கள் பிரிந்து ஒன்பதாம் ஆண்டிலே உங்கள் 60ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்களை எம் மனங்களில் சொல்லி மாளுகின்றோம்.

ஆயிரம் சொந்தங்கள் அவனியில்
வந்தபோதும் அப்பா
உங்கள் சொந்தமின்றி அல்லலுறுகின்றோம்
ஆயிரம் ஜென்மங்கள் கடந்தபோதும் அப்பா
உங்களை நாம் என்றும் மறவோம்
தந்தைக்கு இலக்கணம் வகுத்தவரே
எம் சிந்தையில் உம்மை வைத்து
துதிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில் 24.04.1953

விண்ணில் 08.04.2004

**மனைவி, மக்கள், மருமக்கள்**

# ஆஸி. செல்ல முற்பட்டு கைதானோர் பிணையில்

படகில் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட போது கைது செய்யப்பட்ட 80 பேரில் 79 பேர் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

படகில் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 13 பெண் கள், 24 குழந்தைகள் உட்பட சுமார் 80 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடற்படையினரால் பருத்தித் துறைக் கடற்பரப்பில் வைத் துக் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட அனை வரும் பருத்தித்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர்களில் 79 பேர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை, மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் 79 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா மற்றும் இரு சரீரப் பிணையிலும் செல்ல அனுமதி அளித்தார். இவர்கள் ஒவ்வொரு மாத இறுதி வியாழக்கிழமைகளிலும் நீதி மன்றத்துக்கு வந்து பதிவை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட் டார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் நபர் நீதி மன்றில் முற் படுத்தப்படவில்லை. இவர் குற்றத்தடுப்புப் பொலிஸாரின் விசாரணைக்காக அனுப் பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-16-400-8)

## மரண அறிவித்தல்

### திருமதி கதிர்காமு புவனேஸ்வரி

(கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது)

(சங் 116:15)



பாரதிவீதி, பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு புவனேஸ்வரி நேற்று முன்தினம் (22.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமுவின் அன்பு மனைவியும், கருணாவதி, பாஸ்கரன், வசந்தன், மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தாயும், பாஸ்கரன், இராஜேஸ்வரி, அனித்தா சுப்பிரமணியம் ஆகியோரின் மாமியாரும், சுஜீபன், சுபஸ் ரீகன், எஸ்ரோன், யாபேஸ், திஸானா, கபிஷான், அபிஷா, அஸ்பனா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர் களான, இரத்தினம், பூமணி, பிள்ளையார், கோதை கந்த சாமி மற்றும் செல்ல முத்து ஆகியோரின் அன்புச் சகோதரி யும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.04.2013) புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் அச்சுவேலி பொது மயானத்தில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பாரதிவீதி, பத்தமேனி,
அச்சுவேலி.

பாஸ்கரன் (மகன்-சுவிஸ்),
மஞ்சுளா (மகள்-சுவிஸ்).

(336347)(5,6,7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## வான் விற்பனைக்கு

மகேந்திரா மக்சிமோர் "படி" விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 0777066487 (யாழ்ப்பாணம்)

## சாரதி தேவை

விநியோகத்துக்கு பயன்படும் 'படி' ரக வாகனம் செலுத்த சாரதி தேவை.

தொடர்பு: 0773386222 (36343) (10,6,7)

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் மத்தி, வெள்ளுருவைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நல்ல சூழலில் ஏழு பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776622106 (36346) (10,6,7)

## மரண அறிவித்தல்

### திருமதி முத்துமலர் திருஞானசோதி

(முத்து அக்கா- ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்.)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் அனேக ஆண்டுகளாக இணுவில் மக்லியோட் வைத்தியசாலையிலும், மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தயசாலையிலும் தாதியாகப் பணியாற்றிய திருமதி முத்துமலர் திருஞானசோதி நேற்று(23.04.2013) செவ்வாய்க் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.04.2013) புதன்கிழமை பி.ப. 4.00மணிக்கு மக்லியோட் வைத்தியசாலை வளாகத்தில் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மக்லியோட் வைத்தியசாலை,
இணுவில்.
021 224 1569

Dr. v. டேவிற் இரட்ணநாதன்,
வைத்தியமேலதிகாரி, மக்லியோட்
வைத்தியசாலை, இணுவில்.

## இதய அஞ்சலி



எமது கல்லூரி முன்னாள் ஆசிரியர் **இராமநாதன்** அவர்களின் அன்பு மனைவி

திருமதி

### இரத்தினபூபதி இராமநாதன்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு கவலையடைந்தோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்.**

(36348) (10,6,7)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சின்னத்துரை



உடுவிலைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவனை வசிப்பிடமாகவும் கனடாவில் வாழ்ந்து வந்தவருமான திருமதி இராசம்மா சின்னத்துரை கடந்த (11.04.2013) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா- பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான இரத்தினசோதி(பெரியராசு), சிவசோதி மற்றும் பொற்சோதி (கனடா), பரஞ்சோதி (கனடா), ஜெகசோதி (ஜெயம்-கொழும்பு), ஞானசோதி(ஞானம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பேரம்பலதாஸ் (கனடா), சாந்தினி, ரமணிபரி (கனடா), நிறஞ்சலா (கொழும்பு), கௌதமி ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, செல்வராணி மற்றும் பாக்கியம் (சுன்னாகம்), தங்கரத்தினம் (கனடா), பாலசுப்பிரமணியம் (உடுவில்), பர்வதம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசிகலா, குமரேசன், குகன், ஜசிந்தன், கயந்தன், றோஷினி, சாருணிக்கா, கீர்த்தனா, சஞ்சீபன், சாமினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவன் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் நாளை(25.04.2013) வியாழக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(சி/9392)( (5.6.7)

தகவல்: குடும்பத்தினர்.

ஜெயம்-077 731 6452, ஞானம்-077 752 0332


HONDA
THE QUALITY
அன்றிலிருந்து இன்றுவரை
நம்பிக்கைக்குரியது!
விலை ரூபா 139,732+Vat
HONDA


திடநம்பிக்கையுடனான முதலீட்டிற்கு...
பங்குச் சந்தையில் முதலீடு செய்ய சரியான முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
முதலீட்டுக்கான அறிவு
யாழ்ப்பாணம்
2013 ஏப்ரல் 27 மற்றும்
மே 04, 11, 18, 25 ஆம் திகதிகளில்
மு.ப 09.00 முதல் நண்பகல் 12.00 வரை
பங்கு முதலீடு பற்றிய அறிமுகம்
நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல்
பங்குகளைத் தெரிவு செய்தலும் தீர்மானமெடுத்தலும்
பங்குகளில் முதலீடு செய்தல்
மொழி மூலம்: தமிழ்
பதிவுக் கட்டணம் ரூபா. 500/-
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:
021-2221455, 0777-822014
CSE
COLOMBO STOCK EXCHANGE


HF-DAWN
PUBLIC'S NEW TRANSPORT
• 100cc
• 100cc
Splendor
Trusted by millions
• 100cc
• 100cc
HERO
சித்திரைப் புதுவருடத்திற்கு
ஹீரோ உந்துருளியுடன்
TITAN
கைக்கடிகாரம்
இலவசம்
• 100cc
GLAMOUR
• 125cc
SIMPLY SUPER
• 125cc
• 150cc
BEYOND THE SAID AND THE DONE.
• 150cc
• 150cc
• 225cc
R.G.ட்ரேடர்ஸ் உந்துருளிகளுக்கான அபான்ஸின் அங்கீகாரம் பெற்ற முகவர்
யாழ்ப்பாணம் – இல: 285, 287 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2226185 • யாழ்ப்பாணம் -பிலஷர் காட்சியறை இல: 291,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2227667 • நெல்லியடி – இல: 84, பருத்தித்துறை வீதி, நெல்லியடி: 021 2262585
சாவகச்சேரி – இல: 5A, கண்டி வீதி, சாவகச்சேரி: 0212270185 நாவற்குளி – இல:50, கண்டி வீதி, நாவற்குளி சந்தி, நாவற்குளி
சுன்னாகம் – 12, 14, KKS வீதி, சுன்னாகம்: 021 2241985 • கிளிநொச்சி – கரடிபோக்கு சந்தி, A9 வீதி,
கிளிநொச்சி: 021 2280185 • பளை – இல: A9 வீதி, பளை: 0777 340056
Abans